# சங்கறுக்கும் எங்கள் குலம்




Y73P.
N82

ஜெ. பாலன்



# சங்கறுக்கும் எங்கள் குலம்





ஆசிரியர்

ஜெ.பாலன்

முதல் பதிப்பு: 1982 மார்ச்-6

114649

உரிமை-ஆசிரியருக்கே

Y73.P
1182



நெய்தல் பதிப்பகம்

30. வெங்கடாசல நாயக்கன் மூன்றாவது தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—600 005.



மாண்புமிகு தமிழக முதல்வருடன் நூலாசிரியர்



மாண்புமிகு. டாக்டர் நாவலருடன் நூலாசிரியர்



மாண்புமிகு. சி. பொன்னையன்

அவர்களுடன் நூலாசிரியர்



மாண்புமிகு. ப. குழந்தைவேலு

அவர்களுடன் நூலாசிரியர்



திருமிகு. ஜேப்பியார் அவர்களுடன் நூலாசிரியர்



தென் சென்னை உள்நாட்டு மீனவர்
கூட்டுறவு சங்க இயக்குநர்கள்
மற்றும் மேலாளர் அவர்களுடன் நூலாசிரியர்

# பரிவுரை

நீதிபதி கு. சண்முகம் — சென்னை

தமிழ்நாடு உயர்நீதி மன்றம். — 6-2-82

புதியதோர் பாராட்டுக்குரிய படைப்பு. மீனவ சமுதாயத்தின் தொன்மை-பெருமையும், புகழையும் நினைவுபடுத்தி அத்தகைய சிறப்பினை- உன்னத நிலையினை மீண்டும் அடைய, கருத்து வேறுபாடுகள் இருப்பினும், மீனவர்களிடையே தன்னலமற்ற ஒற்றுமை அவசியம் என்பதை வன்மையாக வலியுறுத்துவதோடு, பொங்கி வரும் தன் தூயஉள்ளக் கிடக்கையினையும் ஆத்மார்த்தமாக வெளிப்படுத்தியிருக்கிறார் இந்நூலாசிரியர்.

அதே தருணத்தில் இலக்கியம்- மீன் வளம் பற்றிய சிற்சில புள்ளி விவரங்களையும், மீன் உணவின் வளத்தையும், வெளிநாட்டுச் செலாவணி ஈட்டும் பெருமையினையும், மேலும் பொது அறிவுக்கான பற்பல 'குறிப்பு'களையும், சொந்தக் கருத்துகளையும் சீரிய முறையில் கோர்த்து இப்புத்தகத்தை வாசிப்பவர்களுக்கு சோர்வு தராத வகையில் அமைத்த பெருமை இவ்வாசிரியரைச் சாரும் என்பது என் கருத்து.

இம்மாதிரி முயற்சியில் ஆசிரியர் தொடர்ந்து செயல்படுவார் என்று நம்புகிறேன்.

இவண்,

ஜஸ்டிஸ் கு. சண்முகம்





காணிக்கை

# என்னுரை

எனது உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகளை மக்களுக்கு சொல்லியாக வேண்டும் என்ற அடிப்படையில் இந்த புத்தகத்தை எழுத முனைந்தேன்.

எனது தகப்பனார் என்னை நல்ல முறையில் படிக்க வைத்து பட்டதாரியாக உருவாக்க நினைத்தார். அது ஏனோ முடியாமல் போயிற்று. ஆகவே அந்த அன்பு தெய்வத்திற்கு இந்த சிறு நூலை காணிக்கையாக்குகிறேன்.

நான் 1940 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ஆம் நாள் செங்கை மாவட்டத்தில் பெரிய நீலங்கரைகுப்பம் என்ற கிராமத்தில் ஜெயராம் செட்டியாருக்கும், மீனாட்சியம்மாளுக்கும் பிறந்தேன்.

நான் இ. எஸ். எல். சி. தேர்விற்கு அனுப்பப்பட்டேன். ஆனால் ஆங்கிலத்தில் தேர்வு பெறாததால் படிப்பை இடையிலேயே முடித்துக் கொண்டேன்.

நான் பல்வேறு தனியார் நிறுவனங்களிலும், அரசு நிறுவனங்களிலும் பணியாற்றி இருக்கின்றேன். ஆனால் எந்த நிறுவனங்களிலும் தொடர்ந்து பணியாற்றியது இல்லை. நான் சிறு வயது முதற்கொண்டே, பொதுத்தொண்டில் நாட்டங்கொண்டேன். அப்போது என் தகப்பனார் ஊரில் பெரியதனக்காரராக இருந்த காரணத்தால் அவருடன் கிராம பஞ்சாயத்துக்குச் சென்று வரலானேன். அந்த நேரங்களில் பல புதுமையான அனுபவங்களை கற்றுக் கொண்டேன். என் தந்தை வெளியூர்களுக்குச் சென்றிருக்கும் காலங்களில் சிறு சிறு பூசல்களை தீர்த்து வைப்பேன். 1960ஆம் ஆண்டு முதல் எங்கள் கிராம பஞ்சாயத்தை நடத்தி வந்தேன் 1962-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக்கழகத்தின் நீலங்கரை

அலையில் அலைகின்றோம்!
அவதியில் நனைகின்றோம்!

ிளைச் செயலராக பணியாற்றினேன். அப்பொழுது சென்னை-திருவல்லிக்கேணி, திரு. ஏ. ராஜு செட்டியார் மகள் சாந்தாவை திருமணம் செய்து கொண்டேன். 1965-ஆம் ஆண்டில் பெரிய நீலங்கரைக்குப்பம் மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு செயலாளராக பொறுப்பேற்று செம்மையாக நடத்தி வந்தேன். 1967-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத்தேர்தலில் பரங்கிமலை தொகுதியில் புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் ஏ. எல். இரகுபதியை எதிர்த்து நின்ற போது, அரும்பாடுபட்டு உழைத்து அண்ணனுக்கு வெற்றியை தேடித் தந்தவர்களில் நானும் ஒருவன். இதனால் அண்ணனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிட்டியது.

1967-68 ஆம் ஆண்டு சென்னை செங்கை மீனவர் கூட்டுறவு கூட்டு சங்கம் என்ற அமைப்பிற்கு துணைத்தலைவராகதேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது, காசிமேடு திரு கபடராஜு அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரும், நானும், தொடர்ந்து மூன்றாண்டுகள் பணியாற்றினோம்.

1968-ல் தமிழக அரசுமூலம்விசைப்படகு கிடைத்தது. அதைப் கொண்டு தொழில் செய்யும் பொருட்டு சென்னை வந்தேன். திருவல்லிக்கேணியில் தங்கிக் கொண்டு விசைப்படகின் மூலம் மீன் பிடித்தொழில் செய்தேன்.

1972-ல் புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்ட புதிய இயக்கமாகிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவித்த நேரத்தில், நானும் உறுப்பினராகச்சேர்ந்து பணியாற்றினேன். அந்த நேரத்தில்தான் திருவல்லிக்கேணிதொகுதி அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்டேன்.

1975-ஆம் ஆண்டு தென் சென்னை நாடாளுமன்ற கழக செயலராக பொறுப்பேற்றேன்.

1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய உறுப்பினராக பொறுப்பேற்று இன்று வரை நல்ல முறையில் பணியாற்றி வருகின்றேன்.

1980-ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி தொகுதி செயலாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றேன்.

---

இயற்கையை எதிர்த்துப் போராடுகின்றோம்!
இன்பத்தை எண்ணி தினம் ஏங்குகின்றோம்!

1980 டிசம்பர் 3 ஆம் நாள் என் தந்தை காலமானார். இருதிச்சடங்கில் மாண்பு மிகு தமிழக முதல்வரும், வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு. எஸ். டி. எஸ். அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் மாண்பு மிகு எஸ். இராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

நாகரிகத்திலும், பொருளாதாரத்திலும் தாழ்ந்து கிடக்கும் என் மீனவ சமுதாயத்தைப் பார்த்து வேதனைப்படாத நாள் இல்லை. இந்த இனம் முன்னேற என்னால் ஆன பல கருத்துக்களைச்சொல்லி வருகின்றேன். இதில் கருத்து வேறுபாடுகளும், அரசியல் வேறுபாடுகளும் எழத்தான் செய்தன.

இறுதியில், தாழ்ந்து விட்ட என் சமுதாயத்தைப் பற்றி, ''சங்கமுத்த என் முன்னோர்கள் பற்றி, சமுதாய வீதியில் தலை தூக்கி நிற்கும், சில பெரிய மனிதர்களைப் பற்றி நாங்களும் கல்வி பெற்று நல்வாழ்வு வாழ்வோம் என்று கூறும் எங்கள் இன பட்ட தாரிகளைப் பற்றி-இச்சிறு நூலில் சொல்லி உள்ளேன். என்னைப் பெற்று ஆளாக்கி உலகறியச் செய்த என் பெற்றோர்களுக்கு இந்நூலை-

இதய காணிக்கையாக்குகிறேன்.

6-3-1982.
திருவல்லிக்கேணி.

தங்கள் தோழன்,
ஜெ.பாலன்.

# நெய்தல் நிலக் குறிப்பு

1. நெய்தல் நிலத் தலைவர்: சேர்ப்பன், புலம்பன், செட்டியார், நாயக்கர், நாட்டாண்மை, துறைவன், சேர்வை, மச்சோடோ முக்குவர், பெர்னாண்டோ.
2. நெய்தல் நிலத் தலைவி: பரத்தியர், நுளைச்சியர்.
3. நெய்தல் நிலக் குடிகள்: பரவர், பரத்தியர், நுளையர், மீனவர், நாட்டார்கள், நுளைச்சியர், அளவர், அளத்தியர், வலையர் வலைஞ்சியர், சலவர், திமிலர், கடலர், உமணர், பட்டணவர். செம்படவர், பரதவ இராஜகுலம்.
4. நெய்தல் நிலத் தெய்வம்: வருணன்
5. நெய்தல் நில ஊர்கள்: பாக்கம், பட்டினம், பதி.
6. நெய்தல் நில மலர்கள்: தாழை, நீர் முள்ளி, அடம்பு நெய்தற் பூ.
7. நெய்தல் நில மரம்: கண்டல், புன்னை, ஞாழல், கொன்றை.
8. நெய்தல் நிலப் பறவை: கடல் காகம்
9. நெய்தல் நில விலங்கு: சுறா மீன், திமிங்கலம், வழுவன்

---

இளமையைக் கடலில் இறைக்கின்றோம்!
முதுமையில் வறுமையை அணைக்கின்றோம்!

---

10. நெய்தல் நில இசைக் கருவிகள் : மீன் கோட்பறை, பம்பை, விளரி, யாழ்.
11. நெய்தல் நிலப்பண்: : செவ்வழி
12. நெய்தல் நில நீர் : உவர் நீர்க் கேணி, கவர் நீர்.
13, உணவு : உப்பும்-மீனும், அதனால் விற்றுப் பெற்ற பொருள்களும்
14. தொழில் : மீன் பிடித்தல், மீன் விற்றல், உப்பு எடுத்தல், உப்பு விற்றல்.
15, விளையாட்டும்-பொழுது போக்கும் : கடல் ஆடல்.

## அகத்தில் நெய்தல்

• அகநானூற்றில் உள்ள நானூறு பாக்களுள் ஒவ்வொரு பத்தாம் பாவும் நெய்தல் 'பா'வாகும்.

## குறுந்தொகையில் நெய்தல்

குறுந்தொகையில் உள்ள 400 பாக்களில் 71-பாக்கள் நெய்தல் பாக்களாகும்.

நெய்தல் நிலத்தின் மற்றொரு பெயர்: 'நீர்வேலி'



# மீனவனின் தோற்றம்

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றிய, மூத்தகுடி"—தமிழ்க்குடி ஆகும். தமிழன் என்ற இனத்தில் எத்தனை பிரிவினைகள்? எத்தனை வேறுபாடுகள்? இவை எப்படி, எப்பொழுது உண்டாயின?

விலங்கிலிருந்து மனிதன் வந்தான் என்ற கருத்தை விஞ்ஞான ரீதியாக நாம் ஒத்துக் கொள்கின்றோம். அப்படி வந்த மனிதன் தனக்கு வேண்டிய உணவைமிருகங்களைவேட்டையாடியே பச்சையாகத்தின்று வந்தான். பின் நீரில் மீன்களையும் வேட்டையாட ஆரம்பிக்கின்றான். இப்படி நீரில் மீன்களை வேட்டையாட ஆரம்பித்ததும், மனிதர்களில் இரண்டு இனம் உண்டாகின்றது. அவை (1) நிலத்தில் வேட்டையாடுபவன். (2) நீரில் வேட்டையாடுபவன்.

இந்த இரண்டு இனத்திலிருந்துதான் மற்ற பிரிவும் உண்டாகி இருக்கக் கூடும் என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்து.

மிருகங்களை வேட்டையாடச் சென்றவனுக்கு போதிய மிருகங்களை வேட்டையாட முடியாமல் போயிருக்கும் காலங்களில் மீன் வேட்டை அதிகமாக கிடைத்தவனிடம், மீனை வாங்கி உணவிற்கு பயன்படுத்தி இருப்பான். மீன் வேட்டை கிடைக்காத நேரங்களில், மிருகங்களை அதிகம் வேட்டையாடியவனிடம் வாங்கி

நமக்குள் ஒற்றுமை உண்டாக வேண்டும்!
நாடு அதைக் கண்டாக வேண்டும்!

உணவிற்காகப் பயன் படுத்தி இருப்பான். இப்படித்தான் பண்ட மாற்று முறை உண்டாகி இருக்க வேண்டும்.

பின் அவன் நிலையான ஒரு இடத்தில் தங்கி வசிக்க ஆரம்பித்த பொழுது ஆற்றங்கரை ஓரங்களையே தேர்ந்தெடுத்துள்ளான் என்பது-பழம் பெரும் நாகரீகங்களைப் பற்றிப் படிக்கும் பொழுது நமக்கு தெரிய வருகின்றது. மொகஞ்சதாரா நாகரீகத்தைப் பற்றி பாக்கிஸ்தானிய புதைப் பொருள் ஆராய்ச்சியாளார்கள்-எழுதியுள்ள புத்தகத்தில் ''மொகஞ்சதாரா'' என்ற நகரத்திற்கு அருகில் ஓடும் ''இண்டஸ்'' என்ற ஆற்றுப்பகுதியில் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த மீனவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களே ''மொகஞ்சதாரா'' நாகரீகத்தின் சொந்தக்காரர்கள் என்று கூறுகின்றார்கள். இப்படி ஆற்றங்கரையை தேர்ந்தெடுத்தவன்-ஆற்றில் மீன் பிடிப்பதை தொழிலாகவே செய்து வந்திருக்கிறான். பின் அங்கு தானே விளையும் உப்பின் பயனை உணர்ந்து-தான் மீன் பிடிக்கும் கலத்திலேயே ஆற்றின் கரையில் உள்ள கிராமங்களில் பண்டமாற்று முறையில், உப்பைக் கொடுத்து விட்டு அங்கு கிடைக்கும் பொருள்களை கொண்டு வருகின்றான்.

இப்படி, படிப்படியாக உயர்ந்து நாகரீகம் உள்ளமனிதனா வாழ்ந்தவன் பணத்தின் பயனை உணர்ந்து-பணத்தை சேர்த்து நாகரீக உலகில் பெரும் அந்தஸ்தைப் பெற நினைக்கின்றான். அதனால் அவன் பொருள் படைத்த வேறு தொழில் செய்பவரிடம் பெண் எடுத்து இவன் ஒரு புதிய இனத்தை தோற்றுவிக்கின்றான். இப்படித்தான் பல பிரிவினைகள் வளர்ந்திருக்க முடியும்.

பணம் படைத்த மனிதன் வாணிபம் செய்வதையே தொழிலாகக் கொண்டு-அவன் ஒரு பிரிவாக பிரிந்து விடுகின்றான். அவன் தன் முன்னோர்கள் மீனவ இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது காலப் போக்கில் மறைக்கப்படுகின்றது-மறந்தும் விடுகின்றான்.

மீனவ இனத்தில் இருந்து தான் பல பிரிவுகள்தோன்றியிருக்க முடியும் என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன, மீனவ இனத்தில் தான், கரையாளர்கள், செட்டியார், முதலியார், நாயக்கர், பிள்ளை, இப்படிப் பல பிரிவுகள் இருக்கின்றன. அதுபோல், மீனவ இனத்தில்தான் இந்து. முஸ்லீம்,

---

முத்துக் குளிப்பது நம் இனமே! — வறுமையில்
செத்துத் தொலைவதும் நம் இனமே!

---

கிறிஸ்தவர் போன்றபல மதத்தினர் இருக்கின்றனர். இவை அனைத்தையும் நாம் காண்கின்ற பொழுது நிச்சயமாக நாகரீகத்தை முதல் முதலில் பல நாடுகளுடன் தொடர்பு கொண்டு அறிமுகப்படுத்தியது நம் இனம்தான்தான் என்று உறுதியாக் கூறலாம்.

இப்படி நாகரீகத்தில் உயர்ந்து விளங்கிய நாம்இன்றுதாழ்ந்து தன் நிலை உணராமல் மற்ற மக்களுடன் தொடர்பு கொள்ள முடியாமல் இருக்கின்றோம் என்பதை எண்ணுகின்ற பொழுது நாம் என்றாவது ஒரு நாள் தாழ்ந்த நிலை மாறி நாட்டில் நல்வாழ்வு வாழ மாட்டோமா என்ற ஏக்கம்தான் வருகின்றது.



# கடலும்-மீனும்

கடலும் ஒரு கோணத்தில் நாம் நிலம் என்று தான் சொல்லவேண்டும். இல்லை, நிலத்திலும் அதிக வளமையுடைய கடல் என்று தான் இயம்ப வேண்டும். இன்றைய விஞ்ஞான உலகத்திற்கு உதவும் உணவுப் பொருட்கள், மூலப் பொருட்கள், கனிப்பொருட்கள், எண்ணெய்ப் பொருட்கள் பலவற்றை எண்ணற்ற முறையில் கடல் இயைந்தளிக்கிறது. மனித இனம் மகிழ்ச்சியோடு அணிந்திடக் கூடிய அணிகள் பலவற்றை (முத்து பவளம், சங்கு) அள்ளி அள்ளித் தருகின்றது. நிலத்தில் உள்ளோர், நித்தமும் உண்டாக்கும் அசுத்த நீரைத்தான் பெற்று நிலத்தில் பிணியின் வாடை வராமல் தடைசெய்கிறது.

அயல்நாடுகளுடன் அன்றாடம் உறவாடும் பாலமாகவும், அவர்களின் அன்பளிப்புகளையும், அத்தியாவசியப் பொருட்களையும், அணிகலன்களையும், ஆயுதங்களையும் அலுங்காமல் குலுங்காமல் கொண்டுசேர்க்க உதவும் சாலையாகவும்பயன்படுகிறது. மனித குலத்திற்குத் தேவையான மீன் வகைகளை வேண்டுமளவு தினமும் தருகிறது. இந்த உலகம் ஆண்டு தோறும் மூன்று கோடி டன் புரோட்டீனை கடலிலிருந்து பெறுகிறது.

''முப்பது கோடி கன சதுர மைல் அளவுள்ள கடலில் கணக்கிட முடியாத அளவு மீன்கள் வாழ்க்கை நடத்துகின்றன. ''கடலில் உள்ள மீன்களில் ஒரு சதவிகிதம்தான் இந்த நில மக்கள் பிடித்துப் பயன்படுத்துகின்றனர்'' என்று படித்தோர்உரைக்கின்றனர். கடல் மட்டும் இல்லையென்றால் இந்த உலகில் காற்றேது? மழையேது மனிதர்கள் தான் ஏது? இயற்கையும் தன் இயல்புகளை இழந்து

---

**நாகரீகம் கண்டது நாம்தான் முதலில்!—தினம்
நசுங்கிச் சாவது ஏன்தான் உலகில்?**

விடும். இப்படி இருந்தும் கடல் இன்னும் முற்றிலும் ஆராயப் படாத அபூர்வப் பெட்டகமாக இருக்கிறது.

நிலத்தில் இருக்கும் பிராணிகள் போல, கடலிலும் கடல் நாய், கடல் குதிரை, கடல் முயல், கடல் சிங்கம், கடல் தேள், கடல் பாம்பு, கடல் பன்றி போன்றவைகள் வாழ்கின்றன. நிலத்தில் இருப்பதைப்போல் நிலப் பகுதிகள் கடலிலும் இருக்கின்றன. கல், நிலம், மலை நிலம், சேற்று நிலம், பாறை நிலம், பாலை நிலம் முதலியவைகள் உள்ளன.

இப்படிப்பட்ட கடல் நீருக்கு இயல்பான நிறமில்லை. கடலினுள் செல்லும் சூரிய ஒளி கடலினுள் மிதந்து கொண்டிருக்கும் சிறு சிறு பொருள்களின் மேல் பட்டுப் பிரதிபலித்து மீண்டும் மேல் நோக்கித் திரும்புகிறது. அவ்வாறு திரும்பும் போது ஒளியின் மஞ்சள்- சிவப்புக் கதிர்களே கடல் மேற்பரப்பு வரையில் வந்து சேர முடியும். ஆகவே தான் கடல் நீர் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது. ஆனால் நீரில் தாதுப் பொருள்கள் கலந்திருந்தால் மஞ்சள்-சிவப்புக் கதிர்களும் பிரதிபலிக்கக் கூடும். அத்தகைய இடங்களில் கடல் நீர் பசுமைநிறமாக இருக்கும்.

தனக்குவமை இல்லாத, பணச் சுரங்கமாம் அன்னை கடலை அழகு தமிழில்,

அத்தி. அம்பரம், அம்புராசி. அலை, அளக்கர், ஆழி, ஆர்கலி, உததி, உப்பு, உவரி, ஓதம், காலை, கார்கோள், கார்மலி, சக்கரம், சமுத்திரம், சலதி, சலநதி, சாகரம், சிந்து, பரவை, பள்ளம், பவ்வை, பாவை, பாராவாரம், புணரி, பெருநீர், பௌவனம், மகராலயம், முந்நீர், வலயம், வாருணம், வாரம், வாரி, வாரிதி, வீரை, வெள்ளம், வேலா, வேலை, நேமி என்றெல்லாம் அழைப்பர்.

இக்கடலில் மீன் பிடிக்கப் பயன்படுத்தும் கலன்கள்:-

அம்பி, ஓடுமரம், கலன், கப்பல், கட்டுமரம், கோலாமரம், தங்கும் மதலை, திமில், தொன்னை, தோணி, பஃறி, படகு, பரிசில், பாரதி, பாறு, பெரியவலைப்படகு, போதம், புனை. மேதகு நீர்மேல், வங்கம், வத்தை, வல்லம், நாவாய், யானம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது.

---

**தண்ணீரில் வாழ்கின்றோம்! — தினம்**
**கண்ணீரில் சாகின்றோம்!**

---

# உலகக் கடல்கள்

உலகக் கடல்களை பல பெயரில் அழைக்கின்றனர்.

1. அசாவ் கடல்
2. அயோனிக் கடல்
3. அரபிக் கடல்
4. ஆரல் கடல்
5. ஈஜியன் கடல்
6. ஏட்ரியாட்டிக் கடல்
7. ஐரிஸ் கடல்
8. ஒக்காட்ஸ் கடல்
9. கார்பியன்கடல்
10. கருங்கடல்
11. காரக் கடல்
12. காஸ்பியன் கடல்
13. கிராண்டு பாங்க் கடல்
14. சார்காசோக் கடல்
15. சீனக் கடல்
16. சூலூக் கடல்
17. செங் கடல்
18. டாஸ்மன் கடல்
19. டிரினியன்கடல்
20. டீமார் கடல்
21. தென் கடல்
22. பவளக் கடல்
23. பாண்டாக் கடல்
24. பால்டிக் கடல்
25. பிஸ்மார்க் கடல்

உயிர் கடலுக்கு! — நம்
உடமை கடனுக்கு!

26. பேரிங் கடல்
27. மஞ்சள் கடல்
28. மத்தியதரைக் கடல்
29. மார்மாதாக் கடல்
30. லிகூரியக் கடல்
31. வடகடல்
32. வெள்ளைக் கடல்
33- ஜப்பான் கடல்
34- ஜாவாக் கடல்

-மேற்கண்ட கடல்களில் ஆயிரக்கணக்கான மீன் வகைகள் உயிர் வாழ்கின்றன.

கடல் தாய் தினம் தினம் ஈன்றிடும் இந்த மீனினம்தான் நம் நீண்ட வாழ்வை நிர்ணயிக்கும்நீதிபதிகள்; நமக்கு வளமான வருவாயை வாரி வழங்கும் வள்ளல்கள். நாம் வயிறுர உண்ப தற்கு உணவளிக்கும் குமணர்கள், நாகரீகமாய் நாட்டில்நாம்உலவ வழி வகுக்கும் வழி காட்டிகள், நம் இன மழலைகள் நலன் பல பெற்று நாட்டில் வலம் வர வழிகோலும் ஒளிச்சுடர்கள்! நாலு பேர் நம்மை ஊன்றிக்கவனிக்கஉத்தரவாதமளிக்கும்உத்தமர்கள்!

உயிரினத்தின் முதல் தோன்றல்! உலகெங்கும் பரந்துகிடக் கும்—கிடைக்கும் ஒரே உணவுப் பொருள்! உடல் பலம் அற் றோர்க்கு உறுதுணையாய் இருக்கும் உயர் மருந்து! இறங்காத உணவையும் அமுதாக இறங்க வைக்கும் சத்துப் பொருள் பல வற்றைச்சொத்தாய்ப் பெற்ற, எளியோரும் எளிதாக வாங்கவல்ல மலிவான, பணம் படைத்த பட்டுச்சட்டைக்காரர்களும், நல்ல, குணம் படைத்த ஒட்டுச் சட்டைக்காரர்களும் ஒரு மித்து உண் ணும் ஒரே உணவு! இந்திய மண்ணுக்குஅன்னியச் செலாவணியை அள்ளித் தந்திடும் அமுத சுரபி! இடர்பாடு பல உற்றும் பலரால் ஏற இயலா இமயத்தில் எழிலாகப் பறந்த என்னுயிர்! பாண்டிய மன்னரின் அவைக்கு நீண்டதோர் புகழை ஈன்றளித்த ஈடில்லாச் சின்னம்! மீன்!...மீன்!

---

**ஒற்றுமை வலையைப் பின்னிடுவோம்! — நம்முள்**
**வேற்றுமை ஒழிய எண்ணிடுவோம்!**

---

பண்டைத் தமிழகம் மீனினை அளித்துத்தான் தன் தேவைகளை அண்டை நாடுகளிலிருந்து அடைந்தது! பாவையரின் பூவிழிக்கு உவமை கூற மீனினையே பாவலர்கள் காவியங்களில் உலவ விட்டார்கள்.

மீன், மூளைக்கு வலிமை கொடுக்கும் அருமையான பொருள். உணவுப் பொருள்களில் எளிதில் செரிக்கக்கூடிய இயல்பு படைத்தது, உடலை காக்கும்பு ரோட்டினும் கொழுப்பும் பெருமளவு உள்ளது. வைட்டமின் 'ஏ' வும் 'டி' யும் இதில் சங்கமமாகி உள்ளது. மீனின், சினையிலும் மனிதனுக்கு தினமும்தேவையான வைட்டமின் 'பி' இருக்கிறது. மேலும் மீனில் மக்னீசியம், சோடியம், கால்சியம், பொட்டாசியம். பாஸ்வரம், குளோரின் போன்றவை உள்ளது. கடல் மீன்களில் அயோடின் இருக்கிறது.

மனிதன் தன் வாழ்க்கையில் எதிர் நீச்சல் அடித்து முன்னேற எடுத்துக்காட்டாய் இருந்தது மீனினமே! மீன் எப்போதும் தண்ணீரின் ஓட்டத்தை எதிர்த்துத்தான் நீந்தும். மீன்கள் குட்டியும் போடும்; முட்டையும் இடும் சக்தியைப் பெற்றது. (சுறா போன்ற மீனகள் குட்டி போடும்)

உப்பிட்டு உலர்ந்த மீனை நாம் கருவாடு என்று அழைக்கின்றோம். ஆனால் இலக்கியத்தில் கருவாட்டை 'மீன் தடி' என்று அழைக்கின்றனர். மீனினை மயிலை, மீனம். மச்சம் என்றும், பெரிய மீன்களை யானை மீன், திமி என்றும், சுறாவை மகரம் என்றும் அழைக்கின்றனர்.

# சிறப்பு மிக்க இறால்

இதை இறா, இறவு, கூனி என்றழைப்பர். ஆற்றிலும், கடலிலும், கழிகளிலும், ஏரி, நன்னீரிலும் வாழும் சிறிய உயிர். இதில் பல வகையுண்டு. அவற்றில் பெரும்பான்மை கடலில் வசிக்கின்றன. ஆழமில்லா கரையோரக் கடலில் ஏராளமாகக் கூட்டங் கூட்டமாக நீந்திச் செல்லும். சில வகைகள் கரையையடுத்த பகுதிகளிலும் ஆற்று முகத்துவாரத்திலும் இருக்கும்.

---

**கடலில் தானே விடியும் இரவு—பெருங்**
**கடனில் தானே முடியும் வரவு!**

---

இறால், பெரும்பாலும் செத்துக்கிடக்கும் பொருள்களை உண்ணும், எனினும் உயிருள்ள சில சிறு பிராணிகளையும் உண்ணும். செதில்கள் வழியாக மூச்சு விடும். சாதாரண இறாலில் பக்கத்திற்கு இருபத்து நான்கு செதில்கள் இருக்கும். இறாலின் முதுகுப் புறத்தில் இதயம் இருக்கிறது. இறாலின் இரத்தம் செந்நிறமாக இராது.

தான் இருக்கும் இடத்திற்கு ஏற்றவாறு தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் மகத்துவம் பெற்றது. மணலில் வாழும் இறால், மணல் நிறமாகவே இருக்கும். முள்ளோ எலும்போ, நாரோ ஒன்றும் இல்லாத. சுவை மிகு உணவு. சிறியதாக உள்ள பூச்சி இறால், பத்தியங்களுக்கு நல்லது.

இறாலின் இறைச்சியில்; நீர் 77.9, புரோட்டீன் 20.8, கொழுப்பு 0.3. தாதுப்பொருள் 1.4. சதவீதமும் இருக்கின்றன· வைட்டமின் 'எ'வும் 'பி'யும் சிறிதளவு உண்டு.

இருமாறுதல் அடையும் தன்மை இறாலுக்கு உண்டு. அவ்வப்போது தோலுரிக்கும். முட்டையிலிருந்து முதலில் 'நாப்பினியின்' நிலையில் வெளிவரும். அது முக்கோண வடிவம் கொண்டது, இரு வகையான மூன்று இணைக் கால்களும் உள்ளது. 'புரோட்டோ சோபியா', ''சோபியா'' 'மைசிங்' ஆகிய நிலைகளைக் கடந்து இறால் தன் முழு உருவத்தையும் அடையும்.

இந்த சுவைமிகு இறாலுக்கு மேலை நாடுகளில் அதிக தேவை உள்ளது. இறால் ஏற்றுமதியால் நம்நாட்டிற்கு ஆண்டொன்றிற்கு சுமார் 150 கோடிரூபாய் அன்னியச்செலாவணியை ஈட்டித்தருகின்றது. இப்படி அதிகமான அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் இந்த இறால்—எப்படி எங்கெங்கு வளர்கின்றது என்ற ஆய்வுகள் நடத்தப்பட்டு அதை கடற்கரை ஓரங்களில் உள்ள உப்பங்கழிகளில், கடல் நீர் ஏறி இறங்குகின்ற இடங்களில் இறால் குஞ்சுகளை விட்டு வளர்க்கின்றனர். ஆனால் இத்திட்டத்தில் யாரும் வெற்றியடையாததற்கு காரணம்

---

**மீன்கள் சிரிக்கும் கடலினிலே!**
**மீனவன் சிரிப்பு உலையினிலே!**

---

போதிய விஞ்ஞான வழி முறைகளை அறியாததே!

நாம், என்று கடல் வளத்தை முழுமையாகப்பயன்படுத்து கினறோமோ, அன்றுதான் நம்நாடு பொருளாதாரத்திலும் வளர்ந்து நிற்கும்.

# கோலா மீன்

கோலா மீன் சாப்பிடுவதற்கு ருசிமிகுந்த ஒன்று. ஆனால் அதைப்பிடிப்பதற்கு உயிரையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் துணிவுடன் செல்லவேண்டும். அதிகாலை 2 மணிக்கு பாய்மரத்தில் புறப்பட்டால் பகல் 12 அல்லது 1 மணிக்குத்தான் அந்த குறிப்பிட்ட இடத்தை அடைய முடியும். அங்கிருந்து பார்த்தால் கரையோ, திசையோ தெரியாது. நான்கு பக்கமும் கடல் சூழப் பட்டிருக்கும். கரையிலிருந்து பாய்மரத்தில்செல்வதற்குகோடைக் க்காற்று வீச வேண்டும். அந்தக் காற்றின் வேகத்தைப்பொறுத்துத் தான் அந்த இடத்தை அடைய முடியும். நீரின் நிறத்தைக் கொண்டு தான் அந்த இடத்தைக்கண்டு பிடிக்க முடியும். அந்த மீன்கள்-கடலின் மேற்பரப்பில் மேய்ந்து வருகையில்-அதன் அழகைக்காணக் கண் கோடி வேண்டும். அது பறக்கும் பொழுது ஆகாய விமானம் புறப்படுவது போல் அழகாக உயர்ந்து சுமார் 20 மீட்டர் தூரம் சென்று நீரில் மூழ்கி விடும்.

இந்த மீன்னைப் பிடிப்பதற்கு, தக்கைப் பூண்டு, காவளை' தாழை போன்ற தாவரங்களைப் பயன்படுத்துவார்கள்.

மீன்பிடிக்கும் நேரமோ சுமார் 2 மணி நேரம்தான். அதன் பின் அவர்கள் வீடு திரும்ப ஆயத்தம் செய்வர். இதனை 'போருக்கு திரும்புதல்' என்றே குறிப்பிடுகின்றோம். திரும்பி வருவது என்பது போரிடுவது போன்று. வீடு திரும்ப, கொண்டல் (கீழைக்காற்று), கச்சான் (தென்றல் காற்று) காற்றுத்தேவை. அக் காற்றுவீசாவிடில் மீனவர்காற்றடிக்கும்திசைகேற்பஎங்கோசெல்ல நேரிடும். இந்த நேரங்களில், புயற்காற்று வீச நேரிட்டால் வேறு நாட்டில் செனறு கரை சேர வேண்டியதுதான்-இல்லையேல்

---

ஆடும் கடலில் ஓடும் மறவா!
பாழும் குடிதான் உந்தன் உறவா?

---

மரணம்தான். கோலாமீன் பிடிப்பதற்கு உணவு என்று இரண்டு நாளைக்கு வேண்டிய பழைய கஞ்சி தான் எடுத்துச் செல்வர்' ஏனென்றால்-காற்று சாதகமாக இருந்தால்தான் இரண்டு நாளில் கடலில் இருந்து வீடு திரும்பி விடலாம். ஆனால் சில நேரங்களில் ஒருவாரம் கூட ஆகலாம்.

புயல்காற்றால் வேறு நாட்டு எல்லைக்கு அடித்து செல்லப்பட்டால்—அந்த நாட்டு பாதுகாப்புப் படைக் கப்பல்—மீனவர்களை பிடித்துச் சென்று நம் நாட்டுடன் முறையான பேச்சு வார்த்தை நடத்தி, விசாரித்து, பின் விமான மூலமாகவோ, கப்பல் மூலமாகவோ மீனவர்களை அனுப்பி வைத்த கதை ஏராளம். துணிவு என்பது துளிகூட இல்லாதவன் கடலில் மீன் பிடிக்கச் செல்ல முடியாது. இதை கண்ணதாசன்-

"............... கடலில்

தனியே போகும் துணிவைத் தவிர

துணையாய் வருவது யாரோ?" என்று பாடியுள்ளார்.

கடலில் மீன் பிடிக்கப் போவதிலும், மீன் பிடிப்பதிலும் பழமையும் உண்டு; நவீன முறையும் உண்டு. மீனை ஏமாற்றிப் பிடிக்கும் முறையும் உண்டு.

ஏமாற்றி என்று சொல்லும் போது அது எல்லா மீன்களையும் அல்ல; குறிப்பிட்ட மீன்களை மட்டும். குறிப்பாக சுமார் 20மைலுக்கு அப்பால், அதற்கு மேலும் தூரம் சென்றால் அங்கு மீன் கூட்டம் உண்டு. அந்த மீனுக்கு 'பறக்கும் கோலாமீன்' என்று பெயர் உண்டு. அந்த மீனைப்பிடிப்பதற்கு வலையோ, இறையோ எடுத்து செல்வது கிடையாது. பெரிய மரத்தை கட்டிக் கொண்டு 5 நபர்கள் இரண்டு நாட்களுக்கு உணவு (கஞ்சி மட்டும்) எடுத்துச் செல்வார்கள். அந்த நெடும் பயணம் மீனவர்களுக்கு நீண்ட பயணம் மட்டும் அல்ல; காற்று உதவி மட்டும் இல்லை என்றால், தன் சொந்த வீட்டிற்க்கு வருவதற்கு மிகக் கஷ்டம். மீன் பிடி தொழிலில் மிகக் கடினமான— ஆபத்தான தொழில் பறக்கும்

---

**உழைப்பைக் கடலில் இறைத்திடுவோம்!—நம்மை அழிக்கும் 'குடி'யை ஒழித்திடுவோம்!**

---

கோலா மீன் பிடிப்பது.

இந்த மீன் பிடிக்கும் மீனவர்கள் உழைப்பில் வல்லவர்களாகவும், திடமான உடல் உள்ளவராகவும் பயமில்லாதவராகவும் உள்ளவர்கள் தான் போக முடியும்.

இந்த மீனைப் பிடிக்கச்செல்லும் மீனவர்கள் குறிப்பிட்ட இடத்தில் சென்றதும், மீன் இவர்களிடம் வரவில்லை என்றால் கீழே கொடுத்த பாட்டைப் பாடுவார்கள்.

## பறக்கும் கோலா மீன் பிடிக்கும் போது பாடும் பாட்டு!

கடலேறி வந்தோமடா, என் ஆண்டவனே தேசமன்னா!
காவலாளி கூடி வா கூடி வா!

கண் காணா சீமையடா, என் ஆண்டவனே தேசமன்னா!
காவலாளி கூடி வா கூடி வா!

காண வந்தோம் உன்னையல்லோ, என் ஆண்டவனே!
தேசமன்னா! காவலாளி கூடி வா கூடி வா!

கூடி மருவி வாயேன் என் ஆண்டவனே தேசமன்னா!
காவலாளி கூடி வா கூடி வா!

கூட்டம்மிட்டு தள்ளி வாயே, என் ஆண்டவனேதேசமன்னா!
காவலாளி கூடி வா கூடி வா!

சேர்ந்து மருவி வாயேன், என் ஆண்டவனே தேசமன்னா!
காவலாளி கூடி வா கூடி வா!

செம்மானம் கூட்டிவாயேன், என் ஆண்டவனே தேசமன்னா
காவலாளி கூடி வா கூடி வா!

ஓட்ட புரவிையயா, என் ஆண்டவனே தேசமன்னா!

---

**தினமும் அறுவடை நம் நிலத்தில்!—நம்
தேவையை அடைவது எக்களத்தில்!**

---

காவலாளி கூடி வா கூடி வா!

என்னாலே பட்ட கடன், என் ஆண்டவனே தேசமன்னா!
காவலாளி கூடி வா கூடி வா!

உன்னாலே திர வேண்டும், என் ஆண்டவனே தேசமன்னா!
காவலாளி கூடி வா கூடி வா!

வேப்பம் தழை ஒடித்து, என் ஆண்டவனே தேசமன்னா!
காவலாளி கூடிவா கூடிவா!
உங்களை வேடிக்கை பார்க்க வந்தோம், என் ஆண்டவனே!

தேசமன்னா! காவலாளி கூடி வா கூடி வா!

ஆலம்தழைஒடித்து, என்! ஆண்டவனே தேசமன்னா!

காவலாளி கூடிவா கூடிவா!
உங்கள் அதிசயத்தை காணவந்தோம், என் ஆண்டவனே

தேசமன்னா! காவலாளிகூடி வா கூடி வா!
புங்கம் தழை ஒடித்து, என் ஆண்டவனேதேசமன்னா!

காவலாளி கூடிவா கூடிவா!
உங்கள் புதுமைகளை காணவந்தோம்,என் ஆண்டவனே
தேசமன்னா காவலாளி கூடி வா கூடி வா!

கூட்டி விளையாட, என் ஆண்டவனே தேசமன்னா,
காவலாளி கூடிவா கூடிவா!

கூண்டு ஒன்று கொண்டு வந்தோம், என் ஆண்டவனே
தேசமன்னா! காவலாளி கூடி வா கூடி வா!

பாய்ந்து விளையாட என ஆண்டவனே தேசமன்னா!
கர்வலாளி கூடிவா கூடிவா!

பல்லக்கு கொண்டு வந்தோம்! என ஆண்டவனே
தேசமன்னா! காவலாளி கூடி வா கூடி வா;

துள்ளி விளையாட. என் ஆண்டவனே தேசமன்னா!
காவலாளி கூடிவா கூடிவா!

---

**கடலில் தினமும் வாழ்கின்றோம்!**
**கடனில் தானே சாகின்றோம்!**

---



## பாட்டின்கருத்துச்சுருக்கம்

கரையில் இருந்து நீண்ட தூரம் வந்து இருக்கிறோம். எங்கள் உணவிற்காக உங்களைப் பிடித்து விற்றால்தான் எங்கள் பிழைப்பு. ஆகவே பிடிக்க என்று சொல்லாமல் காண வந்தோம் உன்னையல்லோ என பாடுகிறார்கள். கூட்டமாக வாங்க அதாவது, நேரமாகிறது கூட்டமாக வந்தால் அல்லது கொஞ்சப் பேராக உள்ள நீங்கள் சென்று மற்ற மீன்களை அழைத்து வந்தால், சீக்கிரம் பிடித்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்து விடுவோம் எனவும், பாடுகிறார்கள். அதாவது மீன் களை தனித் தனியாகப் பார்த்தால் மீன்கள் அதிகம் இராது. நெருக்கமாக என்றால் ஒன்றோடு ஒன்று இணைந்து நெருங்கி வந்தால் முதுகில் உள்ள அந்த மீனின் நிறம் சிவப்பாக இருக்கும். அதைத்தான் செம்மானம் என்று சொல்லுவது வழக்கம்.

இவர்கள் எடுத்துச் செல்லும் கட்டுமரம் உயர்ந்த நல்ல தரமானமரமாகஇருப்பதைத்தான்எடுத்துச்செல்லுவார்கள்அந்த மரத்தையே ஒட்டைப் புரவியே என்று தன்னைத் தாழ்த்தி பேசு வார்கள். மேலும், பறக்கும் கோலா பிடிக்கும் போது தொழி லுக்குச் சென்ற நபர்களை பெயர் சொல்லியோ, அல்லது மாமன்,

மச்சான், அண்ணன் என்றோ கூப்பிடக் கூடாது. மீனுக்கு காவலாளி என்று அழைப்பார்கள். தொழிலுக்கு சென்றவர்களையே ஒருவருக்கு ஒருவர் அழைக்கும் போது காவலாளி என்று மரியாதையாக அழைப்பார்கள். மேலும், புகையிலை, வெற்றிலை, பொடி, பீடி, சுருட்டு இவைகளை பக்கத்தில் உள்ள வரைப் பார்த்துக் கேட்கும் போது, அந்தபெயர் களை சொல்லாமல் 'மடிப்பான் கொடுங்கள் ஐயா' என்பார்கள். இல்லை என்றால் மீன் பக்கசதில் வராதாம். அதனாலேதான் ஒவ்வொருவரும் பாட்டைப் பாடும்போது கடவுளாக எண்ணி பயந்து அடிக்கடி 'என் ஆண்டவனே காவலாளி' என்று பாடு கிறார்கள்.

மீனவரின் எண்ணத்தை ஒளிவே இல்லாமல், என்ன நினைக்கிறார்களோ, வாழ்க்கையில் உள்ள கடன் தொல்லைகள் வருமானம் இல்லாமை, உடல் வலி மற்ற எல்லாவற்றையும் தொழில் செய்யும்போது பாட்டாகப் பாடி இருக்கிறார்கள். ஆகவே தான் மீன்பிடிக்கச் சென்ற நேரத்திலும் ''என்னாலே பட்ட கடன் உன்னாலே தீரவேண்டும்'' என மனம் நொந்து மீனவன் பாடுகிறான். உழைக்கும் வர்க்கம் சரியான ஊதியம் கிடைக்காமல் மிகக் கஷ்டப்படும் வர்க்கம்.

மேலும், பறக்கும் கோலா மீன் பிடிக்கும் போது வலை, தூண்டில் எதுவும் எடுத்துப் போவது இல்லை என்று மேலே சொன்னேன்.

இந்த பாட்டில் வந்துள்ளபடி வேப்பிலை, ஆலம் இலை புங்கமர இலை, கத்தாளை இலை, காவாளை இலை இது போன்ற இலைகளை எடுத்து வந்து கட்டாகக் கட்டி கடலில் தன் கட்டுமரத்துக்கு பக்கத்தில் 10 அடி தூரத்தில் போடுவார்கள். அப்போது பறக்கும்கோலா மீன் அருகில் ஏராளமாக கூடி விடும். அப்போது கச்சாவலையைஇலைகளுக்கு அடியில்போட்டு தூக்கி னால் நிறைய மீன்கள் கிடைக்கும். இது தான் கோலா மீன் பிடிக்கும் முறை. இதைத்தான் இலைகளை கொண்டு வந்து உள்ளோம் என்று பாடுகிறார்கள்.

மீன்களை எடுத்து வர நூலால் முடித்த கொடு வலை மரத்தில் இருக்கும். அதில் தான், பிடிக்கும் மீன்களை போட்டு சிதறாமல் எடுத்து வருவார்கள். அதற்கு பாட்டில், கூண்டு ஒன்று

---

**நித்திரை மறப்பதும் நமது குலம்! தினம்**
**முத்தெடுப்பதும் நமது குலம்!**

---

கொண்டு வந்தோம் என்றும் தாங்கள் கொண்டு சென்ற மரத்தை மீனுக்கு பல்லக்கு என்றும் பாட்டில் மீனவர்கள் பாடுகிறார்கள். மீன்களை பிடிக்க பாட்டில் தேன் கருத்துக்களை சொல்லுகிறார்கள். மற்ற மீன்களை பிடிக்கும் போதும் பாட்டுகள் பாடுவார்கள்.

வெள்ளையன் நம் நாட்டை ஆண்ட நேரத்தில் மீனவர்களை கொடுமைப்படுத்தினான். கப்பல் வந்தால் சரக்குகளை இறக்க இவர்களைத் தான் பயன்படுத்தினார்கள். சரியாகக்கூலி கொடுப்பதும் இல்லை. மிக கடினமான வேலை வாங்குவார்கள். அதனால், அந்தக் காலத்து மீனவர்கள் பாட்டாகப்பாடி வெள்ளையனை விரட்ட நினைத்தார்கள்.

கல்லை வெட்டச் சொன்னான் வெள்ளைக்காரன் கல்லாய் போவான் வெள்ளைக்காரன்! மண்ணை வெட்ட சொன்னான் வெள்ளைக்காரன் அவன் மண்ணாய்ப் போவான் வெள்ளைக்காரன். இப்படி பலவற்றை மனம் நொந்து பாட்டாகப் பாடி இருக்கிறான் என்பதையும் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்இன சம்பந்தமாக நடுக்குப்பம் சூரியமூர்த்திஎன்பவரும் வழக்கறிஞர் செல்வராஜி என்பவரும், புண்ணியக்கோட்டி செட்டியார், பரசுராமன் செட்டியார், சிந்தாதிரிபேட்டை ப.க. வேணுகோபால் ஆகியோர் மிக ஆர்வம் உள்ளவர்கள், சமுதாயம் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர்களில் இவர்களும் முக்கியமானவர்கள்.

இதை எழுதுவதால் ஜாதியை வெளிபடுத்துகிறான் என்ற பொருள் அல்ல. தொழிலின் அடிப்படையில் வந்தது மீனவன் என்ற பெயர். மீன்பிடி தொழிலை அரிஜன், முஸ்லிம், கிருத்தவர். நாயக்கர், முதலியார், ரெட்டிகள், பக்தர். நாட்டார் இன்னும் பல ஜாதியினர் செய்கின்றனர். குறிப்பாக மீன் பிடி தொழில் செய்யாத இனமேஇல்லை. ஆகவேதான் ஆதிவாசிகள்என்கிறேன்.

# நம் இனத்தின் பொருளாதாரம்

சமுதாய அங்காடியில் அழகான ஒரே பொருள்—பொறுப்புக்களைப் புதிய வடிவில்புரிய வைக்கும் புதினம்—எதையும் செய்ய வல்ல இணையில்லாச் சித்தாந்தம்

---

**பவளம் எடுப்பதும் நமது குலம்-இங்கு**
**பட்டினி கிடப்பதும் நமது குலம்!**

---

பணம்-பணம்-பணம்! ஒவ்வொரு நாளும் நம் தேவையின் ஆவலைப் போக்குவது, ஒவ்வொரு வினாடியும் நம் நாடி நரம்புகளை ஆட வைப்பது, அல்லலை அறுப்பது. இன்னலை எதிர்ப்பது, பிணைப்பை அணைப்பது, பெருமையைக் கொடுப்பது பணம்-பணம்-பணம்!

இந்தப் பணத்தின் குணத்தை நம் இனம் அன்று தொட்டு இன்றுவரை ஏனோ மதிக்க மறந்து விட்டது! நாளை என்று ஒன்று உண்டு-நமக்கும் அதில் பங்கு உண்டு என்பதை மறந்து, தினமும் கிடைக்கும் பணத்தை அன்றே அழிந்துவிடும் அவலப் புத்தியின் அச்சாணி நாமே! அதனால்தான் நாம் நன்னிலைக்கு உயர்வதில்லை-நாட்டு நடப்பில் இணைவதில்லை. பணத்தின் பயனைப் பத்தோடு பார்க்கும் நிலை, என்று நமக்கு வருகிறதோ அன்றுதான் நம் நிலை நன்றுயரும்! சமுதாயத்தில் சம அந்தஸ்துப் பெற ஒரே வழி, பணத்தை ஈட்டுவதுதான்.

பணத்தின் குணத்தை, கொள்கையை, மரியாதையை மாண்பை, மாபெரும் தனமையை ஏனோ எண்ணிப் பார்க்க மறந்துவிட்டோம். கடலில், கட்டுடலின் சக்தியைத் தெளித்துப் பத்து ரூபாய் சம்பாதிக்கின்றோம். ஆனால் அந்தப் பத்து ரூபாய்க்கு மதுவை மட்டுமே தந்து எடுத்துக் கொள்கிறோம். பாலுக்குக் கத்தும் பிள்ளையும், பயத்தால் நடுங்கும் மனைவியும் பெற்ற தாய்-தந்தையும் சுற்றமும் இருப்பதை எண்ணிப் பார்க்க மறந்து விடுகிறோம். அதனால் தான் நாம் அந்தஸ்து இழந்து அவல நிலை அடைந்து, அன்றாட வாழ்க்கைக்கே திண்டாடுகின்றோம்.

''பணத்தை மட்டும் சேர்த்து விடு; உலகம் முழுவதும் சேர்ந்து உன்னை ஒரு பண்பாளன் என்று கூறத் தயங்காது'' என்று பேரறிஞர் பெர்னாட்சா சொன்னார். இந்தத் தத்துவத்தை என்று நாம் தழுவுகின்றோமோ... அன்றுதான் நாம் தெளிந்த தீர்க்கதரிசிகளாக, மிகப் பெரும் மேதைகளாக, அகில மறிந்த அறிஞர்களாக ஆவோம்—ஆக்கப்படுவோம்:


உயிரை மனைவி மக்களிடம் உறவாட விட்டு விட்டு உடலை மட்டும் கடலுக்குக் கொண்டு போகும் கொடுமையான தொழில் செய்தும் கூட, பணத்தின் பேராற்றலை, பெருமையை ஒரு கணம் கூட நாம் எண்ணுவதில்லை, நம் இனம், மற்ற இனத்தோடு ஈடாக வாழும் வல்லமை இழந்த காரணம்-சமுதாயத்தில்

**இருப்பது இருந்தால் குடிப்பது எவன்தான்?**
**குடிப்பது இருந்தால் தன்னை நினைப்பது எவன்தான்?**

சம அந்தஸ்துப் பெறாத நிலை பணத்தின் பயனை நாம் அறியாததே ஆகும்.

இயற்கையை எதிர்த்து, இன்னல் பல ஏற்று, இருட்டிலும், மழையிலும், பனியிலும், பாழும் வெய்யிலிலும் பாடுபட்டுப் பெற்ற பணத்தைப் பொறுப்போடு சேர்த்து காத்து வாழும் நாமே நம் வயிற்றின் ஈரம் வற்றாமல் இருக்க, வாலிபத் துடிப்பு வனப்பாய்ச் செழிக்க, நம் செல்வங்கள் சீராய் வளர, பிள்ளைகள் பெருங் கல்வி பயில, மனைவி மகிழ்ச்சியில் தவழ, சுற்றம் சூழ்ந்து புகழ பணம் அவசியம் என்பதை நாம் தினம் தினம் எண்ண வேண்டும்.

அப்படி நினைத்தால் தான் நம் மீனவ இனம் சமுதாயத்தில் சம நிலை அடைந்து, சமத்துவம் பெற முடியும். வாய்ப் பேச்சில் உயர்ந்து விடாது வாழ்வு-எழுத்திலே ஏற்றம் பெறாது இல்லறம்—அறிவுரையில் அமைதியடையாது அகச் சுகம். ஆனால் பணம் மட்டும் தான் எல்லாவற்றையும், எல்லாக் கோணங்களையும் சந்திக்கும். எனவே, என்னருமை இனமே! இன்று முதலாவது சேமிப்பின் கட்டாயத்தைக் கண்டிப்பாக சிந்தித்தாக வேண்டும்.



# பண்டைய வாணிபத்தில் மீனவர்கள் !

தமிழகம்; மேற்கே கிரேக்க, ரோம நாடுகளுடனும் எகிப்தினுடனும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தமைக்குப் பல்வேறு சான்றுகள் கிடைக்கின்றன. ஏறத்தாழ கி. மு. 1000-தில் வாழ்ந்த சாலமன் என்னும் அரசனுடைய காலத்திலேயே தங்கம் வெள்ளி, தந்தம் போன்ற பொருள்களும், குரங்குகள். மயில்கள் போன்றவையும் தமிழகத்திலிருந்து நாவாயிற் சென்றன என்பர். இதனால் 'கவி' 'தோகை' என்ற தமிழ்ச் சொற்கள் Kapim, Takima, என்று யூதர் மொழியில் உள்ள 'விவிலிய' நூலில் இடம் பெற்றன. கி. பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த ஸ்டிராமோ என்ற மேல் நாட்டு அறிஞர்'' ஆண்டு தோறும் 125 .கப்பல்கள் செங்கடல் நாடுகளிலிருந்து இந்தியாவிற்குச் சென்றன.'' என்று கூறுகிறார். இந்திய வணிகர்கள் அல்லது அராபியர்கள் கூறும் செய்திகளைத் துணையாகக் கொண்டு ஹிப்பாலஸ் (Hippalos) என்ற கிரேக்கர், ''முதல் முதலாகத் தமிழ் நாட்டோடு கிரேக்கர்கள் கடல் வழித் தொடர்பு கொண்டனர்'' என்று கூறுகின்றார்

**பவளம் எடுத்துத் தருகின்றோம்!-ஒரு**
**கவளம் உணவுக்கு அழுகின்றோம்!**

இந்தியாவிலிருந்து, குறிப்பாகத் தமிழகத்திலிருந்து ஏற்று மதியான முத்துக்கள், மிளகு போன்ற பொருள்களுக்கு ரோம் நாட்டில் மிகுந்த மதிப்பு இருந்தது. அந்நாட்டு மக்கள் ஒன்றுக்கு நூறுபங்கு விலை கொடுத்து அப்பொருள்களை வாங்கிக் கொண்டனர். இதனால் ஆண்டு தோறும் 55,000,000 ரோமத் தங்க நாணயங்கள் (4,86,979 பவுன்கள்) தம் நாட்டிலிருந்து இந்தியா உறிஞ்சிக் கொண்டது என்று கி. பி. இரண்டாம் நூற்றாண்டவரான 'பிளினி' (Pliny) என்பவர் கூறுகிறார்.

ரோம் நாட்டு மகளிர் இம்முத்துக்களிடத்தும் தம்மனதைபறி கொடுத்தவராய் அவற்றை மேனியெங்கும் பூட்டி அழகு பார்த்தனர். இதனால் பெரும் பொருள், நாட்டை விட்டுப் போவதை உணர்ந்த 'பிளினி' அவர்களிடம் குறைபட்டுக் கொள்கிறார்.

கால்டிய நாட்டவருடனும் தமிழர் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். 'ஊர்' "பாபிலோன்" போன்ற நகரங்களின் சிதைவுகளில் காணப்படும் தேக்கு மரங்கள் தமிழ் நாட்டைச் சார்ந்தவைகளாகும்.

இவ்வாறு வெளிநாட்டுப் பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பல்கள் ஏராளமான பொன்னுடன் திரும்பி வந்தன, கம்பனும் 'கலம் சுரக்கும் நிதியம்' என்கிறார். வெளிநாட்டு வாணிபத் தொடர்பால் "யவனர்கள்" என்று அழைக்கப்படுகின்ற கிரேக்க ரோமர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழருடன் கலைத் தொடர்பு கொண்டனர். அவர்கள் தந்த 'தேட்கடுப்பன்ன நாட்படுதேறலும், பாவை விளக்குகளும், அன்ன வடிவுள்ள விளக்குகளும், தமிழ் நாட்டு நாகரீகத்துடன் கலந்தன. காவிரிப் பூம்பட்டினத்தில் ஒரு 'யவனசேரி' இருந்ததமையை சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. மதுரையில் அவர்களது தாமிர நாணயங்களை அச்சிடும் சாலை ஒன்றும் இருந்ததாகக் கூறுவர். தமிழ் வேந்தர்கள் அவர்களைத் தம் மெய்க்காப்பாளர்களாக வைத்துக் கொண்டனர். என்பதை முல்லைப் பாட்டிலும் பிறவாலும் உணரலாம். கி. மு. முதல் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஒருவன் அகஸ்டஸ் சீசரின் நட்பை நாடி அவனது நாட்டிற்கு இரண்டு முறை அரசியல் தூதுவர்களை அனுப்பி வைத்தான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சிலப்பதிகார ஊர்காண் காதையால் மதுரை மாநகரின் கடிமதில் வாயிலைக் காவலிற் சிறந்த அடல் வாள் யவனர் காத்து நின்ற செய்தியை

---

**கட்டான உடலே நம் வித்து!**
**கத்தும் கடலே நம் சொத்து!**

---

யும் அடைக்கலக் காதையால் மதுரை மதிர்புறத்து வைக்கப் பட்ட பல்வேறு கருவிகளைப் பற்றியும் அறிகிறோம். அக்கருவி 'ஆர்கிமிடிஸ்' என்பவரால் கண்டு பிடிக்கப் பட்டதுவே என்றும், யவனர்களுடைய தொடர்பால் அவை தமிழ் நாட்டிற்கும் வந்து மதுரை மதிலில் இடம் பெற்றன என்றும் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் கூறுகிறார்.

தமிழிலக்கியத்தில் மிளகு 'கறி' எனப்படுகிறது.

மேலைக் கடலிற் சேரர்களே ஆதிக்கம் பெற்றிருந்தனர். பிற அரசர்களுடைய கப்பல்கள் மேலைக் கடலை எட்டிப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு அவர்களது ஆதிக்கம் மிகுந்திருந்தது.

சேர மன்னரின் இத்தகு கடல் வழிக்குக் காரணம் அவர் களது நாட்டில் இயற்கையாக அமைதிருந்த துறைமுகங்களே யாகும்.

'முறிசி, தொண்டி, மாந்தை பந்தர், நவுரர்
நனியிரு முந்நீர் நாவாய் வுட்டி
வளிதொழில் ஆண்ட ரவோன் மருக''
—என்று சோழன் கரிகாற்

பெருவளத்தானை வெண்ணிக் குயத்தியார் பாடுவதி னின்று தமிழர் கடல் வாணிபச் செய்தி விளக்கமுறும்.

மதுரைக் காஞ்சியில் நாவாய்களைப் பற்றிய செய்தி:
'கொடும்புணர் விலங்கு போழ.........
அடியற் மெருநாவாய்'

சிறந்த நாவாய்கள் குதிரைகளைக் கொண்டு வந்து இறக்கு மதி செய்தன. யவனம் முதலிய தேசத்தில் உள்ளோர் விரும்பி யணியும் பேரணிகலன்களை இங்கிருந்து ஏற்றுமதி செய்தன.

பெரிய கப்பல்களை 'வங்கம்' என்று கூறுகிறது மதுரைக்காஞ்சி,
எட்டுத்தொகை நூல்களில் கப்பல்கள் ''கலம்'' என்று அழைக்கப்பட்டது.
குறுந்தொகையிலும் ''கலம்'' என்றே அழைக்கப் படுகிறது.

---

**விதையே போடாத உழவர் நாம்!.வீண்**
**வினையைத் தீண்டாத மறவர் நாம்!**

---

'சங்குகள் கரையின் கண்ணே திரிய, கடல் எழுந்து ஆர வாரிக்கும் ஓலமரந்த அழகான துறைக்கண் கலங்களை பரதவர் செலுத்துவர்'' என்று ஐங்குறுநூறு குறிக்கிறது.

''கோடுபுலங் கோட்பக் கடலெழுந்து முழங்கப்
பாடிமிழ் பனித்துறை யோடுகல முகைக்கும்''

காற்றால் அடித்துக் கொணரப்பட்ட இத்தகைய மரக் கலங்களைக் கடல் சார்ந்த நெய்தல் நிலப் பகுதியில் வாழும் ப்ரதவர் குலப் பெண்கள் எண்ணுவார்கள்.

''கடலே, கால்தந்த கலனெண்ணுவோர்
கானற் புன்னைச் சினை நிலைக்குத்து''

பண்டைத் தமிழகத்தே சோழ நாட்டில் காவிரிப்பூம் பட்டினமும், சேர நாட்டில் முசிறியும், பாண்டிய நாட்டில் கொற்கையும் சிறந்த துறைமுகப் பட்டினங்களாக விளங்கின.

முசிறித் துறைமுகத்தில் மரக்கலங்கள் பொருளைக் கொணர்ந்து தந்து விட்டு அதற்கீடாக மிளகை ஏற்றிச் சென்றன என்ற குறிப்பும் அகநானூற்றுப் பாடலில் காணப்படுகிறது.

''யவனர் தந்த வினைமாண் நன்கலம்

பொன்னோடு வந்து கறியொடு பெயரும்,''

மீன்களை விற்று அதன் விலைக்கு மாறாகப் பெற்ற நெற்குவியல்களும், வீடும் தோணியும் பிரிந்தறிய வராதபடிகாண் பாரை மயக்கச் செய்யும் மனையித்தே குவிக்கப் பெற்ற மிளகும் பொதிகளும், மரக்கலங்கள் தந்த பொன்னாலாகிய பொருள் களும், கடல்படு பொருள்களும், முசிறித் துறைமுகத்தில் நெருங்கிக் கிடந்தன.

சிறும்பானாற்றுப் படையும், மதுரைக்காஞ்சியும் கொற்கைத் துறைமுகத்தே நடந்த முத்து வாணிகத்தினை வளமுறக் குறிப்பிடுகின்றன. முத்தால் மாட்சிமையுற்றது கொற்கை என அகநாநூறு நவிலும்.

---


**மீன் பிடித்து பழக்கமுண்டு-மற்றவர்**

**வால் பிடித்து பழக்கமில்லை!**

---

''மறப்போர்ப் பாண்டியன் அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன''

குறிப்பு: மேற்கண்ட குறிப்புகளில் இருந்து நம் இனத்தவர் பண்டைய நாட்களில் கடல் வாணிபத்திலும்; நட்பு நாடுகளின் தொடர்பிற்கும் எத்துணை வகையில் ஒத்துழைத்திருப்பார்கள் என்று நாம் அறிந்து கொள்ள ஏதுவாகின்றது.





# இலக்கியத்தில் நம் இனம்

அவன் அமர்ந்திருந்த இடத்தின் இருமருங்கிலும், ஏராளமான படகுகள், தோணிகள், கட்டு மரங்கள் கிடந்தன. அவை அவனது எண்ணத்தை ஈர்த்தன:

ஒரு கட்டு மரத்தைத் தொட்டுப் பார்த்தான். புரட்டியும் பார்த்தான். இதில் ஏறிக் கொண்டா பரதவர்கள் கடலில் வெகு தூரம் போகிறார்கள்! உயிருக்கு உறுதி இல்லாமல் அவர்களது தினசரி வாழ்வு நடக்கிறது! ஒவ்வொருவருக்கும் எத்தனை குழந்தைகளோ!? அவற்றைக் காப்பாற்றவும், வயிற்றை நிரப்பவும் இந்தக் கடினமான தொழிலை மேற்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது கரையில் நின்று பார்க்கும் போதே, கடல் எவ்வளவு பயங்கரமாகக் காட்சியளிக்கிறது! இந்தத் தமிழன், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே, கப்பலோட்டினான் என்பது பொய்யல்ல: துணிந்து அவன் கடலிலேயே பல காலம் மிதந்திருக்கிறான். சிங்களம், புட்பகம், சாவகம், ஆகிய தீவுகள் பலவும் கண்டு வந்திருக்கிறான். இந்தத் துணிவு அவனுக்கு எப்படி வந்தது? வேறொன்றுமில்லை: உயிரையும் வாழ்வையும் பற்றி அவன் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறான்!

சாவை வாழ்விலேயே கண்டிருக்கிறான். 'விட்டு விடப் போகுது உயிர், விட்டவுடனே உடலைச் சுட்டுவிடப்

---

**பாதையில்லா; ஊரில் பயணம் செய்கின்றோம்!-வரும் பணத்தை ஏனோ விரயம் செய்கின்றோம்?**

---

போகின்றார் சுற்றத்தார்' என்ற மெய்ஞானத்தை முழுமை பெற உணர்ந்திருக்கிறான். மீனவனுக்குத் துணிவு வந்து விட்டது.

ஆனால் ஒரு வேறுபாடு, பழந்தமிழன் புகழுக்காகத் துணிந்தான். புதுத்தமிழன் வயிற்றுக்காகத் துணிந்தான். சாவைப் பற்றி பயம், ஓரளவாவது பழந்தமிழனுக்கு இருந்திருக்கலாம்! பரதவத் தோழனுக்கு அது வராது! கட்டு மரம் கட்டிக் கடலேறிச் சென்றால், செத்து விடுவோமே என்று பயந்து' வீட்டிலேயே அவன் இருந்தால் பட்டினி அந்தச் சாவை வீட்டிலேயே கொண்டு வந்து விடும்! துணிந்து இறங்காமல் வேறு என்ன செய்வது?

மென்மையான, தொன்மையான, செந்தமிழில் எண்ணற்ற இலக்கியங்கள் எழிற் கூத்து ஆடுகின்றன. தேனும், பாலும், பாகும், பருப்பும் இவை நான்கும் கலந்த இன்சுவை இலக்கியங்கள், சுகமாய்; செந்தமிழ் நாட்டில் சிறகடித்துப் பறக்கின்றன. அப்படிப்பட்ட இலக்கியங்களுள் நெஞ்சை குறுகுறுக வைக்கும் இலக்கியம் குறுந்தொகை. அத்துணைச் சிறந்த, நெஞ்சங் கவர்ந்த தித்திக்கும் கற்கண்டு.

குறுந்தொகை, தொகுப்பு நூல்-ஆனால் காதலை வகுத்து நெஞ்சை அறுக்கும் நூல்! பல புலவர்களால் பாடப்பட்ட நூல்- ஆனால் படித்தவர் இதயத்தை ஆட வைத்த நூல்! இப்படிப் பட்ட நூலில் நம் மீனவ இனத்தோன், மென்மைப் புலவர் மீனெறி தூண்டிலார் தேனொழுகும் பாடல் ஒன்றைப் பாடு கிறார்.

தலைவன், தலைவியிடம் குறிப்பிட்டுச் சொன்ன காலம் கடந்து விட்டதால், வருத்தமுற்ற தலைவி, தன் தோழிக்கு இப்படிச் சொன்னாள்.

''யானே ஈண்டை யேனே; என் நலனே
ஏனல் காவலர் கவண்ஒலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங் கழை
மீன்எறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு ஆண்டு ஒழிந்தன்றே!''

(அவன் என் அருகில் இருந்த போது எனக்கிருந்த நலமும்

---

எவர்க்கும் நல்லவன் மீனவன்தான்!-உலகோர்
ஏவலை வாங்குவது ஏனவன்தான்?

---

சுகமும் அவன்என்னைவிட்டுப் பிரிந்தபொழுதே நீங்கியது. தன் ஆற்றாமை மிகுதியையும், தான் பிரிவினாலேசுக மிழந்துவிட்ட கொடுமையையும் உரைக்கின்றாள்: யானை வளைத்தால் மூங்கில் வளைகிறது, விட்டு விட்டால் தலை நிமிர்கிறது. அது போல அவன் இருந்தால் இனிக்கிறது. இல்லை யென்றால் உலகே வெறுக்கிறது. மீன்கோத்த இரையினை யுடைய தூண்டிற்கோலை எறிந்து பெரு மீனைப் பிடிப்பாரைப் போல, என் நலனைக் கவர்ந்து கொண்டவனாக நீங்கினான். மீனும் கிடைக்கப் பெறாமல், வைத்த இரையையும் பறி கொடுத்து நிமிரும் தூண்டிலைப் போல யானும் நலமிழந்து கெட்டேன்' என்கிறாள்.

இரையைக் கட்டி அனுப்பிய தூண்டில், மீனுமின்றி இரையுமின்றி வந்தால் எப்படி இருக்குமோ அதுபோல, என் நெஞ்சம் அலைமோதுகிறது-நிலை தடுமாறுகிறது என்றும், மீனெறித் தூண்டிலார் தலைவி தடுமாறும் தன்மையை தனித்தமிழில் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

தலைவியின் நெஞ்சத்தை-எண்ணத்தை வேறு எத்துணையோ கோணங்களில் கூறி இருக்கலாம். ஆனால் மென்புலவர் தன் இனத் தொழிலை எல்லோரும் அறிய வேண்டும் என்பதற்காக வும், தனக்குத் தன் இனத் தொழிலின் மீதுள்ள பற்றை பாருக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத் தான் மீனையும் தூண்டிலையும் நமக்கு உவமையாகச் சொல்கிறார்.

'மீனெறி தூண்டிலார்' மீனவர் இல்லை என்று யாரும் கூறிட முடியாது. காரணம் அவர் பெயரே மீனெறி தூண்டிலார். இன்று, நாம் மீனவன் என்று சொல்லவே வெட்கப்படுகிறோம். அதை இழிவாகவும் எண்ணுகிறோம். ஆனால் சங்கப்புலவர் தன்னுடைய பெயரை மீனெறி தூண்டிலார் என்று எவ்வளவு துணிச்சலோடும், இனப்பற்றோடும். வைத்துக் கொண்டிருக் கிறார் என்பதை நோக்குங்கள், இவரைப் போன்று இனப்பற்று நம்மிடமும் இருக்க வேண்டும்-சிறக்க வேண்டும்-அதைக்கண்டு உலகம் வியக்க வேண்டும்!

நம் இனப் புகழ் நாடறியத்தோன்றிய நன்மணிகள் எண்ணற்றோர்! ஆண்டவனை ஆராதனை செய்ய அதிபத்தர் தோன்றினார்; நற்றமிழ் காக்க நாவீறு படைத்த நக்கீரர் தோன்றினார்; நட்பின் தரத்தை நாடறிய கொள்கைக்குன்றாம்

---

**வறுமையின் வாயில்-மீனவன்**
**எளிமையின் கோயில்!**

---

குகன் தோன்றினான், பொதுவுடைமைப் பூங்கா செழித்து வளர சிங்கார வேலனார் தோன்றினார்; இனப் பெயர் சிறக்க மென் புலவர் மீனெறி தூண்டிலார் தோன்றினார். அரங்கில் தனி இடம் பெற்றவரும் மீனவர்களின் வரிசையில் தனக்கு நிகர் தானே என்று சொல்ல நம் இனத்திற்கென கொடியையும், அதன் நிறத்தையும் உருவாக்கி கொடுத்து நம்முடன் வாழ்ந்த பெரியார் ப. ஜீவரத்தினம் தோன்றினார்.

**குறுந்தொகையில் ஒரு காட்சி :** நெய்தல் நிலத்திலே நிரம்பச் செல்வம் பெற்ற இளைஞன் ஒருவன், பருவக் குமரி ஒருத்தியை உளமாரக் காதலித்தான். தன் காதலுக்கு ஆதரவு தேட, அழகியின் ஆருயிர்த் தோழியை நாடினான். தன் இதயத்தை இறக்கி வைத்தான்-தூதுக்குத் தோழி துணை நின்றாள்-சென்றாள்-கண்டாள் கட்டழகியை. அந்த இளைஞனின் இதயத்தை எடுத்தியம்பினாள்.

கட்டழகி கனிந்து விட்டாள்! அழைத்து வரப்பட்டாள், நெய்தல் மலர்களைக்கொய்து வந்து நிலம் முழுக்கப் பரப்பி அதில் அழகியை அமர்த்தினாள்.

''இளைஞனிடம் சென்றாள்!
''என்ன என்றான்!'' அவன்.
''நன்றாய் முடிந்தது''! என்றாள்.
''எங்கே என்னுயிர்?'' என்றான்.

''நெய்தல் மலரைப் பரப்பி நேரிழையாளை இருக்க வைத்திருக்கிறேன் விரைந்து போ! அவள் விழிபை மீனென்று எண்ணி, நாரை கொத்தி விடப் போகிறது'' என்றாள்.

''சரி நீ'' என்றான்.

''நான் ஏன்? போகிறேன்? மீன் விழியாளை விரைவாக வீட்டிற்கு அனுப்பி விடு'' என்றாள்.

''நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி,
நின்குறி வந்தனென், இயல்தேர்க் கொண்க!-
செல்கம்; செல வியங்கொண்மோ-அல்கலும்,
ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும், என்மகள் நுதலே.''

பொன்னாகையார்

---

**கடலின் பிள்ளைகளே!-என்றுதான்**
**விலகும் நம் தொல்லைகளே!**

# மீனவன் மாண்பு

இன்று ஏழ்மையின் சின்னமாய், இல்லாமையின் இலக்கணமாய், பரிதாபத்தின் முழு உருவாய் மீனவன் காட்சியளிக்கின்றான்!

ஆனால் அன்று சிறப்புகள் பல பெற்று, சீரிய வாழ்வை செவ்வனே நடத்தி இருக்கிறார்கள். செல்வத்தின் இமயத்தில் நெடும் பயணம் செய்திருக்கிறார்கள்! வந்தோர்க்கெல்லாம் வாரி வழங்கி, வறுமையை விரட்டி இல்லாமையைத் துரத்தி, இயலாமையை எதிர்த்துப் போராடி இருக்கிறார்கள்!

இருப்பதை ஏழையர்க் களிப்பதே நம் பொறுப்பு, என்கிற இலட்சிய வாழ்வை இதயத்திலே ஏற்று இசைபட வாழ்ந்திருக்கிறார்கள் | மீனவர்கள் என்பதற்குக் குறுந்தொகையில் ஒரு சாட்சிப் பாடல் வருகிறது. காதலை விளக்க முனைந்த பாடலாசிரியர் (நன்னாகையார்) மீனவரினத்தின் மேன்மையையே பெரிதும்படம் பிடித்துக்காட்டுகின்றார்.

''புள்ளும் மாவும் புலம்பொரு வதிய
நன்னென வந்த நார்இல் மாலை,
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்,
வருவீர் உளீரோ?— எனவும்
வாரார்— தோழி!— நம்கா தலரே.''—நன்னாகையார்

வானொத்த மனம்! வெண்கடலொத்த பணம்! தன்னலமற்றகுணம்! இத்துணையும் சொத்தாய்ப்பெற்றசெல்வச் சீமான் ஒருவன் மீனவரினத்திலே தவழ்ந்தான்! தினமும் ஏழையரின் தேவைகளைத் தீர்த்து வைத்து, தெள்ளமுது உணவிட்டு, நல்லன பலவும் நல்கி வந்தான். கடலிலே வரும் செல்வத்தை இடரிலே வரும் இனத்தோர்க்கு ஒவ்வோர் நாளும் உவந்தளித்தான்— உள்ளம் களித்தான்! அவனின் அன்பிற்கு, அன்பளிப்பிற்கு, அமுதுணவிற்கு ஆயிரக்கணக்கோர் அன்றாடம் அங்கு வந்தனர்.

அதிலொருவன் பேரழகன்! பெண்களின் மென்விழிகளைத் தன்பால் ஈர்த்துப் பெரும்பாடு படுத்தும் திறம் படைத்தவன்

---

**மீன் பிடிக்கத்தான் வலை வீசுவோம்!-செல்வர் மனம் பிடிக்க வலை வீசோம்!**

---

விரிந்த மார்பும், வீரத் தோளும் ஒருங்கே பெற்றவன், இவன்பால், தேனினுமினிய மீனவனின் செல்வக் குமரிக்கு தெய்வீகக் காதல்! அவன் வருகைக்கு தினமும் விழிப்'பாய்' விரித்தாள்! அவன் குறிப்பை உணர்ந்தான்— பொறுப்பாய் வந்தான்!

ஒரு நாள்.........
'மலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ?''

ஒரே நேரத்தில் ஓராயிரம் பேர் போகக் கூடிய 'பேய்க் கதவு' வாயிலை காவலாளிகள் மூட முனைந்தனர்.—மூடினர். மூடியும் மனம் கேட்கவில்லை. யாராவது ஓடியோ—விரைந்தோ வரு கிறார்களா என்று மீண்டும் நீண்ட பார்வையை பாதையெங்கும் பரவ விடுகின்றனர். பயனில்லை.

பெருங் குரலெடுத்து 'வருவீர் உளீரோ?'' என்று வானதிர கூவுகிறார்கள். யாரும் வந்தாரில்லை! வாயிலை அடை கின்றனர்—காவல் சேவகர்கள்.

அந்தோ! ''எந்தன் இதயம் இன்னும் வரவில்லையே! தோழி! வாரார் போலும்!'' என்று துயறுருகின்றாள் கயல் விழிக்காரிகை.

நன்னாகையார் மங்கையரின் மனக்குமுறலைவிட மீனவரின் கொடைத் தன்மையையே பெரிதுபடுத்தி விரிவுபடுத்தி விளக்கு கின்றார்.

## பாண்டியனும் மீனவனே!

''பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்! என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே! (சிலம்பு)

'தான், செய்தது தவறு' என்று எண்ணியவுடனே மண்ணில் மடிந்த மாபெரும் மன்னன் பாண்டியன்- பைந்தமிழின் பண்பாட்டை பாராட்டும் விதத்தில் நாற்கோடி பொன் கொடுத்து, நூற்கடலை கரைகண்ட பாண்டியன் இமயத்தில் மீன்கொடி ஏற்றி, குமரியின் புகழை காவியமாக்கிய பாண்டியன், வேழத்தை வெல்லும் வேங்கை யாய் வீரத்தில் வாழ்ந்த பாண்டியன், இரவலர்க்கு அருவிபோல்

---

கூடி வாழக் கற்றிடுவோம்!
கோடிப் புகழைப் பெற்றிடுவோம்!

அளித்தருளிய பாண்டியன், புலவர்களுக்குப் பொன்னையும் பொருளையும் உடல் புல்லரிக்கும் விதத்தில் புன்னகையோடு கொடுத்த பாண்டியன், வீரத்தின் ஆழத்தை ஞாலத்தில் நடவு செய்த, விவேகந்தின் விளக்கத்தை விரிவாக விளக்கிய, சங்கம் கண்ட, சரித்திரம் கொண்ட பாண்டியன் மீனவரினத்தின்வழித் தோன்றலே என்று அறியும்போது என் இதயத்தில் அளவிட முடியா ஆனந்தம் அலை மோதுகிறது!

பாண்டியரைப் பற்றிய வரலாற்று இலக்கியங்கள் இன் தமிழில் சிலவே உள. சோழர், வரலாற்றைப் படிக்க மூவருலா, கலிங்கத்துப் பரணி, கலம்பகங்கள் போன்ற இலக்கியங்கள் துணை நிற்கின்றன, ஆனால் பாண்டியரைப் பற்றி அறிய பக்குவமான புத்தகங்க்ள் நமக்குக் கிடைக்கவில்லை.

ஒரு சில இலக்கியங்களும் 'சினமன்னூரர்' செப்புத்தகடுகளும், கல்வெட்டுகளும், 'மாங்குள' கல்வெட்டுகளும்தான் பாண்டியர் வரலாற்றை ஓரளவிற்குத் தெளிவுபடுத்துகிறது. தெளிவுபடுந்திய சின்ற சான்றுகளில் பாண்டியரை 'மீனவன்' 'கடலன்' என்ற பெயர்களில் அழைந்ததாக அறிகிறோம். ஆகையால் பாண்டியர் மீனவரினத்தான் எனபது திண்ணமாகிறது.

பாண்டியர் மீனவராய் இருந்ததால்தான் மீனை எங்கும், எதிலும், ஏற்றமாய் எழிற்செய்து பயன்படுத்தினான். ஆண்டவனை ஆராதனைசெய்யும் ஆலயங்களிலும், பாரம்பரியத்தைப் படம் பிடித்துக்காட்டுகின்ற பறக்கும் கொடியிலும். நாட்டினை நாட்டியமாக ஆட்டிப்படைக்கும் நாணயத்திலும், மீனையே பயன்படுத்தினர்-மீனைத்தங்கள் விருந்தாகக் கொண்டனர்.

## சூறளில் மீன்

உலக மக்களின் உள்ளத்திலே கள்ளத்தனமாகக் குடியேறி விட்ட, இடுக்கண் பலவற்றை அடுக்கடுக்காய் தொடுத்தளித்துத் துயர் கொடுக்கின்ற, நல்ல உள்ளத்திலும் நலிந்த எண்ணங்களை நடவு செய்கின்ற, மங்கமளாக மனைவியின்கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் தங்கத் தாலிக்கும் பங்கம் ஏற்படுத்துகின்ற, உயிருக்கு உயிரான நட்புக்கும் ஊறு விளைவிக்கின்ற, கடமைக்கு கடும் தடைக் கல்லாய் இருக்கின்ற' பன்நாள்பழகியபாசத்தையும் பாழாக்குகின்ற, நெருங்கிய உறவை நொறுக்குகின்ற, அன்பினை அளிக்கின்ற. அறத்தினைக் கெடுக்கின்ற சூதைப் பற்றி பாதை

துணிவு நமது தோழன்!
பணிவு தானே தேவன்!

தவறிய பாமர மக்களுக்குப் படம் பிடித்துக் காட்ட .'வள்ளுவர் மீன் பிடிக்கும் காட்சியை நினைவூட்டுகிறார்.

''வேண்டற்க வென்றிடினும் சூதினைத் தூண்டில்
பொன் மீன் விழுங்கி யற்று'' (குறள் : 931)

தூண்டிலிலுள்ள சிறு உணவை விரும்பித் தனது உடம்பையே சிக்க வைத்து செத்து மடிகிறது மீன். அதுபோலச் சிறிய வருவாயை எண்ணி பெரும் பொருளை இழந்து இன்னலுற வேண்டாம்! சில நேரங்களில் தொடர்ச்சியான வெற்றியாக இருப்பினும் அதனை விரும்பாதீர்கள்! முடிவு நன்மையை நல்காது எனவேண்டுகோள் விடுக்கிறார்,

நிலத்தில் வாழும் நிலைகுலைந்த மக்களைத் திருத்த நீரில் வாழும் மீனை உவமை காட்டி உவகை எய்துகிறார் செந்நாப் போதகர்.

நம்முடைய இனம் என்றுமே ஒற்றுமையாக வாழ்ந்ததில்லை. நம்மிடம் வேரூன்றி இருக்கும் வேண்டப்படாத செயல்கள், தாழ்வு மனப்பான்மைகள், தடுமாறும்எண்ணங்கள், தவிர்க்க முடியாத தப்பு அபிப்பிராயங்கள், என்று நம்மை விட்டு விலகுகிறதோ அன்று தான் நாம் ஒற்றுமையின் உண்மை உணர்வைஉய்யமுடியும்.

அன்று நம்மிடத்தில் ஒற்றுமை இருந்திருந்தால் மீனவ நாட்டை (பாண்டிய நாட்டை) சோழர்கள் ஆண்டிருக்கமுடியுமா? களப்பியர்கள் காலடி வைத்திருக்க முடியுமா? திராவிடச் சமுதாயத்தின் கொள்கையைக் காத்த நாம், திடமான தோளிருந்தும், வளமான உடலிருந்தும். பலமான படையிருந்தும். கடலான பொருளிருந்தும், தெளிவான அறிவிருந்தும் திறமான அரணிருந்தும், துணிவான செயலிருந்தும் ஒற்றுமை இன்மையால் ஒதுக்கப்பட்டவர்களாக ஓரத்தில் தள்ளப்பட்டோம் என்பதை ஒவ்வொருவரும் உள்ளத்தால் உணர்ந்து உறுதியான ஒற்றுமை உணர்வைப்பெற்று, அனைவரும் நமது சமுதாயம், எந்நிலையிலும் ஏற்றம்பெற்றே ஆகவேண்டும் என்ற உறுதியினை மேற் கொள்வோமாக.

---

**திறமை நம்மிடம் பல உண்டு! -கொஞ்சம்**
**தீட்டிப் பார்த்தால்பலனுண்டு!**

---

நம்முடைய மீனவர் இனத்தின் மேன்மையை, மேதினி போற்றும் கொடைத் தன்மையை சுற்றத்தின் ஒற்றுமையை ஒற்றுமையின் உயர்வை, உணர்வின் பிரதி பலிப்பை அகநானூற்றுப் பாடல் மிக அழகாக விளக்குகிறது.

''நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலைக்
கடல்பாடு அழிய இனமீன் முகந்து
துணைபுணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
..................
இரந்தோர் வறும்கலம் வேக வீசிப்
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுஉயர் திரிமணல் துஞ்சும்... ''

(வலந்த-கட்டிய; பாடு- பெருமைதுதுவன்றி- நெருங்கி கலம்-பாத்திரம்; மல்க—நிறைய; கொள்ளை—விலை; கோடு: கரை

வலைஞர் (மீனவர்) வலை சிறுசிறு கண்கள் உடையது, நீண்ட கயிறு கட்டப்பட்டது. அதைக்கொண்டு கடலின் பெருமை கெடுமாறு கூட்டமான மீன்களைப் பிடிக்கிறார்கள் பரதவ மக்கள். துணையேடு கூடிய, மகிழ்ச்சி உடையவராய், இளையோரும் முதியோருமாய்ச் சுற்றத்தோடு நெருங்கிப் பிடித்த மீன்களை இழுத்துக் கரையில் சேர்க்கின்றார்கள், அப்படிக் கரை சேர்த்த மீன்களை இரந்தவர்களுடையவறிய கலம் (பிச்சை கேட்போரின் பாத்திரம்) நிறையுமாறு மீன்களை அள்ளிக் கொட்டுகிறார்கள், பிறகுதான் மீன்களை கூறுகளாக அமைத்து விலை கூறி விற்கிறார்கள். பின் உயர்ந்தமணல் கரையில் தூங்குகிறார்கள்,

இரந்தோர் வரும்கலம் மல்க' மீன்கள்யாசிப்பவர்களின்பாத்திரங்களில்நிறைத்தபிறகுதான் மீதம்உள்ளத்தைகூறுகளாகஅமைத்து விலைக்கு விற்றார்களாம்? பார்த்தீர்களா? மீனவ இனத்தின் பரந்த கொடைத் திறனை. இரப்பவர்களுக்கு கொடுத்து மீதி இருப்பதை மட்டும்தான் விலை கூறி விற்றிருக்கிறார்கள்.

காற்றிலும், மழையிலும், பனியிலும், சுற்றம் யாவரும் துணிவுடன் தொழிலாற்றித் தேடிய மீன்களை முதலில் வாடிய வறியவர்களுக்கே வழங்கி அகமகிழ்கிறார்கள்.

---

**ஒற்றுமைப் படையைத் திரட்டிடுவோம்!**
**வேற்றுமைப் பேயை விரட்டிடுவோம்!**

---

பாரி வள்ளல், உண்மைதான்-அவன் மட்டும்! ஓரி வள்ளல், உண்மைதான் அவன் மட்டும்! ஆதனால் நம் இனத்தில் உள்ள அத்துணை மீனவனும் வள்ளலாக வாழ்ந்திருக்கிறான் என்பது விளக்கமாய் விளங்குகிறது, விரிவாய்த் தெரிகிறது. மேலும்

'கொடுந்திமில் பரதவர் வேட்டம் வாய்த்தென
இரும்புலாக் கமழும் சிறுகுடிப்பாக்கத்துக்
குறுங்கண் அவ்வலைப் பயபோ ராட்டிக்
கொழுங்கண் அயிலை பகுக்கும்...' அக.70
(கொடு-வளைந்த; திமில்-படகு; வாய்தென-வாய்த்த.
பாக்கம்-கடற்கரை ஊர்; பயப-பயன்)

பரதவர் வளைந்த படகில் சென்று மீன் வேட்டையாடு கின்றனர். வேட்டை கை கூடுகின்றது. புலால் மணம் வீசும் தம் ஊருக்குத்திரும்புகின்றனர். சிறுசிறு கண்களை உடைய அழகிய வலையின் பயனைப் பாராட்டுகின்றனர். தாம் பிடித்த கொடுமையான கண்களை உடைய அயிலை மீன்களை பலர்க்கும் பகிர்ந்து கொடுக்கின்றனர்.

நம் இனத்தோன் வலையை வீசிமட்டும் மீன்பிடிக்க வில்லை, பெரிய 'சுரா' போன்ற மீன்களைப் பிடிக்க சிறு சிறு உளிகளைப் பயன்படுத்தி வேட்டையாடியும் இருக்கின்றான். அப்படி வேட்டையாடிப்பெற்ற மீன்களை சற்றும் பாகுபாடு இன்றி சுற்றத்தாருக்கும் மற்றோர்க்கும் கொடுத்து மகிழ்ந்திருக் கிறான்.

நம் இனம்...
நம்பியவர்களைக் கைவிடாத,
நலிந்தவர்களை நசுக்கிவிடாத,
இரந்தவர்களை இழிவுபடுத்தாத,
வளமான-இனமாக இருந்தது கண்டு என் இதயம் இனங் காண இன்பத்தை இசை பாடுகிறது.



# கம்பன் கண்ட குகனும் மீனவனே

இன்று கம்பர் இயற்றிய இராம காவியம் சர்ச்சைக்குரிய சங்கதியாக சதிராடினாலும், அதன் சந்தத் தமிழை, எந்தத் தமிழனும் சந்தேகிக்க மாட்டான்! அந்த அளவிற்கு அதில் தமிழ் அசைந்தாடுகிறது — அர்த்தங்கள் இசைபாடுகிறது. ஆகவே கம்ப நாட்டாழ்வாரின் காவிய நாடகத்தின் காட்சிகள் சில வற்றில் மீனவர்களின் மாட்சிமையை விளக்க சாட்சியங்களாக கூறுகிறேன்!

இராமாயணத்தில்...

இதயத்தைக் கவர்ந்த இளவரசர்கள் எண்ணற்றவர்கள் இருக்கிறார்கள் (பரதன், இலக்குவன் சுமந்திரன் போன்றோர்) இருப்பினும், கவிச் சர்க்கரவர்த்தி தனிச் சிறப்புடன் புவிக்கு அறிமுகப்படுத்துவது-

---

**நம்மை நாமே புரிந்துகொண்டால்**
**நாடும் நம்மை புரிந்துகொள்ளும்!**

---

குகன் என்னும் ஆண் மகனையே!

கங்கை இரு கரையுடையான்
கணக்கிறந்த நாவாயான்... (கங்கை காண்படலம். 18)
'வனவாசம்' புகு என தந்தை தசரதன் உரைத்ததும்,

செடி அழ, கொடி அழ,
சின்னஞ் சிறிய கிளிகள் அழ,
கன்றும் பசுவும் கதறி அழ,
அன்று மலர்ந்த மலர்கள் அழ,
கல் அழ, கனி அழ,
புல் அழ, பூவுலகே அழ''

இராமன்மனைவியுடன் வனவாசம் போகும்வழியில், கங்கைக் கரையில் குகனைச் சந்திக்கிறான் அந்தச் சந்திப்பு நம்மை சிந்திக்க வைக்கிறது.

''குகன் எனப் பெயரிய, கூற்றின் ஆற்றலான்''. என்கிறார். குகன் என்று அழைக்கக் கூடியவன் 'எமனின், ஆற்றல் பெற்றவன் என்று கூறுகிறார். நம் இனத்தோன் அந்தக் காலத்தில் எந்த அளவிற்கு, வீரனாய் வாழ்ந்திருக்கிறான் என்பதை சற்று நோக்குங்கள்! குகன் பெற்ற வீரம் நம் நாட்டில் எந்த மகனும் பெறவில்லை. பகைவரை அழிக்க வல்ல 'எமனின் வீரம்' என்றார் கம்பர். தரணியில் தானைத் தலைவர்களாக மீனவர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு இது தக்க சான்று!

நட்பின் இலக்கணமாய், நாணயத்தின் பிறப்பிடமாய்,
நம்பிக்கையின் இருப்பிடமாய்-இருந்தான் குகன்!

வீரத்தின் விளக்க உரை, கரை ஓரத்தில் தான் பிறக்கும் என்று சொல்லாமல் சொல்கிறார்!

அரச குடியில் பிறந்த இராமன், தன் உடன் பிறப்புக்களை விட உயர்வாய் - உண்மையாய் நேசித்தது, படகோட்டிக் குகனையே!

ஆருயிர் அண்ணனையும், அருமை அண்ணியாரையும், அழைத்துச் செல்ல, அடலேறு பரதன் படையோடு வருகிறான்! பரதன் படையைப் பார்த்த பண்பாளன் குகன், 'போரிடத்தான் வருகிறான்' பரதன் என்றெண்ணி,

---

**பட்டம் பெற்ற கற்றோரே!-மீனவன்**
**பண்பு நிறைய பெற்றோரே!**

---

கண்களிலே கனல் தெறிக்க,
கட்டுடலில் வீரம் தடம் புரள
உள்ளத்திலே உணர்ச்சி பொங்க
உதட்டிலே பகைவரை உலுக்கிடும், வார்த்தைகள்
கொப்பளிக்க

'எலியெல்லாம் இப்படை, அரவம் யான்' என்று ஆர்ப்பரிக்கின்றான். ஆஹா! கம்பனின் குகனே! எம்குல மகனே, கோசலையின் பாசத்தைப் பெற்று, நேசமாய்! நேர்மையாய் வாழ்ந்த, குகனை கோசலை தன் மகனென்றே உரைக்கிறாள்; மன்னர்குடி மடந்தையின் மனதில் இனங் கடந்தப்பற்று ஊற்றெடுக்கக் காரணம்? மீனவனின் நாணயம்! நட்பின் வீரம்! வீரத்தின் விவேகம்!

''தாய்உரை கொண்டுதாதை உதவிய தரணிதன்னைத்
தீவினை என்னநீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்றைபோழ்து புகழினோய்தம்மை
கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேற் ஆவரோ?தெரியின் அம்மா!
(கங்கை காண்படலம் 28)

இராமாயணத்தில் இராமனை விட, இளவல் பரதனே, எல்லா வகையிலும் பெரும் புகழ் எய்துகிறான்! பரதனுக்கு இப்புகழ் வந்திடக் காரணம் நம்மின குகனே! பரதனை உயர்வு படுத்திக்கூற வேண்டும், உன்னத நிலையில் வைக்க வேண்டும் என்பது கம்பரின் நினைப்பு. யார் வாயிலாகக் கூறலாம் என்று சிந்திக்கிறார்! இலக்குவன் விளக்கினால் விளங்காது! சுக்ரீவன் செப்பினால்ஒப்பாதுஎனவே பரதனைப் பாராட்ட, பரதவர் இனத்தைச்சார்ந்தகுகன்தான் ஸ்ரீ பொருத்தமென்று எண்ணி, குகன்வாயிலாய்உரைக்கிறார் கம்பர்.

ஆயிரம் இராமர்கள் சேர்ந்தாலும் உனக்கு (பரதனுக்கு) ஈடாக மாட்டார்கள் என்று இயம்புகிறார்! சிறந்தவன் ஒருவனை அறிமுகப்படுத்தச் சிறந்தவன் குகனே என்று கூறுகிறார். கம்பர் குகன் வாயிலாக மீனவச் சமுதாயத்தின் புகழை வானளாவச் செய்து விட்டார்;

---

**புதுமையின் புகலிடம் நம்மினம்தான்!**
**வறுமையின் வார்ப்பும் நம்மினம்தான்!**

---

தமிழின் நல் காவியணம் கம்பனின் இராமாயண காவியமே, நம் இனத்தின் தோன்றலுக்கு இத்துணைச் சிறப்பு செய்தார் என்றால் அந்நாளில் நம்மவனின் நாணயம், வீரம், நட்பு எத்துணை உயர்ந்தது இன்று இத்துணை சிறப்பா னோர்களாக நாம் இல்லையா? இருக்கினறவர்கள் சமுதாய கண்களுக்கு தெரியவில்லையா? விளக்கம் காணாமல் திகைக்கும் என் போன்றோர்க்கு, நம் இனத்தவர்கள் தான் வழிகாட்ட வேண்டும்.



# நாவீறு படைத்த நக்கீரன்

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லாமல்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை''

என்று அப்பர் கூறிய கூற்றை, பறை சாற்றிய வெற்றி வீரர் நாவீறு படைத்த நக்கீரர். அப்பருக்கு முன்னாலேயே தமிழில் 'அப்பாவாக' வாழ்ந்தாரென்று அகிலம் நன்கறியும். நக்கீரரின் நாவசைப்பில் சிக்கார் யார்? எதற்கும் அஞ்சாமல் யாருக்கும் அடிபணியாமல் ஊருக்கு உபதேசம் செய்த உத்தமர்கள் சிலர் தான். அந்தச் சில மனிதர்களில் புகழுடன் வாழ்ந்த மாமனிதர் நக்கீரர்.

---

**மிதக்கும் தொழிலை நாம் அறிவோம்! பிறரை வதைக்கும் தொழிலை நாம் அறியோம்!**

---

''என்னை நன்றாய இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ்செய்யு மாறே!''

-திருமந்திரம்-

திருமந்திரத்தின் பெருங்கருத்தில் அருந்தமிழ் வளர்த்து, பெரும்புகழ் எய்தி, புவியில் வாழ்ந்த சுவைமிகு கவிஞர்—செந்தமிழ்ப் புலவர்.

மீனவர் இனத்தின், மிகப் பெரும் புலவன் :
பாவலர் இடையில், பெரும்படைத் தலைவன் !
செந்தமிழ்த் தாயின், சிங்காரப் புதல்வன் !
சிந்தனைத் திறத்தால், சீரிய கருத்தால்,சீறிடும் கவிஞன்!
சங்கறுக்கும் எங்கள் குலச் சங்கீதம்:
தன்னேரில்லா தனிப்பெரும் தமிழ் வேழம் !
மீன் பிடிக்கும் இனத்தில், தமிழ்த் தேன் வடித்த தேவன்
முத்தெடுக்கும் குலத்தில் முதலில் தோன்றிய தத்துவ விளக்கம் !
மூப்பிலாத் தமிழை, யாப்பியல் முறையில், மாபலா சுவையில்
ஆக்கித் தந்த அதிசய அறிஞன் !
நாவீறு படைத்த நக்கீரன் !

நாவீறு படைத்த நக்கீரரைப் பற்றி நூலறிந்தப்பாவலர்கள்பல கருத்துக்களைப் பறைசாற்றுகிறார்கள் ! தமிழகத்தில்—தமிழில்நான்கு நக்கீரர்கள், நடை போட்டிருக்கிறார்கள் என்று நவில்கிறார்ர்கள், பேராசிரியர் வையாபுரி பிள்ளை,!முதுபெரும் தமிழில் ''மூன்று நக்கீரர்கள் தோன்றினார்கள்'' என்று வேறொரு இடத்தில் அவரே விளக்குகின்றார். இன் தமிழ் காக்க-இயக்க இரு நக்கீரர்கள் இருந்தார்'' என்று போராசிரியர். அ. சிதம்பரநாதன் இயம்புகின்றார். நம்மிடம், எத்துணை நக்கீரர்கள் இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஏனெனில் நான் அந்த அளவிற்கு தமிழ் ஆய்ந்தவன் இல்லை. தெரிந்ததைத் தெரிவிக்கின்றேன். தவறு இருந்தால் மன்னிப்பீர்' பொதுவாக நக்கீரரைப் பற்றியும் அவர் கொண்ட கொள்கை பற்றியும் உரைக்கிறேன்.

---

**நெத்திலி போல வாழ்ந்தாலும்-மீனவன்**
**நேர்மையை மறவான்,**

---

நக்கீரர், குறுந்தொகையில் எட்டுப்பாக்களும்,
நற்றிணையில் ஏழு பாக்களும்,
அகநானூற்றில் பதினேழு பாக்களும்,
புறநானூற்றில் மூன்று பாக்களும்,
பாத்துப்பாட்டில் இரண்டு பாக்களும்,

களவியல் உரையும், அடி நூலும், நக்கீரர் நாலடி நானூற்ற வண்ணமும் 11-ஆம் திருமுறையில் ஒன்பதும் பிறவும் பாடியுள்ளார்.

குறிஞ்சியை எழுதிக் குவித்தார்- புகழைக் கபிலர்!
முல்லையைத் தீட்டி மேன்மையானார் ஒக்கூர்
மாசாத்தியார்!
மருதம் வரைந்து மகத்துவமடைந்தார் பரணர்!
பாலையைப் பாடி பாராட்டுப் பெற்றார்
பெருக்கடுங்கோ

ஆனால், நக்கீரரோ நெய்தல், பாலை இரண்டையும் நெய்து நீடு புகழ் அடைந்தார்?

ஒவ்வொரு புலவரும் ஒவ்வொரு நிலத்தைப் பற்றிப் பாடும்போது நக்கீரர் மட்டும் நெய்தலைப் பற்றி, அதிகம் பாடக் காரணம் என்ன? இங்கு தான் நாம் சிந்திக்க வேண்டும்: எந்த ஒரு மனிதருக்கும் சொந்த நிலத்தை-இடத்தை இனத்தை விட்டுக் கொடுக்கின்ற தன்மை-தரம் வராது. அதனால் தான் தனி இனம்-மீனவரினம் வாழும் நெய்தல் பற்றி அதிகம் பாடினார். இவர் மீனவர் என்பதற்கு இது ஒரு சான்று.

மேலும் இவர் குலம் 'சங்கறுக்கும் குலம்' என்று இவரே எடுத்துரைக்கிறார். சங்கை யார் அறுத்து அணி கலன்களைச் செய்வார்? கடலில் முத்தையும் சங்கையும், கொத்தி எடுக்கின்ற நம் மீனவர் இனமே இதையும் செய்யும். இன்னும் நம் மீனவர் சங்களுக்கு தொழிலை மேற்கொண்டு வருகிறது. இதில் எந்தவித அய்யப்பாடு இல்லை. நக்கீரனும் மீனவ இனத்தைச் சேர்ந்தவர்தான் என்று, சீராகத் தமிழ்படித்த செம்மல்கள் பலர் செப்புகிறார்கள்.

---

**வாழ்க்கைச் சிறக்க நீரில் உழைக்கின்றோம்!**
**ஒய்வு எடுக்க நிலத்தில் அலைகின்றோம்!**

---

இவருடைய இயற்பெயர் நக்கீரர் அன்று. கீரர் என்பதே இயற்பெயர். 'நல்ல' என்ற அடைமொழி சேர நல்-கீரர் நக்கீரர் ஆனார். 'கீர் கீர்' என இசைக்கும், சங்கு அறுக்கும் தொழிலை (மீனவர் தொழிலை) பெற்றமையால் கீரர் ஆயினார்.

நாவீறு படைத்த நாவலர் நக்கீரர், மதுரைத் தமிழ் சங்கத்தின் தலைவராவதற்கு முன், மற்றப் புலவர்களைப் போல் மன்னர்களையும், வள்ளல்களையும் கண்டு, தன் புலமையைப் புலப்படுத்தி பரிசில் பல பெற்று வாழ்ந்து வந்தார். அப் போது சோழ நாட்டில் பிடவூரில் வாழ்ந்த பெருஞ்சாத்தன் என்பவன் கொடைத்திறனையும்—கொண்ட பண்பையும் கேள்வியுற்றார்; காணப் புறப்பட்டார்.

வழியில் சில உழவர்களைக் காண்கிறார். உழவர்கள் கழனியை உழுது விட்டு, காளைகளைக் காடுகள் நிறைந்த பகுதியான முல்லை நிலத்தில் மேய விட்டிருந்தனர். மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. உழுத உழைப்பும், களைப்பும் தீர ஓரிடத்தில் அமர்ந்து உணவு கொள்ளத் தொடங்கினர். அப்போது அங்கு வந்து சேர்ந்தார்—தேனினும் இனிய மீனினப் புலவர்!

உழவர்களில் ஒருவன் அவரைக் கண்டதும் எழுந்து "ஐயா! தாங்கள் தொலை தூரத்திலிருந்து வருகிறீர் போல் தோன்றுகிறது! அமருங்கள்!" என்றான்.

"ஆமாம், நான் தொலை தூரத்திலிருந்துதான்..." என்று கூறிக்கொண்டிருக்கும் போதே இடைமறித்து ஐயா! அதை பிறகு பேசலாம், களைத்துக் காணப்படுகிறீர்கள், முதலில் களைப்பைப் போக்க உணவை உட்கொள்ளும், பின் உரையாட லாம்" என்றான்.

"உடல்தான் களைத்துப் போயுள்ளதே தவிர; உள்ளம் களைக்கவும் இல்லை, இளைக்கவும் இல்லை."

"பசியின் பக்குவம் பார்வையில் தெரிகிறது. முதலில் உண்டு விட்டு..."

"எனக்கா பசி? உங்களின் உயர்வான சொற்களையும்,

---

**உயர்ந்து வாழ உரமிடுவோம்!**

**உண்மையைக் காக்க உயிர் விடுவோம்!**

---

473.P
n89
119649

வளமான விருந்தோம்பலையும் அறிந்ததும் ஓர் ஓரத்தில் ஒட்டிக் கொண்டிருந்த பசியும் மறைந்துவிட்டது.''

''ஐயா, விருந்தினரை விடுத்து உண்பதா?'' என்று உழவனுக்கு, ''அப்படியானால் நீங்கள் உண்ணும்வரை ஓரிடத்தில் அமர்ந்து விட்டு பின் வருகிறேன்'' என்றார்.

''போகாதீர்! இதோ இது குறுமுயலின் இறைச்சி, இனிமையாக இருக்கும். இது வாளை மீனைப் பலவாறு பக்குவப் படுத்தி செய்யப்பட்ட அவியல்; இது பழஞ்சோறு; விரும்பியதை உண்ணுங்கள்.''

'உங்கள் அன்பைப் புறக்கணிக்க இயலவில்லை'' என்று சொல்லி உண்கிறார். உற்சாகம் கொள்கிறார், ஒய்வெடுக்கிறார். பின் நடக்கிறார், என்று புறநானூறு புகல்கிறது.

இவர் பாடிய பாடலிலேயே தனக்கிருக்கும் ''நா ருசியை'' சூசகமாக வீசுகிறார். விதவிதமான மீன்களைப் பதம் பார்த்து உண்ட இனத்தின் ''நா'' அல்லவா! இவர் மீன் என்று மொத்த மாய்ச் சொல்லவில்லை. வாளை மீன் என்று தனியாய்த் தெளிவாய் சொல்கிறார். இதிலிருந்து இவருக்கு மீன்களின் இனம் அனைத்தும் தெளிவாகத் தெரிந்திருக்கிறது என்று புரிகிறது. மீன் இனம் அனைத்தும் அறிந்தவர் யார்? மீனவர் மட்டுமே சாதாரண ஒரு புலவருக்கு மீன் இனங்கள் பற்றி வாதாட எப்படித் தெரியும்? ஆகையால் இவர் மீனவர் என்பதில் (நம் இனம் என்பதில்) எந்த ஒரு அய்யப்பாடும் இல்லை.

கீரர் ஏன் இந்த இடத்தில் வாளை மீனைக் குறிப்பிட்டார் என்றால், தன் பாட்டில் தன் நில (நெய்தல்) சிறப்பு மீனான வாளையைச் சேர்க்கா விட்டால் நம்முடைய மீனவரினம் நம்மை மதிக்காது- என்பதால் தான். கீரர் நெய்தல் நிலத்துக்காரரர் என்பதை எந்த இடத்திலும் மறந்து விடவில்லை. அதனால்தான் காதலை உரைக்கும்போதும்; கடமையைக் காட்டும் போதும், வீரத்தை விளக் ம்போதும், விவேகத்தை விரிக்கும்போதும் நெய்தலின் சிறப்பையே பாடினார். நெய்தல் நிலத்தான், மீனவ இனத்தான் எனபதை அவர் மறந்தாரில்லை.

---

**பிச்சை கேட்கும் மீனவன்**
**நிச்சயம் எங்கும் இல்லையே!**

---

எனவே அவர் கடற்தொழிலில் தனக்குள்ள புலமையையும் கடற் பெண்களின் (மீனவப் பெண்களின்) கட்டழகையும், ஒரு பாடலில் மிகச்சிறப்பாக பாடுகின்றார் நாவலர் நக்கீரர்.

> 'மாலிருள் நடுநாள் போகித் தன் ஐயர்
> காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு
> அவ்வாங்கு உந்தி அஞ்சொல் பாண்மகள்'

''ஆடவர் இதயத்தை ஆடவைக்கும், அணங்குகளும் அங்கலாய்க்கும், அழகிய வளைந்த இடையினையும் அமிழ்தினுமினிய அழகுச் சொற்களையுடைய மீனவப் பெண், தன் தமயன்மார்கள் கரிய இருளினையுடைய நடுஇரவில் சென்று, விடியலில் கொண்டு வந்த திரண்ட கோடுகளையுடைய வாளை மீன்களை விற்பதற்காகச் செல்கின்றாள்''.

கொடுமையான இரவிலே கடமையாற்றப் புறப்பட்டவர்கள், விடியலிலே வீடு திரும்புகின்றார்கள் என்று தன் அனுபவத்தை அழகாக அடுக்குகிறார். மீனவராய் பிறந்ததால்தான் இவருக்கு இத்துணை துல்லியமாக மீனவனின் வாழ்க்கை முறை தெரிந்திருக்கிறது. மீனின் பல்வகை இனங்கள் புரிந்திருக்கிறது. 'பாம்பின் கால் பாம்பறியும்' என்கிற முது மொழியை நிலை நாட்டி விட்டார்.

மேலே கூறிய பாடல் மருதத்தில் பாடப் பெற்றது. கீரனார் மருதத்தில் பாடும்போது கூட தன் நெய்தல் நில இனப் பற்றை சுட்டிக் காட்டாமல் விட்டுவிடவில்லை. கீரரைத் தவிர்த்து சங்கப் புலவர் எவரும் கடலின் தன்மை-தத்துவத்தை வடிவை-வளத்தை அழகை அருங்குணத்தை, சிறப்பை-செல்வத்தை, செம்மையை சுவையாகச் சொல்லியதில்லை.

மேலும் பாவையைப் பாடும் போதும், தன்னுடைய வேலையைக் காட்டாமல் விட்டு விட வில்லை. தான் மீனவர் என்பதை மீண்டும் மீண்டும் ஈண்டு நினைவுக்குக் கொண்டு வருகிறார். தான் பாடும் போது எப்படியாவது தன் இனத்தையோ—இடத்தையோ நுழைத்து விட வேண்டும் என்ற எண்ணம் இவர் இதயத்தில் இருந்தது என்பது எல்லோர்க்கும் எளிதாய் விளங்குகிறது.

---

**கல்வியைக் கண்ணாய் எண்ணிடுங்கள்!**
**கற்றதை எண்ணி நடத்திடுங்கள்!**

---

"விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து"
அகம் 227 (மணிமிடை பவளம்)

"மிகுந்த பொருள் நிலைபெற்றிருக்கும் பெருமை கொண்ட அழகிய நகராகிய, பெரிய உப்பங்கழிப் பக்கங்களையுடைய மருங்கூர்ப் பட்டினம்"

மிகுந்த பெருமை கொண்ட அழகிய மருங்கூர் என்று சொல்லி விட்டு விட்டிருக்கலாம். எப்படி விடுவார்? இவர்தான் இனப்பற்று—இடப்பற்று உள்ளவராயிற்றே! அதனால் தான் வலிந்து 'உப்பங்கழி' 'பட்டினம்' போன்ற நெய்தல் நில சொற்களை புகுத்தியுள்ளார். இல்லையென்றால் "சங்கறுக்கும் எங்கள் குலம்' என்று தைரியமாகச் சொல்லியிருப்பாரா?

"சங்கறுப்ப தெங்கள் குலம்
சங்கரனாருக் கிங்கேது குலம்— சங்கை
அறுந்துண்டு வாழ்ந்தாலும் வாழ்வோம்—அறனே
இரந்துண்டு வாழோம்! உன்போல்"

நக்கீரர் தன்னுடைய குலத்தை மட்டும் இங்கு குறிப்பிடவில்லை. தன்னுடைய இனத்தின் பண்பாடு, பாரம்பரியம், பக்குவம் இவை அனைத்தையும் விளக்குகிறார். 'இரந்துண்டு வாழோம்' என்று எவ்வளவு தலை நிமிர்ந்து உரைக்கிறார், நோக்குங்கள்.

மீனவன் என்றாவது—எங்காவது பிச்சை எடுத்திருக்கின்றானா? மீனவர் பிச்சை எடுக்கும் காட்சியைக் கண்டவர் யாராவது உண்டா? எந்த மீனவர் பகுதியிலாவது வட்டத்திலாவது, தொகுதியிலாவது, மாவட்டத்திலாவது பிச்சை எடுக்கும் மீனவர் இருக்கிறார்களா?

இல்லை—இல்லை—இல்லை.

கல்லெனத் திரண்ட தோளும், கட்டமைந்த மேனியும், வீரச்செருக்கும், சீரிய கருத்தும் இருக்கும்போது மீனவன் பிச்சை எடுப்பதை எப்படி விரும்புவான்? அறுதியிட்டுச் சொல்வேன்

---

**உழைப்பே நமது முதலாகும்!**
**ஒற்றுமைதானே சுகமாகும்!**

---

அல்லல் ஆயிரம் அடுக்கடுக்காக வந்தாலும் பிச்சை எடுக்கமாட்டான் எம் குலத்தோன்.

இத்தகு நாவீறு படைத்த நக்கீரன், நம் இனத் தோன்றல் நமக்கு முன்னோடி- நம் இன வழி காட்டி என்று பெருமை கொள்கின்ற நாம் இன்று நம் நிலை எந்த அளவிற்கு உள்ளது இந்நிலத்தில் என சிந்திப்போமாக.



# சிலம்பில் மீனவன்

வண்ணத் தமிழின் வசந்த காலத்தை,
வீரத் தமிழன் வாழ்ந்தகாலத்தை,
நீதியைத் தமிழகம் வணங்கிய காலத்தை,
நேர்மையை உலகு வாழ்த்திய காலத்தை

கூர்மையாய் அறிந்து கூறிய புலவர் இளங்கோவடிகளார், தான்இசைத்த சிலம்பில் நாயகனாக-நாயகியாகநம்மினத்தையே அறிமுகப்படுத்துகிறார். இதை யாரும் மறுக்க முடியாது... ஆனால் மறைக்கலாம்...

தடுக்கி விழும் இடமெல்லாம் இனம் உருவெடுக்கும் சூழல் அன்றையத் தமிழகத்தைத்தழுவியிருந்தது. அத்துணை இனங்கள் இத்தரையில் அன்று தவழ்ந்தது. அப்படித் தவழ்ந்த இனங்களில் இளங்கோவின் இதயத்தைக் கவர்ந்த இனம்- காற்றிலும் மழையிலும் பனியிலும் துணிவுடன் தொழிலாற்றும் தூயோர் இனமே!

இளங்கோவடிகள் எந்த இனம் எனபதை யான் அறியேன்! ஆனால் சிலப்பதிகாரச் சீமான் இளங்கோவின் பாத்திரப்

---

சிக்கனமாக இருந்திட வேண்டும்!-தெளிவாய்
சிந்திக்க அறிந்திட வேண்டும்!

---

படைப்புகளின் கதாநாயகர்கள் நம் இனம்தான் என்பதை நன்கறிவேன்! கற்புக்கரசி கண்ணகியின் தந்தை பெயர் 'மாநாய்க்கன்' என்று இருப்பதே மிகச் சிறந்தசான்றாக உள்ளது. மாநாய்க்கன் என்பது மா நாவிகன் என்னும் சொல்லின் திரிபு; மா- பெரிய; நாவிகன்- கப்பல் வணிகர்; (நாவாய்- கப்பல். நாவிகன்- கப்பற்றலைவன). மாநாவிகன் என்னும் பெயர் திரிந்து மாநாய்கன் என்று ஆயிற்று.

கடலின் தன்மை-வளமை-வள்ளம்-இயற்கையின் நிலைமை இவை அனைத்தும் அறிந்தவர்களால்தான் கடலில் சென்று தொழிலாற்றமுடியும். இதை அறிந்தஒரே இனம் நம்மினம்தான் கடலில் வணிகம் செய்த மாநாய்கன் மீனவச் சமுதாயத்தைச்சார்ந்தவனே என்பதில் எந்தவித அய்யப்பாடும் இல்லை. மாநாய்க்கனின் முன்னோர் அனைவரும் 'நாவாய்' வணிகர்களாக இருந்தனர் என்றே அறிந் தவர் தெரிவிக்கின்றனர். மாநாய்க்கனை 'மீனவன்' என்று சொன்னால் தீந்தமிழ் அறிஞர்களுர்குத் தீங்கா வந்துவிடும்? ஏன் தான் மூடி மறைக்கிறார்களோ!

கோவலனுடைய தந்தை மாசாத்துவன் மனையில், இணை யற்றச் செல்வம் இழைந்தோடியது. மாசாத்துவனின் முன் னோர்கள் இடர்களை எதிர்த்துக் கடலில் வணிகம் செய்து தங்கள் குடும்பத்தை செல்வச் சுடர்படரச் செய்தனர்.

கோவலனுடைய பாட்டனார் ஒருவர், நிறைவான பொருள் ஈட்ட கலன் ஏறிச் சென்றார். அப்போது, எதிர்பாராதவிதமாய் இயற்கை சதி செய்தது. கலன் கடலிலே சங்கமமாகிவிடும் நிலை ஏற்பட்டுவிட்டது. உடனே அவர் கடல் கடவுளாகிய மணி மேகலா தெய்வத்தை மனதில்வேண்டிக்கொண்டார். மணிமேகலா தெய்வத்தின் மகத்துவத்தினால் மடியாமல் மீண்டார். அதன் காரணத்தினால் கோவலன், தீதே அறியாக் காதல் தெய்வம், மாதவிக்குப் பிறந்த மழலைக்கு, மணிமேகலை என்னும் பெயர் சூட்டினான்என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

---

**சேர்ந்து வாழ வேண்டும்!-பணம்**
**சேர்க்கும் ஆவல் வேண்டும்!**

---

''மாமுது கணிகையர் மாதவி மகட்கு
நாம நல்லுரை நாட்டுதும் என்று
தாயின் புறாஉம் நகைமொழி கேட்டாங்(கு)
இடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்ட எங்கோன் முன்னாள்
புண்ணிய தானம் புரிந்தோன் ஆகலின்
நண்ணுவழி யின்றி நாள்சில நீந்த
இந்திரன் ஏவலின் ஈங்கு வாழ்வேன்
வந்தேன் அஞ்சல் மணிமே கலையாள்
உன்பெருந் தானத் துறுதி ஒழியாது
துன்பம் நீங்கித் துயர்கடல் ஒழியென
வீஞ்சையிற் பெயர்த்து விழுமன் தீர்த்த
எங்குல தெய்வப் பெயரீங் கிடுகென
அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்
மணிமேக லை' என வாழ்த்திய ஞான்று''

மேற்கண்ட பாடலின் மூலம் கோவலனின் மூதாதையர் கடல் வணிகம் செய்தவரே என்பதும் மீனவரினமே என்பதும் கண் முன் காட்சியளிக்கிறது.

கணக்கற்ற செல்வம் தனக்கிருக்கும் போது, உயிருக்கு ஊறு விளைவிக்கும் கடல் தொழில் எதற்கு- என்றெண்ணி, மாசத்துவன் தரை வணிகம் செய்தான் அதிலும் தன்னிகரற்ற செல்வம் திரட்டினான்,

கண்ணகியின் காவலனாம் கோவலன், கோவலனின் தேவதையாம் கண்ணகியும் மீனவர் இனமே என்பதில் எந்த ஒரு அய்யப்பாடும் இல்லை.

''கரியமலர் நெடுங்கண் காரிகை முன் கடல் தெய்வம்
சுட்டிக் காட்டி

அரியசூள் பொய்த்தார் அறன்இலர் என்று ஏழையாம்
யாங்கு அறிகோம், ஐயா?''

—சிலம்பு. கானல்வரி.

''சூடுங்குவளை மலர் போன்ற நீண்ட நெடிய கண்களை யுடையவள் எம் தலைவி. அவள் முன்னிலையில் தெய்வமாகிய

---

**நாணயத்தில் நேர் பிறப்பு!-மீனவன்**
**நம்பிக்கையில் மறு பிறப்பு!**

---

கடலைக் சுட்டிக்காட்டி, அவர் (கோவலன்) செய்த சூளுரை களையெல்லாம் பொய்யாக்கி விட்டார்'' என்று மாதவியின் தோழி சொல்வதாக அடிகளார் உரைக்கிறார்.

''கடலைப் பெண் தெய்வமாக மதிப்பவர்கள் மீனவர்கள். அப்படிப் பட்ட தெய்வத்தின் முன் சத்தியம் செய்தாய். தெய்வக் கடலின் முன் சூளுரைத்தவைகளை ஏன் தான் பொய்யாக்கி விட்டார்! நாங்கள் என்ன செய்யப் போகிறோம்'' என்று மாதவியின் தோழி வருந்துகிறாள்.

சிலப்பதிகாரக் காவியத் தலைவன் கோவலன் மீனவன் என்பதால், அடிகளார், சிலம்பின் அச்சாணியான 'கானல் வரிபில், மீனவர்களைப் பற்றியும், மீனவர்களின் வாழ்க்கைத் தரம் பற்றியும், வாழ்வினை அளிக்கும் வண்ணக் கடல் பற்றியும் வானளாவப் புகழ்ந்திருக்கிறார்—விரிவாக விளக்கியிருக்கிறார்.

மீனவர்களின் வாழ்க்கையோடு இவர் காதலை விளக்கும் விந்தையை நோக்குங்கள் :

''கடல்புக்கு, உயிர்கொன்று, வாழ்வன் நின் ஐயர்;
உடல்புக்கு, உயிர்கொன்று, வாழ்வைமன் நீயும்''
''கொடுங்கண் வலையால் உயிர்கொல்வான் நுந்தை,
நெடுங்கண் வலையால் உயிர் கொல்வை மன் நீயும் !''
''ஓடும்திமில் கொண்டுஉயிர் கொள்வர் நின்ஐயர்.
கோடும் புருவத்துஉயிர் கொள்வை மன் நீயும்''
—சிலம்பு கானல்வரி.

''உனது தமயன்மாரோ கடலிலே மீன்களைக் கொட்று வாழ்பவர்.

நீயோ, என் உடலுள் புகுந்து என் உயிரைக் கொன்று வாழ்கிறாய்.''

''கொடுமையான கண்களை உடை வலையினால்மீன்களை பிடித்துக் கொல்பவன் உன் தந்தை:

நீண்ட கண் வலையால் நீயும் என் உயிரைக் கொல் வாயோ?''

''கடலிலே ஓடுகின்ற படகினைத் துணையாய்க் கொண்டு உன் தமயன்மார்கள் மீன்களைக் கொல்வார்கள்;

---

**இருப்பதை உயர்வாய்
நினைப்பவன் உயர்வா !**

---

உன்னுடைய வளைந்த புருவத்தின் துணைக்கொண்டு என உயிரைக்கொல்வாயோ?'' என்று கடலைக்காட்டி காதலை உரைக்கிறார் அடிகளார்.

''பிரிந்தார் பரிந்து உரைத்தபேர் இருளின் நிழல்
இருந்து, ஏங்கி வாழ்வார்'

''பிரிந்து சென்றார் தலைவர், அவர் என்னுடன் இருக்கும் போது அன்பு மிகுதியால் அள்ளித் தெளித்த செல்ல வார்த்தைகளை எண்ணி, அவற்றின் நிழலில் (துணையில்) தனித்து வாழ்கிறேன்'' என்கிறாள். அப்படி வாழும்போது

'தீத் துழைஇ வந்த இச் செல்லல் மருள்மாலை
தூக்காது துணிந்த இத் துயர் எஞ்சு கிளவியால்
பூக் கமழ் காவில் பொய் சூள் பொறுக்க' என்று
மாக்கடல் தெய்வம்! நின்மலர் அடி வணங்கும்.

''பூமணம் கமழுகின்றசோலையிலே, இந்த மாலைப்பொழுது எனக்குத் தீயைப்போல சுடுகிறதே! என்னை இவ்வாறு இது வறுத்தும் என்று கருதாது, அவர் உரைத்த நன்மையான மொழிகளை உண்மையெனத் துணிந்தேனே! பெரிய கடல் தெய்வமே 'அவர் பொய் குளுரையைப் பொறுப்பாயாக' என்றுஉனது மலர்போன்ற திருவடிகளைப் பணிந்து வணங்குகின்றேன். எனக்காக இரங்கி, அவருக்கு யாதொரு தீங்கையும் தராதிருப்பாயாக'' என்று தெய்வக் கடலை வேண்டுகிறாள்.

தன் காதலன் தன்னைவிட்டு நீங்கியும்கூட, மாதவி காதலனை கடித்துரைக்கவில்லை-இழிவாக இடித்துரைக்கவில்லை. மாறாக அவன் எங்கிருந்தாலும் மங்காப் புகழுடன், மாளாப் பொருளுடன் மகிழ்ச்சியாய்இருக்கவேண்டும் என்றுதான் கடலை (இறைவனை) வேண்டுகிறாள். அவள் கடலை ஏன் தெய்வமாக வணங்குகிறாள்? மீனவ இனத்தைச் சார்ந்த கோவலனுடைய குடும்பம் கடலைத்தான் தெய்வமாக வழிபட்டது. அதனால் தான் பத்தினிப் பாவை, சித்திரப் பூவை, முத்தமிழ் கோவை

---

நாடு வாழ கரம் கொடுப்போம்! அதில்
நாமும் வாழ இடம் பிடிப்போம்!

---

கடலை தெய்வமாய் வழிபட்டாள்.

இத்தகு சிறப்பு நம் இனத்திற்கு உண்டு. காவியத்திலும் சிறப்பிக்கப்படும் இனமாக வாழ்கின்றோம், ஆக, இதில் இருந்து நாம் தெரிந்து கொள்வதெல்லாம் செல்வச் செழிப்

பிற்கும், பரந்த மனத்திற்கும். பெண் இன வீரத்திற்கும், வாதிடும் திறத்திற்கும் நம் இனம் என்றும் பின் தங்கியது இல்லை. தமிழின சமுதாயத்திற்கு வழிகாட்டியாக வாழ்ந்த நம் இனம் என்றும் ஏற்றத்தோடு வாழவேண்டாமா? வாழ வழியில்லையா? வாழ மறுக்கின்றோமா? என்ற சிந்தனை யினை என் இன மக்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.



# அதிபத்த நாயனாரின் அரும் பக்தி

''தேரா மன்னா செப்புவது உடையேன்
எள்அறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள் உறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர்நெஞ்சு சுடத்தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடிந்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே''

-வழக்குரை காதை-
சிலம்பு

''கற்றார் பயில் கடல் நாகைக் காரோணம்!''

-திருஞானசம்பந்தர்

''பாக்குத்தரித்து விளையாடும் பாலர்க்கு,
நாக்குத் தமிழுரைக்கும் நன் நாகை''

-காளமேகப்புலவர்

இத்துணைப் புகழ் பெற்ற நாகையில்-

அறுபத்து மூன்று நாயன்மார்களை அருந்தமிழில், அவனிக்கு அருளிய அரும்பெரும் புலவன் சேக்கிழார், நம் இனத்

---

**தொழிலால் தானே பிரிந்தது சாதி!-தமிழ்**
**மொழியால் தானேமலர்ந்தது நீதி!**

---

திற்குத் தனிப் பெருஞ் சிறப்பை அளிக்கிறார். அவர் செதுக்கிய செந்தமிழ் ஓவியம், நம் இனத்தின் சிறப்பை மிகத் தெளிவாக விளக்குகிறது.

அறுபத்து மூன்று நரயன்மார்களில் நம் அதிபத்த நாயனார் அதிசயிக்கத்தக்க நாயனார். பசுவுக்குத்தீங்கிழைத்ததால் தன் பாலகனையே தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனு நீதிச் சோழனின் சோழவள நாட்டில் தோன்றினார். நாகையிலே, நுளைப்பாடியிலே மீனவர் குலத்தில் பிறந்தார். நுளைப்பாடியில் நம் மீனவ இனத்தின் தலைவராய் இருந்தார். இவர் சொல்லுக்கு நம் இனமே தலை வணங்கியது.

இவர் சிவ பக்தியில் சிறந்தவர். 'சிவனின்றி யாருண்டு? என்கிற தத்துவத்தைத் தன் வாழ்நாள் முழுவதும் வேதமாய்க் கொண்டிருந்தார்.

''பெற்ற தாய்தனை மகன்மறந் தாலும்
பிள்ளையைப் பெறுந் தாய்மறந் தாலும்!
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல் மறந் தாலும்
கற்ற நெஞ்சங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவ ருள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே!''

என்று இராமலிங்கனார் பாடிய பாடலின் பொருளாய் பெருமான் வாழ்ந்தார்.

சிவ பக்தரான இவர், வலையில் கிடைக்கும் மீன்களில் முதல் மீனைச் சிவபெருமானுக்கென்று கடலிலே விடுவது வழக்கம். வலையில் ஒரே மீன் கிடைத்தாலும் அதனைச் சிவ பெருமானுக்கென்றே, இவர் கடலில் விடுவார். இப்படியே வாழ்வை நடத்திக் கொண்டிருக்கும்போது பெருமான் இவரிடம் விளையாடத் தொடங்கினார்.

சிவபெருமானின் திருவருளால் நாள் தோறும் ஒவ்வொரு மீனே கிடைப்பதாயிற்று. வழக்கம் போல் அதிபத்தர் அதனை;

உடலோ இரும்பு-மீனவன்
உள்ளமோ கரும்பு!

கடலில் விட்டு வந்தார். இதனால் இவரது செல்வம் மெல்லமெல்ல செல்லத் தொடங்கியது. வறுமைப் பிணியினை வாரி அணைத்துக் கொண்டார். இவரை நம்பி வாழந்த இனம் வாடியது. அப்போதும் இவர் அப்பனின் அடிகளை மறந்தாரில்லை-மனங் கலங்கினாரில்லை. வறுமையின் கொடுமையால் உடல் மெலிந்து உருக்குலைந்து போனார். நிலைமையை எண்ணி, நினைவை மாற்றிக் கொள்ளவில்லை. வறுமைக்கு வருத்தப் படவில்லை; சிவபத்தியில் தளர்ச்சியடையவில்லை!

ஒரு நாள் வலையில் நவரத்தினப் பொன் மீன் ஒன்று அகப் பட்டது. அது கண்ட மீனவர்கள் வியப்பில் மிகுந்து ஆனந்தத்தில் மூழ்கினர். வலையில் அகப்பட்ட அந்த நவரத்தினப் பொன் மீனை அதிபத்தர் முன்னிலையில் கொண்டு வந்தனர். அதைக் கண்டு 'இஃது பொன்மீன்' உறுப்புக்களிலும் நவமணிகள் அமைந்திருக்கின்றன இது சிவபெருமானுக்கு ஆகுக, என்று அதனையும் கடலில் விட்டார்.

அப்பொழுது சிவபெருமான் நாயனாருக்குக் காட்சியளித் தார். நாயனார் அகங்குழைந்து சிவபெருமானைத் தொழுதார். சிவபெருமான் அவருக்குச் சிவலோக வாழ்வு தந்தருளினார்.

இதனை கீழ்க்கண்ட பாடல் விளக்குகின்றது.

''அல்லயாருங் கடல் நாகை நகருள் வாழும்
அதிபத்தர் பரதவர்கள் அதிபர் வேலை
வலைவாரி வருமீனில் தலைமீன் ஈசன்
வார்கழற்கே என்று விடும் மரபார் பன்னாள்
தலையான தொருமீனே சார நாளுந்
தந்தொழிலால் விடுத்துமிடி சாரச் செம்பொன்
நிலையாரும் மணிநயந்த மீனொன் றெய்த
நீத்தருளால் இறைவனடி சேர்ந்துளாரே.

நம் இனத்தின் மிகப் பெரும் பக்தர் அதிபத்தர். செல்வட சீரழிந்து, உடல் வலுவிழந்து சுற்றத்தின் நிலை மறந்து சுவையான உணவிழந்து வருந்திய நாளிலும்-வாடிய வேவை

---

**வறுமையின் வார்ப்பகம்-மீனவன்**

**பெருமையின் பிறப்பிடம்!**

---

யிலும், சிவனையே நாடினார்-சிவனடியையே தேடினார். அகப்பட்ட நவரத்தினப் பொன் மீனையும் சிவனுக்கே அளித்துக் களித்தார். என்னே அவர் சிவ பத்தி !

''மீனவ இனத்தின் மகத்துவம் உரைத்த
தேவனே வாழி''

பொருளாதாரத் துயரத்தில் துவண்டுள்ள தூயோவின் தீர்க்கமான பக்தியை பரிசோதிக்கப்பாராளும் பூபதி. புதிய வழி ஒன்றைக்காண்கிறார். ஒவ்வொரு நாளும் நம் பக்தனுக்கு, ஒரு ஒரு மீனைத்தான் அளிக்கிறோம். அதையும் அவன் மனக்கவலை இன்றி எனக்கே அளிக்கிறான். 'இன்று விலை மதிப்பற்ற, நவ ரத்தினப் பொன் மீன் ஒன்றை அளித்துப் பார்க்கலாம். அதை அவன் எனக்கிளிக்கிறானா ? இல்லை அவன் எடுத்துக் களிக்கிறானா ?, என்று பரிசோதிக்கிறான், பார் காக்கும் வேந்தன்.

வறுமையின் கொடுமை உயிர் பறித்தாலும் விடுவாரா அதிபத்தர், சிவ பத்தியை ! நாமாக இருந்தால் வறுமைக்கு வணக்கம் சொல்லிவிட்டு, அருமையான வாய்ப்பை அணைத்துக் கொண்டிருப்போம். ஆனால் அதிபத்தர் மண்ணை விட பொன்னை விட, தன்னை விட சிவனையே நேசித்தார், நவ ரத்தினப் பொன் மீன் மீது கவனம் செலுத்தாமல், சிவன் மீதே கவனம் செலுத்தி மீனைக் கடலில் விட்டார். அதிபத்தரின்

ஆழமான ஆணித்தரமான அன்பை சிவன் போற்றி, அவர் முன் காட்சியளித்தார், தவமுனிவர் அதிபத்தருக்கு, சிவலோக வாழ்வு தந்தருளினார்.

பெரியபுராணத்திற்கே பெருமையைத் தேடித்தந்த பெருந்தகை நம்மின அதிபத்தர்.

மேற்கண்டவாறு அதிபத்தரின் கடவுள் சிந்தனையில் இருந்து நாம் அறிவதெல்லாம், எந்த அளவிற்கு துன்பங்கள் நேரிடினும் எதிர்த்து நிற்கும் திறன் நம் இனத்திற்கு உண்டு. மனத்தடுமாற்றம் எந்நிலையிலும் எழாது. இரக்க குணத்திற்கு எல்லை தான் நம் இனம், என்பது தெள்ளதெளிவாக இதன் மூலம் காண்கின்றேன். நம் இன முன்னோர்களின் நிலை இது! இன்றுள்ள நிலை மேலும் வளர்ந்ததாக இருக்கவேண்டும் என் இன மக்கள்; என நான் நினைப்பதில் தவறில்லை என கருதுகின்றேன்.

---

**களைப்பை அறியா உழைப்பாளி!-மீனவன்**
**கடலில் வாழும் கொடையாளி!**

---

# சிந்தனைச் சிற்பி

# சிங்கார வேலனார்

சிதறிய சமுதாய சமதர்மம் சீரடைய,
உதவாத மதச் சடங்குகள் ஒழிந்து போக,
தீண்டாமை தென்னகத்தில் தேய்ந்து அழிய,
பொதுவுடமை பூக்காடு புதுமணம் பெற
காலதேவன் ஈன்ற மாயப் புதல்வன்
ம. வெ. சிங்காரவேலனாரை அறியாத அரசியல்
வாதிகள் அகிலத்தில் இல்லை எனலாம்!
மீனவ இனத்தின்
வான நிலவாய், வண்ண மலராய்
தென்றல் காற்றாய்,
அறிவு ஊற்றாய், அமைதி உருவாய்
1860- இல் சென்னை மயிலையில் மலர்ந்தார்.
மாற்றார் போற்றிட, கற்றார் கல்வி,
பெற்றார் பட்டம்!
வழக்கறிஞராகப் பட்டம் பெற்ற இவர் சமூக
நன்மைக்காக மட்டுமே பாடுபட்டார்.

ஆத்திகத்தின் ஆதிக்கம் அடியோடு அழிய- ஒழிய வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார், ப.ஜீவானந்தம், குத்தூசி குருசாமி, அ. பொன்னம்பலனார் போன்றோர்களுக்கு ஆசானாக இருந்து நாத்திகத்தை நாட்டில் வளர்த்தார். இவர் இயற்றிய...

---

**ஏழ்மையின் இதய வாசல்!-மீனவன்**
**பழமையின் பள்ளி வாசல்!**

---

'கடவுளும் பிரபஞ்சமும்'
'சுயராஜ்யம் யாருக்கு?'
'சிங்கார வேலரின் சொற்பொழிவு'
'அரசியல் நிலைமை'
'பொதுவுடமை விளக்கம்'
'மெய்ஞானமும் மூடநம்பிக்கையும்'

-போன்ற சமூக விழிப்பு நூல்கள் காலத்தால் அழிக்க முடியாத காவியங்களாக காட்சியளிக்கின்றன. இத்தகு புத்தகங்கள் வெளிவர தோழர்நாகை. முருகேசனார்காரணமாக இருந்தார்.

அன்னைத் தமிழை அழகுற உரைப்பதில் ஒப்புவமை இல்லா உயர் மனிதர். தந்தை பெரியாரிடம் கொண்ட நம்பிக்கையால் 'குடி அரசு' ஏட்டில் அடிக்கடி கட்டுரைகள் பல வடித்துவந்தார்.

சுந்தரத் தமிழை, மந்திர மொழியில், சந்தன மணத்தில், தந்திடும் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலனார் சிறந்த பேச்சாளராய், சிம்மாசன எழுத்தாளராய் இருந்தார் என்பதற்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன.

அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வன்!
அரசியல் ஆசான்!
அன்பின் ஆலயம்!
அடக்கத்தின் ஓவியம்!
அமைதியின் பிறப்பிடம்!
அறிவின் இருப்பிடமாகிய நமது அண்ணன்
சிந்தனைச் சிற்பி பற்றி,

''இவர் ஒரு பார்ப்பனராய் பிறந்திருந்தால், மாஸ்கோவில் இவருடைய சிலை அமைக்கப்பட்டிருக்கும்'' - என்று பெரியார் கூறுகிறார். சமகால பெரியோர்கள் போற்றும் அளவிற்கு சிறப்புடன்வாழ்ந்தவர் ஆவார்.

எழிலான வாழ்வு தொழிலாளர் எய்திட, பத்து ஆண்டு சிறைத் தண்டனையை சொத்தாகப் பெற்றார். உழைக்கும் வர்க்கம் உயர்வு பெற்றிட அழைப்பே இன்றி தானே முன்வந்து

---

**உழைப்பின் இமயம்-மீனவன்**

**உண்மையின் உருவம்!**

---

அனைவரையும் ஒன்றிணைத்து முதன் முதலில் தொழிலாளர் பேரவையை (யூனியன்) 'பக்கிங்காம்' மில்லில் (நூற்பாலை) தொடங்கி வைத்து தொடர்ந்து தொண்டாற்றி இன்னல் பல ஏற்றார்.

பகுத்தறிவு என்னும் புதுமுறையை நாட்டிற்கு நன்முறையில் தொகுத்தளித்து உயர்புகழ் வகுத்துக்கொண்ட வேலனாரின் பகுத்தறிவு சித்தாந்தங்கள் சிந்தனைக்கு புதிய வித்துக்களே! பகுத்தறிவு பற்றியும்,சமதர்மம்பற்றியும் மதங்களின் மடத்தனம் குறித்தும் இவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் தேனினும் இனிய சுவையாகும்.

அவைகளில் சிலவற்றை நோக்குவோம்.

''பகுத்தறிவின் தன்மை என்ன? எல்லா விஷயத்திலேயும், பகுத்திறிவை உபயோகித்தல். எங்கே கொடுங்கோண்மை தண்டவமாடுகிறதோ, அங்கே பகுத்திறிவு எதிர்த்துப்போராடும். எங்கே சுதந்திரத்திற்கு அபாயம்நேரிடுகின்றதோ அங்கே பகுத்திறிவு இத்யாதி அபாயத்தைச் தடுக்கச் செல்லும். எங்கே பசியும், பிணியும் வறுமையும், அறியாமையும் வறுத்துகின்றனவோ! அங்கேயும் பகுத்தறிவு, பசித்தோருக்கும், வருந்துவோருக்கும் உதவி புரிந்து நிற்கும். இவைதான் உண்மையான பகுத்தறிவின் அடையாளம். மற்றவைகளெல்லாம் போலி பகுத்தறிவே.''

ஒவ்வொரு மதமும் முதலாளியை ஆதரிக்கிறது உயர்வு தாழ்வை ஆதரிக்கிறது. இதுபோன்று ஆயிரக்கணக்கான அருங் கருத்துக்களை அவனிக்கு அள்ளித்தந்துள்ளார், சிந்தனைச் சிற்பி:

ஆரிய இனத்தின் அரும்பெரும் தலைவராக இராசாசியை நேசிக்கிறார்கள். அரிசன இனத்தின் அவதாரப் புருஷராக அம்பேத்காரை வாழ்த்துகிறார்கள். வணங்குகிறார்கள்; ஆனால் மீனவ இனத்தின் சீதனமாகப் பெற்ற மேதை ம. வெ. சி. யின் கருத்துக்களை நாம் என்றும் நினைத்ததுமில்லை, படித்ததும் இல்லை ஆதரித்ததுமில்லை. நினைத்து பார்த்தால், இந்திய சரித்திரத்தில் இம· ாய் இருக்க வேண்டிய பெருமகனாரை தெருமகனாக ஆக்கியது நம்முடைய பொறுப்பற்றதனமான முரண்பாடுகளே! பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஏசுவாக-

---

**தலைவரின் கொள்கை என் உயிரே!—என்**
**நிலை உயர்வு அவர் அருளே!**

---

-புத்தனாக-காந்தியாக காட்சியளிக்க வேண்டிய கதாநாயகன் இனக் காழ்ப்புணர்ச்சியின் !காரணத்தால் சாதாரண மனிதராக ஆக்கப்பட்டுவிட்டார். இதை நாம் இன்னமும் புரிந்துகொள்ள வில்லை. என்று நம்மிடையே இன ஒற்றுமை ஏற்படுகிறதோ, அன்றுதான் நம் சமுகத்தில் சம அந்தஸ்து அடைவோம். நம்மினத்தின் பெருமையை நம்மவர் திறமையை நாம் நன்றாக ஆய்ந்து அறிந்தால் தான்நாடும் நம்மை நாடும் நம்மோர் புகழ் கூடும்.

தமிழிலே எந்த அளவிற்கு தேர்ந்த, தெளிந்த திறன் இருந்ததோ அதேபோல் ஆங்கிலத்திலும் அதிசயிக்கத்தக்க ஆற்றல் பெற்றிருந்தார். 'லேபர் கிசான் கெஜட்' என்கிற ஆங்கில நாளிதழில் துவண்டுவிட்ட தொழிலாளர் துடிப்புக் கொள்ள, நலிந்துபோன சமுதாயம் நிமிர்ந்து வாழ, நித்தமும் புத்தம் புதிய கருத்துகளை அள்ளித் தெளித்து, அழியாப் புகழை எய்தினார்..

பொதுவுடைமை இயக்கத்தை இந்த மண்ணுக்கு அறிமுகப் படுத்திய முதல் மனிதர் இவர்தான் என்று பல அறிஞர்கள் அறுதியிட்டு தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். இரா. குசேலர் சொல்கிறார் ''பொது உடமை கட்சியின் ஆரம்பகர்த்தா'' இவரென்று. நாகை தருமன் நவிலுகிறார்' The Fi rst Communist in India'' என்று மீனவத் தோழனால் இந்த மண்ணுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பொதுவுடமை இயக்கம், தொழிலாளர் மத்தியில் தழைத்து ஓங்கி வளர்ந்திருக்கிறது. ஆனால் பொது வுடமை இயக்கத்தை அறிமுகப்படுத்திய அறிஞரை மக்கள் அவ்வளவாக அறிந்து கொள்ளவில்லை, காரணம் என்னவென்று எண்ணுகின்றீர்கள்? இவர் மட்டும் ஆரிய இனத்திலோ, அரிசன குலத்திலோ, தோன்றியிருந்தாரானால், உலகமே வியக்க விழா எடுத்துப் போற்றிப் புகழ்ந்திருப்பார்கள்; மீனவன் என்கிற ஒரே காரணத்தால் இந்த சமூகம் அவரை எந்த அளவிற்கு மூடிமறைத் துள்ளது என்பதைப் பார்த்தீர்களா? துணிவான இனமே! இனியாவது திருந்து!

ஜெர்மன், பிரஞ்சு, இரஷ்ய மொழிகளில் வல்லமை மிக்க சொல்லாற்றல் பெற்ற இவர், எண்ணூறு ஆண்டுகள் செய்ய வேண்டிய சமுதாயப் பணியை-பகுத்தறிவு பாடத்தை பொதுவுடமை போதனையை எண்பத்து ஆறு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து செய்து காட்டினார்.

---

**ஏனோ நாட்டில் பிறந்திட்டோம்?—இப்படி**
**ஏழ்மையில் வளர்ந்திட்டோம்!**

---

பொதுவுடமைப் பூங்கா மரண மடைந்த போது மூதறிஞர் இராசாசி அவர்கள்,

''யோக்கியர்களில் ஒருவர் மறைந்து விட்டார்''. என்று சொல்லி வருத்தப்பட்டார். ம. வெ. சி. யை பக்குவமான பகுத்தறிவு வாதியாகப் பார்ப்பதை விட, சிறந்த தொழிலாளர் தலைவராகச் சொல்வதை விட, சீர்த்திருத்தவாதியாகக் காண்பதை விட மிகப் பெரும் நாணயவாதியாக, நேர்மையின் வாரிசாகத்தான் கண்டு ரசிக்கிறார், பொது வாழ்க்கையில் நேர்மையை தெய்வமாய் எண்ணி வாழ்ந்திட்டார் என்று தெளிவாய்த் தெரிகிறது.

விளம்பரத்தை விரும்பாத விந்தை மனிதனாய் நம் தந்தை ம. வெ. சி. விளங்கினார் என்பது வெள்ளிடைமலையாகும். அதன் விளைவு தான் அவரை எவர் என்று கேட்குமளவிற்கு ஆகி விட்டது.

இவரைப் போன்று எழுத்து வேந்தரை; இலட்சியவாதியை பகுத்தறிவுப்பாசறையை; பொதுவுடமைப் பூங்குயிலை. தன்னலமற்ற தனிப்பிறவியை; தளராத உள்ளத்தை, தங்கமான இதயம் கொண்ட ஏந்தலை, அன்னிய நாடுகளோ இந்தியப் புவியின் பிற பகுதிகளோ பெற்றிருந்தால் நம் துறையில் பயன்படுத்தி நன்மை பல பெற்றிருக்கும்.

முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், சிந்தனைச் சிற்பியைப் பற்றி ''தோழர் ம. சிங்காரவேலர் முன்னோடி எழுத்தாளர் மட்டுமல்ல; பேச்சாளரும் கூட இரண்டு ஆற்றல்களையும் மக்கள் தொண்டிற்குப் பயன்படுத்தினார், பல்லாண்டு தொண்டாற்றினார். இன்னல்களைப் பொருட்படுத்தாது, எப்போது என்று அங்கலாய்த்து சோர்வடையாமல் வாழ்நாள் முழுவதும் சமதர்மத்திற்கும்; நாத்திகத்திற்கும் தொண்டாற்றினார்'' என்று கூறுகின்றார்.

---

**கொடுக்கும் பழக்கம் நமக்குண்டு!—பிறரைக்**
**கெடுக்கும் பழக்கம் நமக்கில்லை!**

---

''கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய ருசியும்
நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்''.

என்னும் பாரதிதாசன் பாடலுக்குச் சோதனை ஏற்படாமல், இந்திக்கு ஆராதனை காட்டாமல், தாயாம் தமிழை தன்போல் காத்தார்! வெண்தாடி வேந்தருடன் இணைந்து, ஈரோட்டு திட்டத்தைச் சீறாக நடத்தி நற்றமிழ் அன்னைக்கு நலம்பல அளித்தார். சிங்காரத் தமிழ் பாடல் என்றும், மங்காமல் இருக்க, சிங்கார வேலனார் சிங்கநிகர்ப் புலவர் பாரதியின் பாடலை, பாரெங்கும் பரவ நல்ல பல கருத்துக்களை பாரதிக்குப் போதித்தார்.

சுதந்திர உணர்வைச் சுவையாய் உரைக்க, அடிமைத் தனத்தின் கொடுமையை விளக்க, நம்மில் ஒற்றுமை என்றும் நிலைக்க, தரணியெங்கும் தாய்த் தமிழ் தழைக்க அவர் உழைத்த உழைப்பை எப்படி விளக்க இயலும்!!

'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்று பாரோர் போற்றும் பாக்கடல் பாரதியின் நடையை வளர்த்துப் புதிய கருத்தை முதன் முதலில்பிரச்சாரம் செய்ய ஒரு புது நடையைக் கையாண்ட நாயகன் இவரே! பாரதியின் ஏற்றத்திற்கு ஏற்றம் தந்தவர் இவரே!

பாரதியின் வளர்ச்சியில் சிந்தனைச் சிற்பிக்கும் சீரிய சிறப்புண்டு!

ஆங்கிலச் சொல்லின் நுட்பமான பொருளை, பாமர மக்களும், பாட்டாளி வர்க்கமும், விளக்கமாகப் புரிந்துகொள்ள புதியதாக சொற்களை உருவாக்கினார். தன் எண்ணத்தில் எழுகின்ற திண்மையான கருத்தை, விளக்கக்கூடிய வண்ணச் சொல்

---

**பொன்னும் பொருளும் விரும்பவில்லை!-- மீனவன்**
**எண்ணும் எண்ணம் அரும்பவில்லை!**

தமிழில் அகப்படாவிடில் ஆங்கிலம் அல்லது பிரஞ்சு அல்லது வடமொழிச் சொல்லை நயத்துடன் கையாண்டார்.

இதயநாடிகளில் இசை பாடும் கருத்தை கல்லார்க்கும் கற்றோர்க்கும் விளங்க வைப்பதையும், எளிமையாக சொல்வதையுமே, அவர் நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தார்.

ஏழை எளியோர் வறுமை களைய ஆழமாய்ச் சிந்தித்துக் கொள்ளைச் சுரண்டலை கூண்டோடெதிர்த்து, வெள்ளையன் ஆட்சியில் வெஞ்சிறை ஏகிய, அஞ்சா நெஞ்சனே! உனக்குச் செலுத்த வேண்டிய அஞ்சலியை-மரியாதை-மாண்பை ஏன் தான் தமிழகம்-தமிழினம்-மறைத்தது? மறந்தது?


என்னவனே!

இனியவனே!

மீனவனே!—இதை இதயத்தில் பதிய வைத்து, புதிய விதியாக—

''இனப்பற்று அற்றவன், 'பிணத்திற்குச் சமம்!''—என்கிற சித்தாந்தத்தை பின் பற்றினால்தான் நம்மினம் வாழ முடியும்—வளர முடியும்.

நம் இனத்தான் ஒருவன் பணத்தால், புகழால் உயரும் போது, அவன் அறியாமல் செய்யும் குற்றங்களை பெரிதாய் எண்ணாமல் அவனை மன்னிக்கவும்-குற்றங்களை மறக்கவும் பழகு! அப்போதுதான் எல்லோரும் நம்மினத்திற்குத் தனி மாரியாதை தருவர். இல்லையென்றால் எவ்வளவுதான் அறிவிருந்தாலும், ஆற்றலிருந்தாலும், திறனிருந்தாலும், தியாகமிருந்தாலும், ஆழ் கடலில்தான் நாம் தள்ளப்படுவோம்!



# நடைமுறையில் பொதுவுடமை

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன்!''

—தாயுமானவர்.

என்ற தத்துவத்தில் தன் வாழ்க்கையை பிணைத்துக்கொண்ட இணையில்லா இதயங்கள், கால தேவனின் கடும் பகையால் கோலமிழந்து வாழ்ந்தாலும் கொள்கை விடாமல் வாழ்கின்ற நம் இனத்தின் சமத்துவம், பொதுவுடமை மிகமிகப் புதுமையானது- தொன்மையானது.

இன்று, நம் தலைவர்கள் அரசியல் மேடைகளிலும் பேச்சுக்களிலும், ஏன்! புத்தகங்களிலும், உழைக்கும் வர்க்கங்களிடமும் புதுப்புது விதமாய் பொதுவுடமையைப் புரியவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

'ஏகங்ல்ஸ்' எழுதிய எழுச்சி மிகு எழுத்துக்களையும், 'மார்க்ஸ்' எழுதிய மனங்கவரும் கோட்பாடு 'ஸ்டாலின்'

**கல்வி ஒன்றே நம் உயர்வு!—இனக்**
**கட்டுப்பாடே பெரு வாழ்வு!**

உரைத்த உணர்ச்சி மிகு பேச்சுக்களையும், மக்கள் மத்தியில் வைத்துப் பொதுவுடமைக்குப் புது வலிவு ஊட்டி வருகின்றார்கள். ஏங்கல்ஸ் எழுதுவதற்கு முன்னே, மார்க்ஸ் மொழிவதற்கு முன்னே, ஸ்டாலின் கூறுவதற்கு முன்னே பொதுவுடமை தத்துவத்தை பன்னூறு ஆண்டுகளாய் நம் இனத்தோர் கண்ணென போற்றிக் கடைபிடித்து வருகின்றனர்: ''புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட, போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம், பொதுவுடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம், புனிதமோடதனை எங்கள் உயிரென்று காப்போம்'

—என்று முழங்கிய பாவேந்தரின் பாடலுக்கு விளக்க உரையாய், விரிந்த பொருளாய், வாழ்க்கை வாழும் மீனவன்; மீன்பிடிக்கப் பத்துப் பேர் சென்றால் பத்து பாகம் வித்தியாசமின்றி, வேறுபாடு இன்றி சமபங்கு போடும் கொள்கையை மீனவன் என்றும் மறவான். பெரியவர், சிறியவர் என்ற எண்ணமோ, இருப்போர் இல்லார் என்ற கருத்தோ, ஒரு போதும் கொள்ளாமல், வருவதை நிகராக வகுக்கும் வழக்கம் வலைஞர்கள் பழக்கம்.

வலையிலே ஆறு மீன்கள் கிடைத்தாலும், ஆயிரம் மீன்கள் சிக்கினாலும், சரியாக, பாகம் பிரித்துக்கொள்ளும் வழக்கம் அன்று தொட்டு இன்று வரை நம்மிடம் உள்ளது. நம்மோர் பொதுவாகப் பிரித்துக்கொள்ளும் பழக்கத்தைப் பார்த்துதான் 'மார்க்ஸ்'சும் 'ஏங்கல்சும்' பொதுவுடமைத் தத்துவத்தை நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார்களோ! என்று எண்ணம் என்னுள் எழுகிறது.

அரசியல் அறிஞர்கள் அலசுகின்ற பொதுவுடமைச் சித்தாந்தத்தை நாம், எந்தப்பள்ளியிலும் கற்கவில்லை அன்னை ஈன்ற நாள் முதல் நம்மையும் அறியாமல் பொதுவுடமை, நம் நெஞ்சுக்குள் புகுந்து கொண்டது.

மனிதனை மனிதனாக மதித்து, கிடைப்பதைச் சமமாந் அனைவர்க்கும் பகிர்ந்தளித்து வாழ்ந்தது-வாழ்ந்துகொண்டிருப்பது நம் இனம்தான் நம்மிடம் இருக்கும் பொது நோக்கு இந்த உலகில், எந்த இனத்திற்கு உண்டு? நம்மைப்போல் கிடைப்பதை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் பழக்கம், எந்த இனத்திற்காவது உண்டா,-இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

---

**தேவைகள் ஆயிரம் இருந்தாலும்—மீனவன்**
**தீமையை நினையான் மனத்தாலும்!**

---

மீனவத் தொழிலாளிகள் கரையிலேயே தம்முடைய பாகத்தை சரியாகப் பங்கு போடும் பழக்கத்தை மையமாக வைத்துத்தான் 'மார்க்ஸ்' பொதுவுடமை தத்துவத்தை தீட்டி இருப்பார் என்று கருதுகிறேன்.

மீனவரின் 'சமபங்கு' திட்டம் எங்கும் பரவ வேண்டும். எல்லோரும் பின்பற்ற வேண்டும். பின்பற்றினால் தான் நாடு தழைக்கும்-நன்மைகள் குவியும்-நலிவுகள் அழியும் என்ற நோக்கோடு தமிழகத்தில் முதன் முதலில் 1886-ஆம் ஆண்டு ம. வெ. சிங்காரவேலனார் 'பி' அண்டு 'சி' நூற்பாலையில் கம்யூனிச தொழிற் சங்கக் கொடியினை ஏற்றி, தொழிலாளர்களுக்கு தொழிற் சங்க தத்துவங்களைப் போதித்தார்.

எல்லாத் தொழிலிலும் முதலாளிக்குத் தொழிலாளி தலை வணங்கியேதீர வேண்டும். அப்படி தலை வணங்காத தொழிலாளி கண்டிக்கப்படுவான்—தண்டிக்கப்படுவான். ஆனால் மீன் பிடித் தொழிலில் மட்டும், இந்தக் கொடுமை இல்லை. பெரும் வலை பல வைத்திருக்கின்ற, முதலாளி, எவ்வளவு பெரிய அந்தஸ்த்தில், அரியாசனத்தில் இருந்தாலும் தொழிலாளியைத் தோழமையாக எண்ண வேண்டும்! தனக்கு நிகராகக் கருத வேண்டும். அப்படி இல்லையென்றால் முதலாளி தூக்கி ஏறியப் படுவான். கட்டுப்பாடாக அந்த முதலாளியின் வலைக்கு எந்தத் தொழிலாளியும் செல்ல மாட்டான். தனி மனிதனாக ஆக்கப்படுவான், முதலாளி.

தொழிற்சாலைகளில், சங்கு ஊதிய உடனே தொழிலாளிகள் நேரம் தவறாமல் வேலைக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு நேரம் தவறி வேலைக்கு வரும் தொழிலாளியின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் குற்றப்பத்திரிகை தரப்படும். அடிக்கடி நேரம் தவறினால், வேலை நீக்கமே செய்யக்கூடும்! ஆனால் மீன் பிடி தொழிலில் இப்படிப்பட்ட இன்னல் எதுவும் இல்லை. முதலாளி ஒவ்வொரு மீனவத் தொழிலாளியின் இல்லத்திற்கும் சென்று, கனிவாக, ''இன்று தொழிலுக்குப் போங்கள்'' என்று கேட்டுக் கொள்வார். இதுதான் மீனவரின் முதலாளி-தொழிலாளி தத்துவமே!

'முதலாளி, தொழிலாளி' என்கிற பாகுபாடு இல்லாத ஒரே தொழில் மீன்பிடி தொழிலே!

---

இல்லறம் உயர் நினைத்திட வேண்டும்!—நாம்
இலட்சிய வாழ்வு அமைத்திட வேண்டும்!

---

பாரி ஒருவனே மாரியாய் இருந்தான். உதவியே மகிழ்ந்தான்! பேகன் ஒருவனே, பிறர்க்கென வாழ்ந்தான்! என்று நாம் நா கிழிய நற்றமிழில் பாராட்டுகிறோம். ஆனால் நம்மிடம்-நம்மினத்திடம் இருக்கும் பெருமைகளை மறந்து விடுகிறோம். இனத்தில்-சமுதாயத்தில்- காலக் கட்டத்தில்-சூழலில் ஒரு கொடை வள்ளல் தோன்றுவது இயற்கை. ஆனால் ஒரு சமுதாயமே, ஒரு இனமே பாரியாக, ஓரியாக இருக்கிறது என்றால், அதுதான் விந்தை! அப்படிப் பட்ட விந்தையை நம் முந்தைய தலைமுறை செய்து வந்துள்ளதை, இன்றும் நாம் இலக்கியங்களில் காணலாம்.

வளமான-தரமான-இனமாக இருந்தது கண்டு என் இதயம் இனங்காணா இன்பத்தை இசைபாடுகிறது.



# கத்தும் கடலில்

# முத்தும்-சங்கும்

தொட்டால் துவளும், பட்டுடல் கொண்ட பூவையரும், பூவையரின் ஆவலைப் போக்கிடும் ஆடவரும், துயரத்தைத் துளியும் தொட்டுப் பார்க்காத துடிப்புள்ள இளைஞர்களும், பஞ்சுடல் கொண்ட பிஞ்சு மழலைகளும், உலகக் கடலில் ஓயாமல் நீந்தி ஓய்ச்சலுற்ற முதியோர்களும், மேனியின் அழகு மேன்மையுற, வசதியின் வடிவை வடித்துக் காட்ட, குளிர்ந்த முத்தை அணியாக அணிகின்றனர்.

முத்துக் குளிக்கும் முக்கிய இடங்கள் உலகில் சிலவே உள. பாரசிக வளைகுடாவில் உள்ள 'பாரைன்' இலங்கையில் உள்ள மன்னார் வளைகுடா, இந்தியாவில் உள்ள 'தூத்துக்குடிக் கடல், ஜப்பானில் உள்ள டோக்கியோ க்கடல் மற்றும்சூலுத்தீவுக்கூட்டம் ஆஸ்திரேலியாவின் வடக்கு, மேற்குக் கடற்கரையோரங்கள், கலிபோர்னியா, கடற்கரைப் பகுதி போன்ற இடங்களில்தான் முத்துக் குளிப்பு நடைபெறுகிறது.

எல்லா முத்துச் சிப்பியும் சிறப்புப் பெற்றவை அல்ல. நான்கு வயதான முத்துச் சிப்பிகளே சிறப்புப் பெற்றவை. முத்தில் நம்மையும் அறியாமல் கீறல் விழுந்து விட்டால்கவலைகொள்ளத் தேவையில்லை. முத்தின் மேல் அடுக்கை மெதுவாக உரித்து விட்டால் முன்போலவே ஒளிரும் !

முத்துக் குளித்தல், பெரும்பாலும் மார்ச் திங்கள் இரண்டாம் வாரம் தொடங்கி நான்கு அல்லது ஐந்து வாரங்கள் தொடர்ந்து நடைபெறும். காற்று, வேர்வை, வெய்யில்.

---

உயர்ந்து வாழ உறுதி கொள்வோம்!
உதவாச் சடங்கை உதறிடுவோம்!

இவைகளில் அதிகம் வைத்திருந்தால் முத்தின் ஒளி மங்கிவிடும் முத்தில் கருமை நிறமுடையவைகளுமுண்டு. ஆனால் இவை கிடைப்ப அரிது, அபூர்வமும்.

மீனவனாகிய 'பாண்டியன் நெடுஞ்செழியன்' தன் இல்லத்தரசியின் காற்சிலம்பில் முத்தையே பதித்திருந்தான்.

'யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே'

கண்ணகியின் காவல் தெய்வமாம் கோவலன் கண்ணகியை பாராட்டும்போது, 'வலம்புரி முத்தே' என்று பாராட்டுகிறான்.

ஆரம், தரனம், திரட்சி, தூமணி, வாரித்தானம், நித்திலம் என்றெல்லாம் வழங்கப்பெற்றது.

கீழக்கரை, திருப்பாலக்குடி, பெரிய பட்டினம், மண்டபம் வெடலைப் பகுதியிலும் பருவகாலத்தில் தூத்துக்குடியிலும் மீனவர்கள் சங்கெடுக்கிக்கின்றனர்.

'பட்டி' 'இருபிறவி' 'இரமாமேஸ்வரம்' என்னும் மூவகைச் சங்குகள்இராமநாதபுரம் கடற்கரைப்பகுதிகளில்கிடைக்கின்றன.

இந்தச் சங்குகளுக்கு வங்காளத்தில் நல்ல சிறப்பு உண்டு. பூமி அதிர்வு ஏற்பட்டால் வங்கப் பெண்கள் சங்குகொண்டு ஊதி, சங்கதியைத் தெரியப்படுத்துவர். இந்த வழக்கம் இன்றும் நிலவுகின்றது.

பிணியைப் போக்கும் பேராற்றல் சங்கிற்கு உண்டு. அதனால்தான் இன்றும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கும் பால், மருந்து முதலியவற்றைச் சங்கினால் கொடுக்கின்றனர்.

கன்னியர் விரும்பும் கைவினை, கணையாழி (மோதிரம்) சட்டை பொத்தான் ஆகியவை செய்ய சங்கு அறுக்கப்படு கின்றது. இவ்வாறு சங்கறுத்துச் செய்யும் கைவளையல்களுக்கு வங்காளத்தில் நல்ல வரவேற்பு உண்டு. இதைக் கீழக்கரையில் செய்கிறார்கள்.

இராமமேஸ்வரத்தில் சனவரி முதல் மார்ச் வரை முழுமூச் சாக சங்கெடுக்கிறார்கள். அங்கு நல்ல இன சங்குகள் கிடைக் கின்றன. (சங்கிலும் இனவேறுபாடு இருக்கிறது.)

---

தெளிவும் துணிவும் இருந்திட்டால்
பொலியும் வாழ்வு பெரும் பகட்டாய்!

---

மண்டபத்திலுள்ள தென்வெடையில் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரையிலும் பெரியப்பட்டினத்திலும், கீழக்கரையிலும், செப்டம்பர் முதல் சனவரி வரையும் சங்கெடுக்கிறார்கள்,

வைணவர் வலம்புரிச் சங்கை நலம்பல தரும் பொக்கிஷம் எனக் கருதுவர்.

வலம்புரிச் சங்கு, இலக்குமியின் இயல்புடையது என்று எண்ணுகின்ற இதயங்கள் ஏராளமுண்டு. அது இருக்கும் இல்லம் செல்வப் பெருக்கோடு வாழும் என்பது வாழ்ந்தவர் கணிப்பு; அதன் விலை ஒராயிரம் ரூபாய்க்கும் மேற்பட்டது.

திருச்செந்தூரில் இவ்வகையான வலம்புரிச் சங்குகளைப் பேணி வைத்திருக்கிறார்கள். விழா நாட்களில் 108வலம்புரிச் சங்குகளைக் கொண்டு, அபிடேகம் செய்வார்கள் என சொல்லக் கேட்கின்றோம்.

வலம்புரிச் சங்கு 'இலக்குமி' விக்ரகத்தின் கால் ஓரத்தில் அடுக்கி வைக்கும் மரபு வங்கத்தில் உண்டு. இசை ஒலி எழுப்பி, பேசுவது போலக் கேட்கும் தன்மையும் வலம்புரிச் சங்கிற்கு உண்டு.

வங்காளம். அஸ்ஸாம், பீகார், ஒரிசா, ஆகிய பகுதிகளிலுள்ள மங்கையர்கள் சங்கு வளையல்களை தங்கமென எண்ணி எழிலாக அணிகிறார்கள். வளையல் செய்வதற்காக டாக்கா, பாட்னா, சில்ஹெட் ஆகிய இடங்களில் தொழிற்கூடமுண்டு. இந்தியாவின் பல இடங்களில் முக்கியமாகத் தென்னிந்தியாவில் எடுக்கும் சங்கெல்லாம் கல்கத்தாவிற்கு ஏற்றுமதியாகின்றன. அங்கிருந்து பல தொழிற் கூடங்களுக்கு கச்சாப் பொருளாக அது அனுப்பப்படுகிறது.

சங்கிலிருந்து சுண்ணாம்பு எடுக்கப்படுகிறது. சங்கிலிருந்து எடுக்கப்படும் சுண்ணாம்பு மிகவும் உயர்தரமானது. அதனால் தான் இந்துக் கோயில்கள், இஸ்லாமிய மசூதிகள் முதலிய கட்டிடங்களுக்குச் சாந்தாகவும் வெள்ளையடிப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள்.

சங்குகளிற் சிறந்தவற்றை முறையே இடம்புரி, வலம்புரி சலஞ்சலம், பாஞ்சசன்னியம் என நால்வகைப்படுத்தியுள்ளனர்,

---

**தினமும் புத்தகம் படித்திட வேண்டும்! — நம்**
**திறமையை நித்தமும் வளர்த்திட வேண்டும்!**

---

சிப்பி ஆயிரம் சூழ்ந்தது இடம்புரி, இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி, வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது சலஞ்சலம், சலஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்சசன்னியம் எனத் தமிழ் நிகண்டுகள் கூறுகின்றன.

சங்கின் வெண்ணிறத்தை ஆதாரமாகக் கொண்டு, தூய்மைக்குச் சங்கை உதாரணமாகக் கூறுவர்.

'பொய்கைகளிலே உடைந்த தன்மையவாகிய,
தாமரை மலரும் சங்கு போலும்-தூய குடி' (சீவக. 547)

கண்ணகியைக் கோவலன் 'வலம்புரி முத்தே'! என்று விளித்ததற்கு அடியார்க்கு நல்லார் 'மரபின் தூய்மை கூறுவான் வலம்புரி முத்தென்றான்' என விளங்கக் கூறுவர்.

வலம்புரி, சலஞ்சலம் என்னும் சங்குகளின் சிறப்பை 'விரி வளை சூழும் வலம்புரியினத்துள் சலஞ்சலம் மேய்வன நோக்கி, (சீவக 2103) என்னும் செய்யுட் பகுதியும்—

'ஆயிரம் சங்கு சூழத் திரியும் வலம்புரி ஆயிரத்துள்ளே சலஞ்சலம் மேய்வனவற்றை நோக்கி' என்றும் நச்சினார்க்கினியருரையும் கொண்டு உணரலாம்.

ஆடவர் கையிலே சங்குரேகை இருப்பது சிறப்புடையது என்பதை 'வலம்புரி பொறித்த வண்கை தேவலி' (சீவக. 204) என்னும் பகுதியால் நாம் உணரலாம்.

'தெய்வ உத்தியோடு வலம்புரி வையின் வைத்து'
(திருமுருகு 23)

—என்பது.

மகளிர் வலம்புரி வடிவாக ஓர் அணி கலனைத் தலையில் அணிவதுண்டென்பதைத் தெரிவிக்கிறது.

''சங்கு முழங்குவது நன்னிமித்தம்.'' (சீவக: 1888)

அரசன் போருக்குப் புறப்படும் போதும் வெற்றி அடைந்தவுடனும் சங்கு முழங்கல் வழக்கமென்பதைப் பல நூல்களிலும் காணலாம்.

---

சாதிகள் செத்து அழிந்திட வேண்டும்!— எங்கும்
நீதி நிலைத்து வாழ்ந்திட வேண்டும்!

பக்தி நெறியைப் பக்குவப்படுத்தித் திக்கெங்கும் பரப்பிய தமிழ்க்குடிப் பொக்கிஷம் - தென்புலம் ஈன்ற தன்னிகரில்லா தண்டமிழ்த் தலைமகன் - பாரே வியக்கும் பாவலன்-மக்கட் புலவன் நக்கீரன். சங்கின் இறைச்சியை அதிகம் உண்டதனர் சக்தி மிகுதியால் இறைவனையே (ஈசனையே) எதிர்த்தார் என்று சிலர் இயம்புகின்றனர். உண்மையோ, பொய்யோ யான் அறியேன்! ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன் சங்கின் இறைச்சி மிகவும் சுவையுடையது.

பாரதத்தில் ''கண்ணன் சங்கு—பாஞ்சசன்னியம்
அருச்சுனன் சங்கு—தேவதத்தம்
தருமபுத்திரன் சங்கு—அனந்த விஜயம்
பீமன் சங்கு—பவுண்டரம்
நகுலன் சங்கு—சுகோஷம்
சகாதேவன் சங்கு—புஷ்பகம்,

என்று கூறப்பட்டுள்ளன. இவற்றால் அந்நாட்களில் சிறப்பாக இருந்தோர்களின் சங்குகளுக்கு தனித்தனியே பெயர் வைத்திருந்தனர் எனக் கொள்ளலாம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்,
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

என பாரதிதாசன் சங்கினை அழைக்கிறார்.

நல்லதை நாட்டிற்கு நவின்றிட, வெற்றி பெற்ற வீர மறவனின் வீரத்தை உலகுக்கு உறுதிப்படுத்த, போருக்குப் புறப்படும் வீர மன்னனை ஊருக்குத் தெரிவிக்க, எல்லையிலே தொல்லை வந்தால் எல்லோர்க்கும் எடுத்தியம்ப, சங்கையே நம்மோர் எங்கும் பயன்படுத்தினார்கள்.

நல்ல பல நலனுக்கு நாட்டில் உதவும் சங்கு, துக்க இசைப் பாட்டிற்கும், இடுகாட்டிற்கும் உதவுகிறது. துக்க காலங்களில் எத்துணை இசைக்கருவிகள் வைத்தாலும் சங்கு கட்டாய இசைக் கருவியாக இன்றளவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இழவிலும் இசைபாடுவது சங்கு இறந்தவரும் வெற்றியோடு காடு செல்கின்றார் என்ற தெய்வப் பக்தியின் மெய்ப்பொருளாய். தேவரின் தெய்வீகப் பொருளாய் தூய்மையின் தூதுவனாய் இருப்பதும் சங்கு!

---

**சுரண்டல் இல்லாத உலகமைப்போம்!—என்றும் சுயநல மில்லா மனம் படைப்போம்!**

---

அம்மன் ஆலயங்களை அலங்கரிக்கும் அழகு பொருள கவும், பிள்ளைகள் பிரியமாய் விளையாடும் பொம்மைகளாகவும், இல்லத்தின் எழிலை ஏற்றம் செய்யும் எழில் மிகு காட்சியா கவும். அயல் நாட்டோரைக் கவர் திடும் கவர்ச்சி உருவமாகவும் சங்கு பயன்படுகிறது. 1008 சங்கு அபிஷேகத்தை ஆத்திகர்கள் அதிசயமாக உரைப்பார்கள். இறைவன் ஆலயங்களின் இணையற்ற மதிப்பு சங்கிற்கு உண்டு.

சங்கினால் மணிகளும் மனங்கவர் அணிகளும் மான்களும், மயில்களும், விளக்குகளும், விளையாட்டுப்பொருட்களும் செய்து, ஆயிரக்கணக்கோர் உயிர் வாழ்கிறார்கள். சங்கின் மாமிசம் (சதை) சத்துள்ள உணவு என்று புத்தகங்கள் கூறுகின்றன. கொடிய வியாதிகளை மடிய வைக்கும் மாபெரும் ஆற்றல் சங்கிற்குண்டு.

இப்படி-சங்கு குளிப்பதும் எங்கள் குலம், சங்கு அறுப்பதும் எங்கள் குலம்

வலம்புரிச் சங்கை கொடுத்து வாழ்வளிப்பதும் எங்கள் குலம்.

ஆனால்-சங்கெடுக்கும் மீனவனின் வாழ்க்கை ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.



# புயல் நேரங்களில் மீனவன்

புயல் என்பது நாட்டில் விளையும் கொடுமைகளில் மிக மிக முக்கியமான ஒன்று என்பதை மறுக்க யாரும் இல்லை.

வெள்ளம, மழை, தீ, பூகம்பம், இடி போன்றவைகளில் ஏற்படும் ஆபத்துக்களை சேர்த்து ஒப்பிட்டுப்பார்த்தால், இவை அத்தனையும் சேர்ந்து ஒரே நேரத்தில் ஆபத்தை உண்டாக்குவது தான் ''புயல்'' புயல் வந்தால் பாதிப்பு யாருக்கு? யார் எப்படி நோக்கினாலும் என் கருத்தை இங்கே சில கோடுகள் போட்டு காட்ட முனைவது, மிக முக்கியம் என கருதுகின்றேன்.

நம் இந்தியா ஒரு தீபகற்ப நாடு; புயல் தாக்கினால் முதலில் பாதிக்கப்படுவது மீனவ கிராமங்கள்தான். அவன் வீடிழந்து, உடைவிழந்து தவிப்பதைப்பார்க்கும் பொழுது ஏன் மீனவனாகப் பிறந்தோம் என்ற எண்ணம் தான் உதிக்கின்றது,

புயல்-மழை என்று ஆரம்பித்துவிட்டால், அவன் குழந்தைகளுடன் சேர்ந்து பட்டினி கிடக்க வேண்டும்-கடன் பட்டு, ஒரு வேளை கஞ்சியையாவது குடிக்கவேண்டும். அவன் சம்பாதித்து, பணம் வைத்து இருக்க மாட்டானா? என்ற கேள்வி தொக்கி நிற்கின்றது. உண்மையான கேள்விதான்; அவன் தினம் கடலில் போராடி உழைத்து உழைத்து ஓடாய்தேய்கின்றான். அப்படி

---

வயலின்றி வயிற்றுக்குச் சோறேது?—கடல்
தயவின்றி உடலுக்கு உரமேது?

---

ஓடாய்த்தேய்ந்தாலும் ஒருவேளைக் கஞ்சிதான் அவனுக்கும் அவன் குடும்பத்தினருக்கும். இந்த நிலையில் மழை-புயல் காலங்களில் ஊரெல்லாம் நீர் நிறைந்திருக்கும்; ஆனால் மீனவனின் வயறு மட்டும் காய்ந்திருக்கும்.

மழை-புயல் காலங்களில் கடலின் அலைகள் உயர்ந்து, சீற்றத்துடன் அடிக்கும். அதைக் கடந்து மீன்பிடிக்கச் செல்வது மிக மிகக் கடினம், அப்படிக்கடலின் அலைகளைத் தாண்டி அவன் சென்றாலும், காற்றின் சீற்றத்தையும், வேகத்தையும் எதிர்த்து கடலுக்குள் செல்ல முடியாது. ஆகவே அவன், இந்த நாட்களில் மீன்பிடிக்கவும் செல்ல முடியாது. வீட்டிலோ வறுமை-அதை எதிர்த்துவீட்டினுள்ளும்செல்லமுடியாது-கடலிடைப்பட்ட துரும்பாகத் தவிப்பான். அந்த நேரத்திலும் அவனுக்கு என்று, ஒரு இடம் உண்டு-அதுதான் கள்ளச்சாராயக் கடை. அவன் உழைப்பதில் பாதி பங்கிட்டுக் கொள்ளும் பங்காளிகள். இதற்கு மட்டும்பணம் ஏது? அவன் தான்பங்காளியாயிற்றே-சாராயத்தைக் கொடுத்து விட்டு. பணத்தை மீன்பிடித்துக் கொண்டு வரும் பொழுது வசூலித்துக் கொள்வான்.

இப்படியாகத் தன் வாழ்வைத் தானே சூனியமாக்கிக் கொள்ளும் மீனவனுக்கு, இயற்கையின் சீற்றத்தை எதிர்த்து நிற்கச் சக்தி ஏது!

புயல் வீசும் என்ற அறிவிப்பு வானொலி வாயிலாக கேட்டவுடன், தன் உயிரை காத்துக் கொள்ள, தன் உடைமைகளை காத்துக் கொள்ள. தன் உறவினரை காத்துக் கொள்ள அவன் போராட வேண்டியுள்ளது. இந்த சூழ்நிலையில் அவன் உணவு, உடை, இருப்பிடத்திற்கு பெரும் போராட்டம் தான்.

புயலினால் மீனவனுக்கு, மீனவ குடும்பங்களுக்கு, மீனவனுடைய சொத்திற்கு, எவ்வளவு நஷ்டம் ஏற்படுகின்றது. முதலில், புயல் காற்றினாலும், கடல் அரிப்பினாலும் அவன் வீடு இழக்கின்றான். இதனால் எங்கு வசிப்பது? என்ற கேள்விக்குறி எழுகின்றது.

அடுத்து புயலினால் அவன் சொத்தாக வைத்திருக்கும் கட்டுமரம், வலை, கயிறு, இவைகளைக் கடலின் அலைகள்

---

**உழவனின் வேண்டுதலும் மழையே!—கடல்**
**மறவனின் வேண்டுதலும் மழையே!**

---

அடித்துச்சென்று விடுகின்றது, இதனால் அவன் மீண்டும்; வாழ்க்கையைத் தொடரஅடித்தளமே இல்லாமல் போய் விடுகின்றது. அவன் அடுத்த வேளை உணவிற்கே அல்லல் படும் அவல நிலை உருவாகின்றது. அவன் மீண்டும் புதிய வாழ்வு தொடங்க வேண்டுமானால் கட்டுமரம், வலை, கயிறுகளை புதிதாக வாங்கியாக வேண்டும். அதற்கு ரூபாய் 5000-மாவது தேவைபடுகின்றது. அவன் வீட்டை புதுபிக்க 1000-ரூபாயாவது வேண்டும். இதற்கு எங்கு செல்வது...?''

நம் அரசுதான் அந்தக் கண்ணீரைத் துடைத்தாக வேண்டும்.

நம் அரசு கட்டுமரம், வலை, படகு போன்றவை புயலால் பாதிக்கப்பட்டால், மானியக்கடன் கொடுக்கின்றது. ஆனால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஏற்பட்டால்-அதற்கு அரசு நஷ்டஈடு கொடுப்பதில்லை. இதனால் அந்தப் பகுதிவாழ் மீனவர்கள்-வாழ்வில் முன்னேற முடியாமல், மேலும் மேலும் கடனாளியாகி அவன் வாழ்வில் அடுத்த அடியை எடுத்து வைக்க தடுமாறும் நிலை உள்ளது.

கடலில் மீன்பிடிக்கச்செல்லுகையில், புயல் ஏற்பட்டால்-அவன் நிலை-உடல் கூட உறவினருக்கு கிடைக்காது. அவன் இப்பெருங்கடற் பகுதிக்குச் சொந்தக்காரன். அவன், இறந்த உடலை, கடலே சொந்தமாக்கி கொள்கிறது. அவன் உணவாக உண்ணும் மீனோ, அவனை உணவாக்கிக்கொள்கின்றது. அவன் மனைவி, குழந்தைகள், உறவினர்கள் அவன் வருவான் என்று வழிமேல் விழிவைத்து காத்திருப்பார்கள். அவன் திரும்ப வந்தால் தானே! சீறி எழும் அலைக்கடலில், அவன் அமைதியாக மீளா துயில் கொண்டிருக்கின்றான்.

புயல் கடற்கரை ஓரத்தில் மட்டும்தான் வீசுகின்றதா-உள் நாட்டிலும் தான் வீசுகின்றது என்று கேட்கின்றீர்களா? உண்மை தான். ஆனால் திறிது சிந்தித்து பாருங்கள். உதராணமாக, கோபத்துடன் சீறி வரும் மனிதன் முதலில் தன்னிடம் சண்டையிட வருபவனின் உயிருக்கே சேதம் விளைவிப்பான், பின் வருபவர்களிடம் காட்டும் கோபம், தணிந்து கொண்டே வந்து கடைசியில் அமைதியாகின்றான் இப்படிதான் புயலும், முதலில் தன் சீற்றத்தை கரையைக்கடக்கும் பொழுது முதலில் குடியிருக்கும் மீனவப்பகுதியில் காட்டுகின்றது. இதனால் மீனவப் பகுதி பெரும் சேதம் ஏற்படுகிறது. நாட்டின் உள்ளே செல்லச் செல்ல

---

**மதுவில் மனதை சாய்க்காதே**
**மனைவியை விதவையாய் ஆக்காதே!**

---

வேகம் குறைந்து பாதிப்பும் குறைகின்றது. அப்படி உள்நாட்டில் பாதிப்பு ஏற்பட்டாலும் அங்கேயும் துன்பம் அடைவது எங்கள் மீனவன் தான். ஆறுகள், ஏரிகளில் மீன் பிடிப்பவன் அந்த ஆறுகள், ஏரிகளின் ஓரங்களிலேயே குடிசையை போட்டுக் கொண்டு வசிப்பதும், அவனுடைய வாடிக்கை புயல் ஏற்பட்டால், ஏரிகள் நிரம்பி உடைப் பெடுக்கின்றன. இதனால் அருகில் உள்ள வீடுகளில் வெள்ளம் புகுந்து, அவனது குடிசையையே குட்டிச்சுவராக்கி விடுகின்றது. இதனால் அங்கேயும் வீடிழந்து தவிக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது, அவ்வாறு ஏரிகளில் உடைப் பெடுத்தால், ஆறுகளில் வெள்ளம் வரும் கரை உடையும் அங்கேயும் கண்ணீர்க் கதைதான். இப்படி கண்ணீர்விட பிறந்தவன் தான் மீனவன்.

மீன் பிடிக்கச் சென்றிருப்பவனின் மனைவியோ, தீயிலிட்ட புழுவாக இன்னும் கரை சேரவில்லையே கணவன் என்று கதறி அழுவாள். தன் உயிரை காப்பப்பாற்றிக் கொள்ள மனம் இல்லாமல் தன் ஓலைக்குடிசையில் ஒண்டிக்காத்திருப்பாள்-அவன் வந்தால் எல்லையிலா மகிழ்ச்சி-இல்லையேல்... துயரக்கடலில் தோய்ந்திருப்பாள். பாவம் பேதை வேறென்ன செய்வாள்?.



# மீன் தொழில் தொடர்பான

# கலைச் சொற்கள்

நம் இனத்தொழில் தொடர்பாக பல சொற்களை இடத்திற்கு தகுந்தாற்போல் வழங்கி வருகின்றோம். அந்த சொற்கள் அனைத்தும்நம் இனத்தவர் அறியும் பொருட்டு இந்த புத்தகத்தில் வழங்கினால், நலம் பயக்கும் என்ற கருதி இத்துடன் இணைத்துள்ளேன்.

## கடல் நீர் அடி நிலத்தில் உள்ளவை:

கறுப்பு, பாறை, சேர்ந்த, தஙர, பார்கட்டி, சீனி.

## கடல் சேற்றின் வகைகள்

கெளிசேறு, துண்டுசேறு, ஆத்மசேறு, ஓடைசேறு, தெழுவாஞ்சேறு, கொயிர்சேறு, குளிப்பாஞ்சேறு, கண்ணஞ்சேறு, பக்கிரிசேறு, கல்சேறு, பெரியசேறு, மாஞ்சேறு' பொறுவாஞ்சேறு, பண்சேறு.

ஏணிகளாய் நாம் இருந்தது போதும்!
ஏற்றம் காண இன்றே வாரும்!

### காற்றின் வகைகள்.

நேர்கோடைக்காற்று, கச்சாங்கோடைக்காற்று, கச்சாங் காற்று, கச்சான் ஈரான் காற்று, நேர் ஈரான் காற்று. கொண்டைக் காற்று, வாடை காற்று (ஈரான்) குன்னுவாடை காற்று, தென்னங்கோடைக் காற்று.

### கடலில் வெள்ளங்கள் (நீரின் பெயர்கள்)

தெண்ணி வெள்ளம், தெண்ணி தெம்மா ஒளினி, வண்ணி வெள்ளம், வண்ணி வாடா ஒளினி, மேமிறி, ஒளினி (இருவா வெள்ளம்) வண்ணி கரசலா, தென்னி கரசலா, வாங்கி சுழல், கடல் சுரப்பு, புரை மாறி, கலங்கல் தண்ணி (தல்வாடு), தெளிவு தண்ணி, படி (கடலும் ஆறும் சேறுமிடம்) வண்டத்தண்ணி, கரிசவாடு தண்ணி.

### வலையின் பாகங்கள்

மங்கா கயிறு, கீங்கா கயிறுதடைசி, மொண்டுபலவைபோயா, கல், வறி, பெருத்த பாவு, சிறுத்தபாவு, சிறுநி, மால், கண்ணு, மால் மடி, நடுமடி, நெக்குமடி, செம்படிக்கா மடி, கள்ளத்தூறு மடி.

### மரத்தின் பாகங்கள்

இருப்பால் கட்டை, (குத்துக்கட்டை) பெருமா கட்டை, பக்கவாத்துக்கட்டை, தலையா, கடையா, நடுமரம், கொம்பு அண்டை, நடுத்தலைக்கட்டை, கொண்டடி கட்டை.

### தனிநபர் பிடிக்கும் தூண்டில் கயிறு வகைகள்

காளாக் கயிறு. குச்சுக் கயிறு, கொம்புக் கயிறு, தக்கைக் கயிறு, சுத்துக் கயிறு, துண்டுக்கயிறுதுண்டில் கயிறு.

### மணிக் கட்டை

வலை மிதப்பதற்காக மேலே கட்டப்படும் மரக்கட்டையின் துண்டுகள், பெரும்பாலும் எருக்கிலைத் தண்டு கோர்க்கப் படும்.

---

**தெரியாமல் குடிக்கக் கற்றுக்கொண்டோம்!**
**தெரிந்தும் மறக்கக் கதறுகின்றோம்!**

---

## இரம்பிணி வலை

போர்ச்சுக்கீசியர் கோவாவிலிருந்து கேரளத்திற்குக் கொண்டுவந்த வலை. இதை உலகத்தில் சிறந்த கரை வலையாகச் சொல்லலாம்.

## வெலங்கு

கடலின் அடியில் உள்ள பாறை, மலை, சேறு, மணல் போன்ற இடங்களைக் கண்டறிய, கடலில் இருந்துகொண்டே கரையில் உள்ள மலை, கோயில், கோபுரங்கள். மகுதி இவற்றை அடையாளமாகக் கொண்டு நேர்வெலங்காகவும், வாடா வெலங்காகவும், தெம்மா வெல்ங்காகவும், கணக்கிட்டு அந்த இடத்தை நிர்ணயம் செய்வர். காடு—காட்டுதல் என்றும் சொல்வார்கள்.

**மீன் எடுத்து வரப் பயன்படுத்தும் பொருள்கள்**
பறி, கொடுவலை, கோரைப் பெட்டி.

## மணிக்கால்

வலையின் அடிப் பகுதி நீரில் அமுங்குவதற்காகக் கோர்க்கப்படும் சுடப்பட்ட மண் உருண்டைகள்.

## கட்டுமரத்து உதிரிப் பாகங்கள்

தளா, தண்டு, கோல், சொறு தடி, கொம்பு-கட்டை பா-தடி, பூ முடி-கட்டுக்கயிறு, மேல் தண்டு, கீழ் தண்டுப்பண்பா ஒட்டுக் கயிறு, கீழ்த்தண்டு கயிறு, மேல் தண்டு கயிறு, பண்ணு கயிறு, சுத்த கடையா, கொம்பு, ஈர்க்கை, நடுமரம், ஓலை ஈர்க்கை, லா ஈர்க்கை.

## பெரிய வலைப் படகின் பாகங்கள்:

பங்காயம் (துடுப்பு அல்லது தண்டு) ஏரா, பெரிய தன்னை, சிறுதன்னை, முணா மரம், மேல் பலகை, சாத்தாரு, அமுக்

குடியனின் வாழ்வு—என்றும்
அடைந்திடும் தாழ்வு!

..., வாறி, தலைமரம். ஓட்டு முளி, அல்சா - தண்டு பண்ணாக்கு (துடுப்பு) ஆனியம், அமரம், கசா.

## வலையின் வகைகள்

அக்கினி வலை, அந்தி வலை, அரை வலை, இடை வலை, இறுக்கா வலை, உல்லம்வலை' எரிகட்டு வலை, ஏந்துகச்சா வலை, ஏறு வலை, கோவலை, கன்னி வலை, கட்டு வலை, கரைவலை, கவலைவலை, கெண்டை வலை, கொண்டை வலை, கொடுவலை, சிங்கெரா வலை, சிறுக்கா வலை, சுற்றுவலை, பாச்சு வலை நண்டு வலை, தட வலை, தொட்டி வலை' தூரி வலை, பைண்ட வலை,. பெருக்கா வலை, மத வலை, மணி வலை, மசி மிதப்பு வலை, வெள்ளா வலை, கொண்டு வலை,

## மண்டவா

சுறா, திருக்கைப் போன்ற மீன்களை அடித்துப் பிடிக்கும் இரும்பினுல் செய்த ஆயுதம், சூலம் போன்றிருக்கும்.

மீன்; தண்ணீரின் ஓட்டத்தை எதிர்த்துத்தான் நீந்தும்.

சுறா; குட்டிப் போடும் மீனினம்.

நண்டு (அலவன்): மனிதர்களைப் போலவோ மற்ற மிருகங்களைப் போலவோ நேராக நடக்காது. ஆனுல் பக்க வாட்டில்தான் நடந்தோடும்.

நம் இலக்கியங்களில் கடலைக் குறிக்கும்சொற்கள்; ஆர்கலி, ஆழி. புவரி, முந்நீர், பள்ளம், பல்வை, பரவை.



# மீனவர்கள் முன்னேற...

*10-12-1981 அன்று மாலை 7-02 மணிக்கு சென்னை வானொலி மூலமாக நான் ஆற்றிய உரை.*

மீனவர் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் அதற்கு உண்டான வழி வகைகள் யாவை? அதற்கு மீனவர்கள் என்ன செய்ய வேண்டும்? மீனவர்களுக்காக அரசு என்னென்ன செய்ய வேண்டும்? அரசிடம் மீனவர்கள் அணுகும் முறை எப்படி இருக்க வேண்டும்? என்ற ஆலோசனைகளை வழங்க மீனவனாகிய எனக்கு வானொலி நிலையத்தார் வாய்ப்பு நல்கியமைக்கு முதலில் என் வணக்கத்தை உரித்தாக்குகின்றேன்.

நமது நாடு மூன்று பக்கம் கடலாகவும். ஒரு பக்கம் மட்டும் பூமியாகவும் உள்ள ஒரு தீபகற்ப நாடு; நல்ல பூமிவளம் கொண்ட நாடு. தற்போது பூமியின் விளைவளத்தை நம் நாடு அதிக பட்சமாகப் பயன்படுத்திக்கொண்டு, அந்நிய நாட்டின் உணவுப் பொருட்களை, எதிர்நோக்காமல், தன்னிறைவு அடைந்துள்ளது. ஆனாலும் முப்பக்கமும் கடல் கொண்ட இந்திய திருநாட்டின், கடல் வளத்தில், 5 விழுக்காடுகள் மட்டும் தற்போது பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற புள்ளிவிபரங்களை கேட்கின்றபோது, 5 விழுக்காடு பயன் படுத்தப்படும்போதே

---

**நம்மை மறக்கக் குடிக்கின்றோம்! பிறகு வம்பில் மாட்டித்-துடிக்கின்றோம்!**

---

சுமார் 200 கோடி ரூபாய்கள், அந்நிய செலாவணி 1 ஆண்டில கடல் வளத்தின் மூலம் கிடைக்கின்றது என்றால் 1மீதம் 92 விளுக் காடுகளும் முழுமையாக கடல் வளம் பயன்படுத்தப்பட்டால் நாட்டின் பெரும் பொருளாதாரம் கடல் வளத்தின் மூலம் கிடைக்கும் என்பதில் எந்த வித மாற்றுக் கருத்தும் இல்லை

இதுபோன்று, நமது நாடு கடல் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துகின்றது. என்றால், நமது மீனவர்கள் தங்களின் மீன் பிடி வழிகளைப் புதுமை நோக்கில் ஏற்படுத்திக் கொண் டாக வேண்டும். வரலாறு ஆரம்பித்த காலம் தொட்டு ஒரே விதமான உபகரணங்களைத்தான் பெரும்பாலான மீனவர்கள் பயன் படுத்துகிறார்கள். இந்நிலை மாற வேண்டும், அந்நிய நாடு களில் உதாரணமாக, ஜப்பான், கொரியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நவீன முறையில் மீன்பிடி உபகரணங்களை உருவாக்கி பயன்படுத்துகின்ற காரணத்தால், அந்த நாடுகளில் மீன் பிடித் தொழில் ஏற்றம் பெற்றுள்ளது, இதுவரை நாம் கண்கூடாகக் கண்டும், கேட்டும் வருகின்றபோது, நாமும் அதுபோன்ற நவீன உபகரணங்களையும் கலங்களையும் பயன்படுத்தி நாம் வளமான வாழ்வினைப் பெற்று, இந்திய நாட்டின் வளத்தினையும் பெருக்க வேண்டாமா? நவீன முறை என்றால் விசைப் படகு மட்டும் அல்ல, கட்டு மரத்திலும் விசையைப் பொருத்தி, தொழில் செய்யும் முறையை புகுத்த வேண்டும். இதற்கு அரசு மானியம் வழங்கினால் விரைவில், மீனவர்கள் இதைக் கடைப்பிடிப்பார் கள். அதே போன்ற மீன்பிடி வலைகளிலும் நவீன முறையை புகுத்த வேண்டும்.

அரசினர் நம் நலனுக்காக, எந்த திட்டங்களைக் கொண்டு வந்தாலும், ஒட்டு மொத்தமாக, எந்தவித காழ்ப்புணர்ச்சியும் இன்றி, முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள. நாம் பயிற்சி பெற்றாக வேண்டும். அரசினரை எங்கள் நிலை உயர ஏதாவது வழி வகைகள் செய்யுங்கள் என்று, கேட்கின்ற உணர்வுகளைப், நாம் பெற வேண்டும், இதற்கு முதன்மையாக நாம் கல்வி பெற்றாக வேண்டும், நம் பெண் குழந்தைகள் கட் டாயக்கல்வி பெற வேண்டும். எந்த ஒரு இனமும் உயர, வளம் பெற முதற்கண் அனைவரும் அறிவாளிகளாய் ஆக்கப்பட வேண் டும். இதற்கு நாம் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள, அனைத் துக் குழந்தைகளையும், ஒழுங்காக பள்ளிக்கு அனுப்பி, உயர் கல்வி பெற நாமும் ஒத்துழைக்கப் பாடுபடவேண்டும். ஒவ்வொரு

---

**குடும்பம் நமக்கு இருக்கும்போது**

**குடியின் பழக்கம் இருப்பது தீது!**

---

மீனவர் கிராமத்திலேயும் உள்ள மீனவர் கூட்டுறவு சங்கங்களை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அரசின் மூலம் வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும், நாம் கூட்டுறவு சங்கங்களின் மூலம் நாம் நிறைவேற்றிக்கொள்ள முயல வேண்டும். தேவையான உணவுப்பொருட்கள், மற்றும் நுகரும் பொருட்கள், நமது கூட்டுறவு சங்கங்களின் மூலம் கிடைக்க வழி வகைகளை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். நாம் பிடிக்கும் மீன்களையும், கூட்டுறவு சங்கத்தின் மூலம், விற்பனைக்கு ஏற்பாடு செய்வதன் மூலம், நல்ல விலை கிடைப்பதுடன், இடைத் தரகர்களின், கொள்ளை இலாபம் தடுக்கப்படும். உபயோகிப் போருக்கும் தரமான நல்ல மீன்கள், கிடைக்கவும் ஏதுவாகும். நாம் மீன் பிடித்தொழிலின் மூலம் பெரும் இலாபத்தினை. நமது தொழிலில் நவீன முறைகளைக் கையாண்டு அதிக மீன்களைப் பிடிக்க முதலீடு செய்ய வேண்டுமே அல்லாது. வேறு தொழிலில் முதலீடு செய்தால், நம் மீன் பிடித் தொழில் நலிவடைவதுடன், மீன் பிடித் தொழில் நவீன மாக்கப்படாமல் நலிந்து விடும். இது போன்று மீனவர்கள் மட்டும் தனித்து, தங்கள் வாழ்வினை உயர்த்திக் கொள்ள முடியுமா என்றால்! முடியாது. காரணம், வளருகின்ற சமுதாயத்திற்கு அரசின் அக்கறை அவசியம் வேண்டும்.

பெரும்பாலான மீனவ கிராமங்கள், சாலை வசதி இன்றி மற்ற மக்களோடு தொடர்பில்லாமல் தனித்து துண்டாடப் பட்டுள்ளது. செங்கை மாவட்டத்தில், திருமலை நகர், சாட்டாங் குப்பம் போன்ற கிராமங்களும், தென் ஆற்காடு மாவட்டத்தில் பெரிய குப்பம், சாமியார் பேட்டை போன்ற கிராமங்களும், தஞ்சை மாவட்டத்தில் நாயக்கர் குப்பம், புதுக்குப்பம், கொடியம் பாளையம் போன்ற கிராமங்களும் சாலை வசதி இல்லாமலும் பஸ்வசதி இல்லாமலும், நகரத்து மக்களோடு தொடர்பு கொள்ள முடியாமல், நாகரீகம் என்பது என்னவென்று அறியாதவர்களாக வாழ்கின்றனர். பொதுவாக, ''சாலைகளற்ற கிராமங்களுக்கு சரித்திரமே இல்லை'' என்ற புது மொழிக்கேற்ப, அனைத்து கிராமங்களுக்கும் சாலை வசதியோடு பஸ்வசதியும் செய்து தர வேண்டும். மற்றும் ''கிழக்கு கடற்கரை'' சாலைத் திட்டத்தினை முழுமையாக்க அரசு முயன்றிட வேண்டும். இது போன்ற சாலை வசதிகள் இருந்தால் தான் தாங்கள் பிடிக்கும் மீன்களை உடனுக்குடன் விற்பனை இடங்களுக்கு எடுத்துச் செல்லவும், நாகரீகத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் ஏதுவாகும். தற்போது மீனவர்கள் அதிகம் உள்ள இடங்களில் உள்ள, உயர்நிலைப்பள்ளிகளில் ''Fishing Method Navication சிறப்புப்

---

**போதையைத் தரும் மது—நம்**
**பொருளைப் பறிக்கும் அது!**

---

பாடங்களாக வைத்து, மீனவ மாணவர்களை, தொழில் அடிப்படையில் ஊக்கப்படுத்தினால், மீன் பிடிக் தொழில் நவீனமாக்க நல்லதொரு வாய்ப்பாக அமையும். இது போன்ற நிலை கேரள ர்நாடக மாநிலங்களில் செயல் படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மீனவர் கூட்டுறவு சங்கங்கள், தற்போது பெரும் பாலும் செயலிழந்து நலிவுற்று உள்ளன. அது எதனால் ஏற்பட்ட நிலை என்பதனை ஆராயாமல், இனி எப்படிச்செயல் பட்டால் உன்னத நிலைக்கு மீனவர் சங்கங்கள் வளர முடியும் என்பதனையும், அரசு ஆராய வேண்டும். உதாரணமாக, விவசாய கூட்டுறவு சங்கங்கள் நலிவிழந்து விட்ட நிலையில் பண்டித நேரு, அறிஞர் அண்ணா ஆகியோர்களின் எண்ணத்திற்கேற்ப 'வலிமைவாய்ந்தசங்கங்களாக இரண்டு, மூன்று சங்கங்கள் இணைக்கப்பட்டன பின்வங்கியின் அலுவலர்கள், மத்திய கூட்டுறவு வங்கியின் சம்பளத்தில், விவசாய கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றியதற்குப் பிறகு இன்று விவசாயிகளுக்கு, விவசாய கூட்டுறவு சங்கங்கள் ஆற்றும் பணி, வியக்கத்தக்க அளவிற்கு உள்ளது. இதே போன்று மீனவ சங்கங்களும் வலிமையான சங்கங்களுடன் இணைக்கப்படவேண்டும். ஆங்காங்கே உள்ள பட்டம் பெற்ற மீனவர்களை அந்தந்த சங்கங்களில் பணியாற்றும் வாய்ப்பினை அளித்து, குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு அரசினரே சம்பளம் அளித்து மீனவ சங்கங்கள் வளர வாய்ப்பளிக்க வேண்டும். இந்த நிலையினால் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டுவதுடன், சங்கங்கள் நல்லநிலையில் வளரவும் ஏதுவாகும்.

மீனவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து உதவிகளும், மீனவர் கூட்டுறவுகளின் மூலம் அளிக்கப்பட வேண்டும். கிராம மீனவர் கூட்டுறவு கூட்டு சங்கங்கள் இணைந்து மாநில கூட்டுறவு இணையகம் (State Co-operative Union), அமைக்கப்படவேண்டும். இதுபோன்ற நிலையினால் மீனவர்களின் தேவைகளை முன்பு கூறிய அமைப்புக்களே செயல்படுத்த வேண்டும் என்ற அளவில் அமைக்க, அரசு அவசரமாக கவனம் செலுத்த வேண்டும். மீனவர்கள் வாங்குகின்ற கடன்கள் திரும்ப வசூலது இல்லை என்று தற்போது சொல்லப்படுகின்றது. கடன கொடுத்துப் பின், திரும்ப வசூல் செய்யும் பொறுப்

**காக்கையைப் போல கூடி வாழ்வோம்! - நல்ல நோக்கம் பலவும் தேடிப் பெறுவோம்!**

பினையும் கடன் கொடுத்தவர்கள் எடுத்துக்கொண்டால் கடன் வசூலாகாது என்று குறிப்பிடும் குறை நீங்கிவிடும். உதாரணமாக எங்கள் தென்சென்னை உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் தன் சொந்த நிதியில் இருந்து, அங்கத்தினர்கட்கு தொழில் கடன் வழங்கியது. அந்த சங்கத்தின் பணியாளர்கள் தினம் அங்கத்தினர்களை அணுகி, தவணை தொகையினை விட அதிகமாக வசூல் செய்கின்றார்கள். இந்நிலையினால் மேலும் மேலும் அச்சங்கம் தன் நிதியில் இருந்து அங்கத்தினர்களுக்கு கடன் வழங்கி வருகின்றது. தென்சென்னை உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் போன்ற அனைத்து சங்கங்களும் முன்னேறினால் ஒட்டுமொத்தமாக மீனவர்கள் பொருளாதாரத்தில் உயர்வு அடைவார்கள் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்தே இல்லை.

முன்பு நான் குறிப்பிட்டது போன்று மீனவர்களும், தன் கடமைகளை உணர்ந்து பொறுப்புடன் செயல்பட்டால், நல்ல நிலையை அடைய நம் தமிழகத்தில் நல்ல வாய்ப்பு உள்ளது. மாநில, மத்திய அரசுகளும் விவசாயத்திற்கு முக்கிய பங்கு தருவது போல், மீன்பிடி தொழிலை பெருக்குவதற்கும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மூலமும். மீன்பிடி உபகரணங்களை மானிய விலையில் வழங்க வேண்டும். இதற்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களும் மீனவர்களுக்கென்று தங்கள் நிதியில் 25 விழுக்காட்டையாவது ஒதுக்க வேண்டும். அதனை தமிழகம் முழுவதும் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டும்.

முன்பெல்லாம் மீனவர்களுக்கு வலை முடிக்கும் நூல், வலை. கட்டுமரம், படகு போன்றவைகள் வாங்குவதற்கு அரசு மானியம் வழங்கி வந்தது. அது தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளது, மீண்டும் அரசு மானியம் வழங்கினால் மீனவர்கள் வாழ்வு வளம்பெற உதவியாக இருக்கும்.

கடல் கொந்தளிப்பினாலோ, அல்லது கடலின் அடியில் உள்ள மலை, பாறை போன்றவைகளாலோ கட்டுமரம், வலை, படகு போன்றவைகளுக்கு ஏற்படும் சேதத்திற்கு அரசு உதவித் தொகை அளித்தால் மீனவர்களின் கஷ்டங்கள் நிவர்த்தி அடையும்.

கடைசியாக, தமிழகத்தில் மீன்பிடி வலை முடிக்கும் இயந்திரம் அதிகமாக இல்லை. இதனால் மீனவர்களுக்கு தேவையான அளவு கிடைக்கவில்லை. இதனால் அதிக விலை


**குறளை தினமும் படித்திடுவோம்! நம்**
**குலத்தோர் உயர உழைத்திடுவோம்!—**

கொடுத்து வலைகள் வாங்க வேண்டிய நிலை உள்ளது. இக்குறையை போக்குவதற்கு நல்ல நிதி நிலை உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு, அரசே மீன்பிடி வலை முடிக்கும் இயந்திரம் மானிய விலையில் வாங்கித் தந்தால், தமிழக மீனவர்களுக்கு, குறைந்த விலையில் தரமான வலைகள் கிடைக்கும் என்பதில் 'அய்யம்', இல்லை.

ஆக, இப்போது கூறியவைகளை மீனவர்களுக்கு அரசு செய்யுமானால்-மீனவர்கள் வாழ்விலும் வசந்தம் மலரும்.

வணக்கம்!





**22. 1. 1982-ஆம் தேதி** வெள்ளிக்கிழமை அன்று தொலைக்காட்சி (டெலிவிஷன்) மூலம் மீன் துறை இயக்கு னர் திரு. சி. செல்லப்பன் ஐ. ஏ. எஸ்., அவர்களுடன், தென் சென்னை உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கத் தலைவர் ஜெ. பாலன் அவர்கள் நடத்திய உரையாடல்.

**திரு சி. செல்லப்பன் ஐ. ஏ. எஸ்:**

கடல் மீனவம், உள்நாட்டு மீனவம் என்று இரண்டு வகை உண்டு. அதில் நீங்கள் உள்நாட்டு மீனவத்தை ப றி பேசலாம்

1,600 டன் மீன், உள்நாட்டில் பிடிக்கிறார்கள். நல்லவித மீன் குஞ்சுகளைவிட்டு மீன்களைவளர்க்கிறார்கள். அதைப்பற்றி கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

ஜெ. பாலன்: உள்நாட்டு மீனவர்களுக்கு என்ன, என்ன திட்டம் வைத்து உள்ளீர்கள்?

பதில்: உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் குஞ்சுகளை வளர்த்து வருகிறோம். அதை பிடிப்பதற்கு அவர்களுக்குத் தான் முன்னுரிமை. மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுத்த பிறகுதான், மற்றவர்களுக்கு உண்டு!

கேள்வி: ஏரியில் மீன் பிடிக்கிறார்கள். நீங்கள் வளர்க்கிற மீன் அது. அதைப் பிடிப்பதால் அவர்களுக்கு என்ன லாபம் கிடைக்கிறது?

பதில்: ஆமாம். மீன் பிடித்து அவர்களுக்குத் தான் கொடுக்கிறோம். அங்குள்ள கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். சிறு, சிறு இடங்களில் உள்ளதை அவர்களுக்கு கொடுக்கிறோம். மற்ற இடங்களுக்கு 1/3 பாகத்தைக் கொடுக்கிறோம்.

கேள்வி: ஏரி, குளம் பக்கத்தில் அதை சுற்றி 10, 20 குப்பங்கள் இருக்கிறது. அங்கு பிடிக்கிற மீன்களால் அங்குள்ளவர்களுக்கு பலன் உண்டா?

பதில்: 1/3 பங்கு கிடைக்கிறது. அதனால் பலன் அடைகிறார்கள்.

---

**உழைப்புக்குத் தகுந்த ஊதியமில்லை — நம் களைப்புத் தீரவா சாத்தியமில்லை?**

---

கேள்வி: ஏரி, குளங்களில் எப்படி மீன்களை வளர்கிறீர்கள்?

பதில்: ஏரியில் 6 வகையான மீன்கனள வளர்க்கலாம். ஒரு ஏக்கரில் 1,500 கிலோ கிராம் முதல் 2,000 கிலோ கிராம் வரையில் நல்ல மீன்களை வளர்க்கலாம். இதுபோல் 7 மாவட்டங்களில் இத்திட்டத்தை நடத்தி வருகின்றோம். திருச்சி, தஞ்சை, தர்மபுரி போன்ற மாவட்டங்களில் வளர்க்கிறோம்.

கேள்வி. ஏரி, குளம் ஏற்கெனவே உள்ள இடங்களில் வளர்க்கிறீர்களா? அல்லது புதியதாக உருவாக்குகிறீர்களா?

பதில்: பழைய இடங்களில் உள்ளதை தூர் எடுத்து, கரைகள் இடிபடாமல் இருக்கவும் 'அதைச்சுத்தம் செய்து மீன்களை வளர்க்கிறோம்.

கேள்வி: மீன் குஞ்சுகளை எப்படி வளர்க்கிறீர்கள்?

பதில். மீன் முட்டையில் இருந்து நவீன முறையில் ஊசி போட்டு மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறார்கள். ஆண்டுக்கு 2 கோடி மீன் குஞ்சுகளை வளர்க்கிறோம்.

கேள்வி; ஏரிகளில் மீன் பிடிக்கிறார்கள். அவர்களுக்கு பங்கு தருகிறீர்களா, வேறுவகையில் லாபம் அடைகிறார்களா? வலை, மரம் போன்ற வகைகளில் ஏதாவது உதவிகள் செய்கிறீர்களா?

பதில்: உண்டு. (ஒருங்கிணைந்த செயல்பாட்டு திட்டம்) என்று சொல்வார்கள். அதில் வலை, மரம் வாங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

கேள்வி: அதை யாரிடம் கேட்டுப் பெறலாம்?

பதில் பஞ்சாயத்து அதிகாரிகள், யூனியன் மாவட்ட அதிகாரிகள் ஆகியோரை அணுகி கேட்டால் அந்த திட்டத்தைப் பற்றி சொல்லுவார்கள்.

---

**சிங்காரவேலர் போல் சிறந்திட வேண்டும்! திறனில் சிறந்தவர் பலபேர் மலர்ந்திட வேண்டும்!**

---

கேள்வி: மீனவர்கள் குடி இருக்கும் இடங்கள், அரசாங்க நிலம், தனியார் நிலம், மற்ற இலாக்காவினர் நிலங்களில்வீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்கள். அந்த இடத்தை பட்டா கொடுக்கணும். அதற்கு தாங்கள் வழி வகைகள் செய் வீர்களா?

பதில்: அரசாங்க நிலமாக இருந்தால், அதை பட்டா கொடுக்கலாம் என்ற ஆணை உள்ளது. எப்படி என்றால். அரசு நிலங்களில் குடி இருந்தால், அந்த இடம் ஆட்சேப கரமாக இல்லை என்றால், அந்த இடத்தை பட்டா கொடுக்கலாம். அல்லது மர்ற நிலமாக இருந்தால் நில ஆர்ஜிதம் என்ற வகையில் அதை வாங்கித்தரலாம். அதில் 1/3 பங்கு மீனவர்கள் கொடுக்க வேண்டும், இரண்டு பங்கு இலாகா தரும்.

கேள்வி: தனிப்பட்டவர் கேட்டால் அதை அரசு நிர்ணயிக்கின்ற விலை 30, 32 ஆயிரம் என்ற வகையில் எந்த விலை நிர்ணயிக்கிறார்களோ, அந்த விலையில் வாங்க வேண்டும். நீங்கள் வாங்கித் தந்தால். குறைந்த விலையில் இருக்கும் 100, 200 ஆண்டுகள் இருக்கிறார்கள். அந்த இடத்தை அவர்களுக்கே நீங்கள் வாங்கித் தந்தால் குறைந்த விலையில் கிடைக்கும்.

பதில்: வாங்கலாம். சம்பந்தப்பட்ட இலாகாவில் சொல்லி வாங்கித் தரலாம். அதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை,

கேள்வி: மீன். இறால் போன்றவற்றை வளர்க்க இடம் இல்லீங்களே!

பதில்: இருக்கே. கடலோரமாக இந்த மாதிரி இடங்கள் 16.000 ஏக்கர் நிலம் உள்ளது. இந்தமாதிரி இடங்களில் இறால் வளர்க்கலாம். இரண்டு முறை ஆண்டுக்கு இறால் வளர்க் கலாம். ஒரு ஏக்கரில் 1 டன் இறால் வளர்க்க முடியும்.

கேள்வி: இறால் வளர்ப்பில் சர்க்கார் வெற்றி பெற்று இருக்கிறீர்கள். தனியார் யாராவது வெற்றிப் பெற்று இருக்கிறார்களா?

பதில்: தஞ்சை மாவட்டத்தில் செய்து இருக்கிறார்கள். முக்கிய

---

அறியாமையைப் போக்கவே அணிவகுப்போம்;
அநியாயம் நீங்கவே வழிவகுப்போம்!

---

மாக இந்த இறால் வளர்ப்புத் திட்டம் எல்லாம் மீனவர் கூட்டுறவு சங்கம் மூலம் வளர்க்கலாம் என அரசு ஆணை யிட்டு உள்ளது.

கேள்வி: இந்த மாதிரி இடங்களை மீனவர்கள் மீன் இறால் வளர்க்க முடியாமல் தனியார்கள், வசதி படைத்தவர்கள் உப்பு விளைவிக்கிறார்கள். ஆகவே, மீனவர்களுக்கு நிலம் கிடைப்பது இல்லை.

பதில்: இல்லையே. மீனவர் கூட்டுறவு சங்கம் கேட்டால், இந்த இடத்தை நாங்கள் நிச்சயமாக வாங்கி தருகிறோம்.

கேள்வி: குறிப்பாக தென்னாற்காடு மாவட்டம் கற்பாணி குப்பம்; வசங்குப்பம் போன்ற பகுதியில் மீன் வளர்க்கின்ற இடங்களில் பணம் வசதி படைத்தவர்கள் ஆதிக்கம் செய்துள்ளார்கள். அந்த இடத்தை கேட்டால் வாங்கித் தருவீர்களா?

பதில்: நிச்சயமாக வாங்கித் தருகிறோம்.

கேள்வி: மீன் பற்றாக்குறை உள்ளதாக, இல்லை. மீன் உற்பத்தி நிலையம் உள்ளது அதில் அதிகப்படியான மீன் உற்பத்தி உள்ளதா என்றால் இல்லை. பற்றாக்குறை தான் உள்ளது.

பதில்: நிறைய உள்ளதே, கணக்கு எடுத்துப்பார்த்தால் அதிகம் உள்ளது. மூன்றரை லட்சம் ஹெக்டே நீர் பரப்பு உள்ளது. இதில் கிட்டத்தட்ட 30,000 டன் மீன்களை பிடிக்கிறோம். அடுத்த 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் அதை 60,000 டன்-ஆக உயர்த்த திட்டம் தீட்ட உள்ளோம். இதனால் பல திட்டங்கள் வைத்து உள்ளோம். குறிப்பாக செங்கை மாவட்டத்தில் ஏரிகளில் கரைகட்டி மீன் வளர்ப்புப் பண்ணை உருவாக்க இருக்கிறோம்.

கேள்வி; ஏரி, குளம் போன்றவைகளில் அதிக மீன் உற்பத்தி என்று சொல்லுகிறீர்கள், ஆனால், மீனவர்களுக்கு அதிகம்

---

**இன்று நாம் ஒதுக்கப்படுகிறோமோ?**
**இல்லை நாம் ஒதுங்குகின்றோமோ?**

---

லாபம் கிடைப்பது இல்லை என்றுதான், நான் நினைக்கிறேன்.

பதில்: இருக்கு. சுமார் ஒரு ஏக்கரில் ஒன்றரை டன் மீன்களை பிடிக்கிறார்கள்.

கேள்வி: வெளிநாட்டுக்கு அதிகமீன்கள்ஏற்றுமதிசெய்கிறீர்களா?

பதில்: இல்லை. தற்போது இறால் தான் ஏற்றுமதி செய்கிறார்கள்.

கேள்வி: இறால் அதிகம் விலையாக உள்ளதால் இறாலை வெளிநாட்டுக்கு அனுப்புகிறோம். மற்றபடி நமக்கே தேவையான மீன் கிடைக்கவில்லை என்று தான் நான் நினைக்கிறேன்.

பதில்: இல்லை. தமிழ் நாட்டில் சுமார் ஆண்டுக்கு இரண்டரை லட்சம் டன் மீன்கள் கிடைக்கிறது. உள்நாட்டில் கிட்டத்தட்ட 20,000 டன் கிடைக்கிறது. அதனால் தான் தமிழ் நாட்டில் மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கிட்டத்தட்ட 40 இடத்தில் மீன் விற்பனை நிலையம் வைத்து உள்ளோம். அதே போன்று, திருச்சி, கோவை போன்ற இடங்களில் வைத்து இருக்கிறோம்.

கேள்வி: அதே போன்று பங்குக்களை எங்கள் மீனவர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுத்தால் நாங்கள் நல்ல முறையில் நடத்துவோம். எங்களுக்கும் வேலை கிடைக்கும்

பதில்; தரலாமே! இப்போது தலைமைச் செயலகத்தில் கூட்டுறவு சங்கம் தான் வைத்து உள்ளது.

கேள்வி: அது பெடரேஷன் வைத்து உள்ளது. எங்களில் நல்ல செயல்படுகிற அல்லது செயல்பட முன்வர இருக்கும் சங்கங்களுக்கு இடம் கொடுப்பீர்களா?

---

**எங்கும் நம்மவர் திறன் சொல்ல வேண்டும்!**

**எதிலும் நாம்தான் நிறைந்திட வேண்டும்!**

---

பதில்: அப்படி யாராவது வந்தால் கொடுக்கலாம்.

கேள்வி: இப்போது 'தஞ்சை' 'நெல்லை' போன்ற கப்பல்களை கொடுத்தால் மீன்கள் அதிகம் பிடிக்க வாய்ப்பு இருக்குமே?

பதில்: 'தஞ்சை' 'நெல்லை' கிட்டத்தட்ட 50 லட்சத்திற்கும் அதிகமாகிறது.

கேள்வி: ஆம் சார். மேல் நாடுகளில் முன்னேற வாய்ப்பு உள்ளதே. அதே போன்று இங்கும் முன்னேற வாய்ப்பு வராதா?

பதில்; அது கஷ்டம். அதற்குத்தான் 30, 32... அடிகளில் படகுகள் கொடுக்கப்படுகிறது.

கேள்வி: அதனால் தான் கட்டுமரம், விசைப்படகுகள் தகராறுகள் வருகின்றது.

பதில்: இறால் பிடிக்கிற இடத்தில் தகராறு வருகிறது. கில் நெட் போடுகிற இடத்தில் சண்டை வர வாய்ப்பு இல்லை.

கேள்வி: கில்நெட்டுக்கள் கூட கரையிலே போடுகிறார்கள், அங்கேயும் சண்டைகள் வருகிறது. அந்த மாதிரி தகராறுகள் வராமல் இருக்க வேண்டுமானால் பெரிய கப்பல்களை வாங்கித் தந்தால் நல்லது.

பதில்: நீங்கள் சொல்லுவது நல்லது தான்! பார்க்கலாம்; முயற்சிக்கலாம்!

நன்றி, வணக்கம்!



# நம்இனத்தோன்றல்கள்

**தளபதி பா. ஜீவரத்தினம்:** இவர் சென்னையில் பிறந்த மீனவத் தலைவர். ''கடல் கடலாளிக்கே'' என்ற சங்கநாதத்துடன் கடற்கரை மீனவ கிராமங்களுக்கெல்லாம் சென்று மீனவ மக்களின் எழுச்சிக்கு மிகவும் அரும்பாடு பட்டார். இவரின் பேச்சாற்றலும் சிந்தனைத் திறனும் இன்றுள்ள அரசியலாரை நடுங்க வைத்தன. தற்கால தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுடன் சமமாக கருதக் கூடிய பேரறிவாளர். மேன்மை தாங்கிய இங்கிலாந்தின் அரசி எலிசபெத்திற்கு, மீன் உருவம் பொறித்த தங்க மோதிரம் பரிசளித்து, நீங்களும் நாங்களும் ஒரே இனம் என்பதனை நினைவூட்டி, பெரும் பாராட்டுப் பெற்றவர். இவரின் ஆற்றலால் தான் நமது இனம் இன்று ஓரளவிற்கு, அரசியல் அறிவு பெற்றுள்ளது என்றால் மிகையாகாது. தளபதி ஜீவரத்தினம் இன்று நம்மிடையே இல்லையாயினும் அவர் தந்த-சட்டமான மீனவன் என்ற நிலை கொண்டு, அவரால் பெற்ற எழுச்சிகொண்டு நாம் முன்னேற ஒன்றுபட்டாக வேண்டும். நமக்கென்று தனி மீன் கொடியினை உருவாக்கினார்.

**டாக்டர் முத்து கண்ணப்பர்:** இவர் சென்னைக்கருகில் உள்ள மீனவர் கிராமத்தில் பிறந்து தன் முயற்சியால் கல்வி கற்று படிப்படியாக எம்.ஏ. பட்டம் பெற்று, பேராசிரியராக

---

**அலைகடல் மீது நிலையற்ற வாழ்வு!—இந்தத்
தரையினில் ஏனோ முறையற்ற தாழ்வு?**

---

பணியாற்றி, முதன் முதலில் தமிழிலேயே 'நெய்தல் நில ஆய்வு' என்ற தலைப்பில் ஆராய்ந்து ஆராய்ச்சிக்கட்டுரை சமர்ப்பித்து, டாக்டர் பட்டம் பெற்றார். நம் இனத்தில் முதல் முதல் டாக்டர்பட்டம் பெற்ற உயர் பண்பாளர்; காங்கிரஸ் இயக்கத்தில் பற்றுக்கொண்டு முன்னாள் முதல்வர் திரு. பக்தவச்சலத்தின் அன்பிற்கு பாத்திரமாகி தமிழக மேலவை உறுப்பினராக பணியாற்றி உள்ளார். சிறந்த கருத்தாழம் கொண்ட இவர் நம் இனத்திற்கு சிறந்த வழி காட்டியுமாவார்,

**திரு. ஜேப்பியார்:** இவர் தமிழகத்தின் தென் கோடியில் பிறந்து, சென்னையினை தனது வாழிடமாகக் கொண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் அன்பிற்குப் பாத்திரமாகி நமது இனத்திற்குத் தொண்டு செய்வதற்காகவே, தமிழகமேலவைஉறுப்பினராகி சிறந்த பணியாற்றி வருகின்றார். இவரின் பணி நமது இனத்திற்கு மிகப் பெரிய மாறுதலை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**திரு ஜி. ஆர். எட்மண்ட்:** இவர் தமிழகத்தின் தென் கோடியில் பிறந்த மீனவர், வழக்கறிஞராகப் பட்டம் பெற்றவர்; மாண்புமிகு முதல்வரின் ஆணைப்படி, தமிழக அமைச்சரவையில் உணவு மற்றும் மீன்துறை அமைச்சராக பணியாற்றி நம் இனத்திற்கு வழிகாட்டியுள்ளார்.

**திருமதி லூர்தம்மாள் சைமன்:** இவர் தமிழகத்தின் தென்கோடியில் பிறந்த நம் இனத் திருவாட்டியாவார்கள். பச்சைத் தமிழரெனப் போற்றப்பட்ட திரு. கு. காமராசர் அவர்களின் அமைச்சரவையில் மீன்துறை அமைச்சராக இருந்து, நவீன முறை மீன் பிடிகலங்கள் மீனவர்கட்கு வழங்குவதில் ஆர்வம் காட்டி, தன்னால் இயன்ற வரை நம் இனத்திற்கு அரும் பாடுபட்டார்.

திரு. சந்திரசேகர் செட்டியார்: இவர் சென்னையில் பிறந்து தென்னகத்தின் பெரும் செல்வந்தராக இருந்த புதுவை செல்வராசு செட்டியாரின் மகளை மணந்தார்; புதுவை

---

**இன்று முதல் இணைந்திடுவோம்! புதிய**
**சான்று பல வரைந்திடுவோம்!**

---

மாநிலத்தின் அமைச்சராக இருந்தார்; நம் இனத்தின் முன்னேற்றத்திற்கு மிகவும் பாடுபடக்கூடிய பெருந்தகையாளர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்: வலம்புரிஜான் சென்னை வேதாசலம், போரூர் சீனிவாசன் ஆகிய நம் இனத்தவர்கள் தமிழக சட்டமன்றத்தின் உறுப்பினர்களாக பணியாற்றி, தங்களால் இயன்ற அளவு நமது இனத்தவர்கட்கு நன்மை பல புரிந்தார்கள். தற்போது திரு. பா. பொன்னுரங்கம் அவர்கள் தமிழக சட்டமன்ற நம்இன ஒரே உறுப்பினராக பங்காற்றி வருகின்றார்கள். புதுவை மாநிலத்தில் திரு. பஞ்சவர்ணம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார்கள்.

திருமதி இரமணிபாய் நம் இனத்தில் பிறந்து தாய்க்குலத்திற்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்து வருகின்றார். காங்கிரஸ் கட்சியில் தமிழ் மாநிலத்திற்கு முக்கியப் பொறுப்பு வகித்து வருகின்றார். நம் இன தொடர்பான காரியங்களுக்கு தன்னால் இயன்ற அளவிற்கு பணியாற்றி வருகின்றார்; இவரின் பணியினை நம் இனம் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கடலூர் இரகுபதி, கிள்ளை சுந்தரமூர்த்தி, வண்டிப்பாளையம் சுப்பிரமணி. வழக்கறிஞர் பட்டுக்கோட்டை மறவன் பிள்ளை, வண்ணை மாறன், இராயபுரம் லோகநாதன், கன்னியாகுமரி ஜோனாஸ், சிந்தாதிரிப்பேட்டை வேணுகோபால், கடலூர் நடராசன், சென்னை கபடராசு, லம்பாராசு, குப்புராசு இராசு, இரா. மு. மனோகரன் போன்ற நம் இனத் தோன்றல்கள் இன்றைய அரசியலில் பங்கு பெற்று பெரும் பணி ஆற்றி வருகின்றார்கள்.

## கல்வியில் நம் இனம்

தென்னாற்காடு மாவட்டத்தில் காட்டுமன்னார்குடியில் நம் இனப் பெரியவர், உயர்திரு மறைந்த வீ. பக்கிரிசாமி நாட்டார் அவர்களின் பெரு முயற்சியாலும் செல்வத்தாலும் நம் இனத்

அறியாமை போக்க அணிவகுப்போம்!
அநியாயம் நீங்க வழிவகுப்போம்!

திற்கென்றே மாணவர்கள் தங்கிப் படிக்க உணவில்லம் 1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தற்போது உயர்கல்வி கற்கும் மிகப் பெரும் கூடமாக சிறந்து விளங்கி வருகின்றது. இந்த இல்லத்தில் தங்கி படித்த நம் இனத்தவர்கள், இன்று தமிழ்நாடெங்கும் டாக்டர்களாகவும், பொறியாளர்களாகவும் அரசு அதிகாரிகளாகவும் பெரும் வியாபார நிபுணர்களாகவும் படித்து உயர்ந்தவர்களாகவும் சிறந்து விளங்குகின்றார்கள் என்றால் அதற்கு காரணம், ''சென்னை மாகாண பருவத ராஜ குருகுலம்'' தான்.

தற்போது இல்லத் தந்தையின் மைந்தர் திரு. ப.சிவஞானம் நாட்டார் அவர்கள் சிறப்புடன் நடத்தி வருகின்றார்கள். இத்தகு சீர்பெற்று வருகின்ற இல்லமும், பள்ளியும் மேலும் உயர நம்மாலான உதவியினை செய்தாக வேண்டியது கட்டாயம் ஆகும். இந்த இல்லம் சிறந்து விளங்குவதற்கு புதுவை திரு. வேங்கட நாட்டார், தஞ்சை திரு. மாரியப்ப மணியக்காரர், சிதம்பரம் ஆ. கனகசபை நாட்டார், கடலூர் திரு. கோதண்ட பாணி நாட்டார், இடைப்பாடி திரு வையாபுரி பக்தர், திரு. அருணாசல பக்தர், திரு. பெருமாள் பக்தர், கடலூர் குப்புசாமி, காட்டுமன்னார்குடி எஸ். சுந்தரம், வீ. சின்னத்தம்பி நாட்டா'ர் சென்னை திரு நாகராசன். திரு. க. பொன்னுசாமி நாய்க்கர் கொடிவேரி அங்கப்ப நாயக்கர், சென்னை திரு ஜி ஆர் அப்பராசு, மல்லிப்பட்டினம் வி. வெங்கடாசலம் ஆகியோர் பெரும் பொறுப்பேற்று நல்ல முறையில் நடத்தி வருகின்றார்கள். தஞ்சை மாவட்டத்தில் படித்த மாணவர்களுக்கும், படிக்கின்ற மாணவர்களுக்கும், வழிகாட்டியாக வாழ்ந்து வரும் பூம்புகார் திரு, என். நாராயணன் அவர்களின் சிறந்த பணியினை பாராட்டாமல் இருக்க முடியாது.

பேராசிரியர் முத்து குணசேகரன், பேராசிரியர் டாக்டர் கு. மோகனராஜ் போன்ற அறிவாளிகளும் கல்வித் துறையோடு இனத்திற்கும், வழிகாட்டியாகச் செயலாற்றி வருகின்றார்கள். இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கவியரங்கில் பரிசு பெற்ற நாகை மீனவன் நம் இனம் என்றுஎண்ணும்போது. நம்இனத்தை தலைநிமிரச் செய்யும்.

**நம்இனத் தலைவர்கள்:** நமது இனத்தில் பிறந்த தாழங்கு

**மீனிலும் முட்கள் அதிகம் தான் —மீனவன்**
**வாழ்விலும் துன்பம் அதிகம் தான்!**

பம் உலக நாத செட்டியார் அரசியலோடு நம் இனத்திற்கு அரும் பாடு பட்டுள்ளார். அவர் எண்ணூர் நகர சபைத் தலைவராக இருந்த போது மிகப் பெரிய தொழிற்சாலைகள் இந்த பகுதியில் அமையக் காரணமாக இருந்தார்.

இராயபுரம் அப்பையா நம் செட்டியார் இனத்தோன்றல் களில் மிகவும் சிறந்தவராவார் புயல்களில் நம் இன மக்கள் படும் துயரங்களுக்கு அரு மருந்தாக, தனது செல்வங்களை கொடுத்து பசியாற்றி மகிழ்விக்கச் செய்தார். இத்தொண்டினால் நம் இனம் மிகச் சிறந்த வள்ளலைக் கண்டது. இவரின் தமையன் திரு. க. மனோகரன் புதுவை தமிழ்நாடு மீனவர் பேரவையின் பொதுச் செயலாளராக பணியாற்றி வருகின்றார்.

தரங்கம்பாடி பி. ஆர். செல்வராசு, வழக்கறிஞர் தொழிலோடு தமிழ்நாடு மீனவர் கல்வி பண்பாட்டுக் கழகம் அமைத்து மீனவர் மத்தியில் எழுச்சியினை உண்டாக்கினார். கூழையாறு கோவிந்தராஜி, சென்னை திருவல்லிக்கேணி திரு. தண்டபாணி செட்டியார்; திரு. வி. எம். நடேச நாட்டார், விழுப்புரம் திரு. சாமிக்கண்ணு ஆகியோர் நம் இன வழிகாட்டியாவார்கள். திருவல்லிக்கேணி பி. ஆர், நாகராசன், எம். இராசு ஆகியோர் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராக இருந்து நம் இனம் உயர செயலாற்றினர்கள். திருவல்லிக்கேணி திரு. சாமிக்கண்ணு நொச்சிக்குப்பம் சிங்காரசெட்டியார், திருவான்மியூர். நாமதேவ்: ஆசிரியர், செயராம் செட்டியார். நீலங்கரை திரு. கண்ணன். கல்பாக்கம் லோகநாதன், மாமல்லபுரம் திரு. கோவிந்தராசு கடலூர் திரு. சண்முகம், கருப்பாணி கே. பி. எஸ். மணி ஆகியோர் சமுதாய தலைவர்களாக இருந்து நாட்டிற்கும் நம் இனத்திற்கும் தொண்டாற்றி வருகின்றார்கள்.

நீதித்துறை நமது இனத்தில் தோன்றி கல்வியில் ஒப்புயர் வற்றவராக விளங்கி வருகின்ற திரு. கே. சண்முகம் அவர்கள் நீதித் துறையில் செங்கோலோச்சும் தகுதி வாய்ந்த தனித்திறமை உள்ளவர். இவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக செம்மையாகப் பணியாற்றி வருவது பாராட்டத்தக்கது. திரு. கே. சுப்பிரமணி அவாகள் பிற்பட்ட நலக்குழு உறுப்பினராக இருக்

---

**மீனிலும் வெண்மை உண்டு — மீனவன்**
**மனத்திலும் வெண்மை உண்டு!**

---

கையில் நம்இனத்திற்கு எல்லா சலுகைளிலும் முன்னிலை பெற வாய்ப்பளிக்கும் வகையில் நம் இனத்தைஅரிசனஇனத்திற்குஉள்ள சலுகைகளைப் பெறும்வண்ணம் செய்ய வேண்டும் என மத்திய அரசுடன் வாதாடினார்.

மீனவ'இனத்தில் பிறந்துநம் தாய்திருநாட்டின் தலைநகரில் பிற்பட்ட வகுப்புக்குழுவின் உறுப்பினராக இருந்து மீனவ இனம் முன்னேற அரும்பாடுபட்டார். தற்பொழுது மத்திய அரசின் உள்ளாட்சித்துறையில் பொறுப்புள்ள பணியில் செயலாற்றி வருகின்றார், இவர் நம் இனம் முன்னேற- வாழ்வில் வளம் பெற மத்திய அரசுக்கு அவ்வப்பொழுது எடுத்துக்கூறி வருகின்றார்,

## மீனவ அடலேறு அம்பலவாணன்

1978ஆம் ஆண்டு செங்கை மாவட்டத்தில் பலகைத் தொட்டிக்குப்பம் என்ற பகுதியில் அம்பலவாணன் என்ற அப்பாவி.காவல் துறையினரால் சுடப்பட்டான். கட்டுமரக்காரர் களுக்கும், விசைப்படகுக்காரர்களுக்கும் சண்டை நடந்தது. இந்த சண்டை காரணமாக பெரும் திரளான, கட்டுமர மீனவர்கள் ஊர்வலமாக வந்தார்கள். அந்த கூட்டத்தை கலைக்க கண்ணீர்ப்புகை, தடியடி, பிறகு துப்பாக்கி சூடு நடந்தது. அதில் அம்பல'வாணன் என்ற மீனவன் மீது குண்டு பாய்ந்து உயிர் இழந்தான்.

இனத்தில் உயர்ந்தார் தாழ்ந்தார் என்ற எண்ணம் தோன்றியது. ஏழைகள் மீன் பிடிக்கும் இடத்தில் விசைப் படகுகாரர்கள் ஏன் மீன் பிடித்தார்கள் என்ற எண்ணம் ஏற்பட்ட காரணத்தால் இந்த வெறிச் செயல் நடந்தது. கட்டுமர மீனவர்களும், விசைப் படகு மீனவர்களும் சொல்லும் குறைகளும் ஏற்புடையது; நியாயமானவைதான் என்றாலும், இதை நிவர்த்தி செய்தாக வேண்டும். இதற்கு அரசு தான் தக்க உறுதியான தீர்வுகாண முடியும். அதற்கு அரசை முறையாக அணுக வேண்டும் தாக்குதலில் ஈடுபட்டால் இழப்பு

காற்றைக் கொண்டு கடல் கடப்போம்-நல்ல
கல்வியைக் கொண்டு உலகளப்போம்!

மினவர்களுக்குத்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, எந்தப் பிரிவினராக இருந்தாலும் சிந்தித்து ஒழுங்கான அணுகு முறையில் வெற்றி பெற வாய்ப்பு இருக்கிறதா என ஆராய்ந்து செயல்பட்டால், அம்பலவாணனை நாம் காப்பாற்றி இருக்கலாம். அன்னார் இழப்பு அவரை ஈன்ற அன்னையாருக்கும் உறவினர்களுக்கும் மாபெரும் இழப்பு. நம்மால் தற்போது அனுதாபம் சொல்ல முடியுமே அன்றி, பிரிந்த உயிரை மீண்டும் கொண்டு வந்துதர இயலாது. எனவே இந்தப்புத்தகத்தின் வாயிலாக மறைந்த அம்பலவாணன் அவர்களுககு அஞ்சலியை தெரிவித்து, நாம் ஒற்றுமையோடு ஒத்தகருத்தோடு செயல்படவேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

இந்திய சினிமாவில் சண்டை காட்சிகளை முதன் முறையாக புகுத்தி சினிமா உலகில் தலைசிறந்த நடிகர்களை உருவாக்கியவர், நமது இனத்தில் பிறந்த சென்னை சாண்டோ-ராஜ் என்பவர் ஆவார். தமிழக சினிமா உலகில் நகைச்சுவை அரசராக வீற்றிருந்த நகைச்சுவை வேந்தர் 'சந்திரபாபு'வும் நம் இனம் என்று அறியும்போது அனைத்துத்துறைகளிலும்நம் இனம் தலைசிறந்து விளங்கியது என்பது நன்கு விளங்கும.

நம் இனத்தோன்றல்கள் குறித்து விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்குதான் எழுத முடிகின்றது. நம் இனத்திற்காக உழைத்து மறைந்தவர்கள் ஏராளம்! தொடர்பில்லா காரணத்தால் அறிய முடியவில்லை. நம் இன தலைவர்கள் அனைவராலும் போற்றக்கூடியவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள் என்ற நிலை வரும்போது நம் இனம் உயர்ந்திருக்கும் என்பதில் அய்யமில்லை.



# முடிவுரை

இதுவரை கண்ட வரலாற்றில் இருந்து நம் இனமக்களின் மேன்மைகள் யாவை என்பதனை அறிந்து கொண்டோம். என்னால் எடுத்துக்காட்டியவைகள் மட்டும் அவர்களின் உயர் விற்கு சான்று அல்ல, இன்னும் கூறலாம். நான் இந்தப்புத்தகம் எழுதக் காரணமே, நமது இனத்திற்கு ஏதாவது கூற நினைத் தேன், அதனை இந்த புத்தகத்தின் வாயிலாக கூற முற் பட்டுள்ளேன் என எனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளேன். அது குறித்தும், இத்துடன் வரலாற்று சான்றுகளை நிறுத்திக் கொண்டு, நம் இனம் முன்னேற இன்னும் ஏதாவது தடைகள் உள்ளனவா? இல்லையா? என்பதைப் பற்றி சிந்திக்க விழை கின்றேன.

நமது இனத்திற்கு இன்றைய சமுதாயத்தில் என்ன பங்கு? அத்தகு பங்கினை நாம் முழுமையாகக் கைக் கொண்டோமா? பயன்படுத்திக்கொள்ள தெரியாமல் உள்ளோமா? அல்லது தேவையில்லை என்ற ஏகாந்தத்தில் உள்ளோமா? சான்றுக்கு சில சொல்லியாக வேண்டும், நமது இனம் எப்படி உள்ளது என்று, நம் நிலையினை நாம் அறிந்து கொண்டால், முன்னேற வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணியதால் இக்கருத்தினைக் கூற விரும்புகின்றேன்

நமது மீனவக் கிராமங்களில் இருந்து நம்இனத் தோழர்கள் மற்ற இடங்களுக்கு குடிபெயர்ந்து சென்று விடு

ஒற்றுமை ஒன்றே வேண்டும்-உலகில்
வேற்றுமை நீங்கிட வேண்டும்!

கின்றார்கள், வேறு இடங்களுக்குச் சென்றாலும் அத்தகு தோழர்கள், நம் இனத்திற்குச் செய்ய வேண்டிய, நற் காரியங் களைச் செய்யாமல் இருப்பது இல்லை. அத்தகு தோழர்களின் திறமையினை அந்தந்தக் கிராமங்களேபயன்படுத்திக் கொள்ளத் தக்க மனப்பக்கவம் நமக்கு வந்தாக வேண்டும். இத்தகு கருத்து முரண்பாடாக இருந்தாலும். நம்மை நாம் காப்பாற்றியாக வேண்டும். நமக்கு ஒரு கண் போனாலும் நம் இனத்தோழனுக்கு இரண்டு கண்கள் போனால் எனக்கு மகிழ்ச்சி தான் என்று பேதளிக்கின்ற மனத்தை நம் இனத்தினை விட்டு அகற்றியாக வேண்டும்.

அரசியலில் நம் இனத்தோழர்களுக்கு பங்கும் அதிகம், ஆர்வமும் அதிகம்; அது குறையல்ல. ஆனால் அரசியலால் நம் இனமும் நம் இனத் தோழர்களும் பெற்ற பயன் என்ன? என்ற பட்டியல் போட்டால், வெற்றிடம் தான் மிஞ்சும்! திராவிட பாரம்பரிய கழகங்களாலும், தேசிய இயக்கங்கள் என்று கூறிக்கொள்கின்ற கட்சிகளாலும் அத்தகு கட்சிகள் வளர நம் இன தோழர்கள் எத்தகு துன்பங்களை ஏற்றிருப்பார்கள்? நம் இனத்திற்குள்ளாக ஏற்படுகின்ற பூசல்கள் தொழில் அடிப் படையில் எழுவதனைவிட, அரசியல் அடிப்படையில் எழுவது தான் அதிகம். இதுபோன்று நாம் அழிகின்ற போது நம்மில் சிலர் அந்த அரசியலால் உயர்ந்தார்கள் என்றால் அது வரவேற்கத் தக்கது. அந்நிலை உண்டா? தமிழக மக்கள் தொகையில் 18 விழுக்காடுகள் உள்ள மீனவரினம் எந்துணை விழுக்காடுகள் அரசியலால் லாபம் பெற்றது எனக் கணக்கெடுத்தால், மிஞ்சுவது நம் இன தாய்குலத்தின் கண்ணீர் தான். இத்தகு ''கருவேப்பிலை'' நிலை மாற என் அருமை இனத்தோழனே! உனது பங்கு என்ன? நீ சிந்தித்து மற்ற மற்ற இனத்தோழர்களும் சிந்திக்க வழி காட்ட மாட்டாயா?

உதாரணமாக, தென் இந்தியாவின் முதல் பொது வுடமைவாதி- தொழிற்சங்கத்தினை முதன் முதல் கண்டவர் என்றெல்லாம் போற்றப்படுகின்ற நமது சிந்தனைச் சிற்பி 'சிங்காரவேலரின் தியாகங்களை, எந்த அரசியல் கட்சி மதிக்க

---

மீன் கொடி ஏந்திட வேண்டும்-மீனவன்
மேன்மை எய்திட வேண்டும்.

---

வேண்டுமோ, அந்த கட்சி மதிக்கவில்லை. காரணம் அவரின் பிறப்பும், நம் இனத்தின் புறக்கணிப்பும் ஆகும் என்பதில் எந்த கருத்து வேறுபாடும் இருக்க மாட்டாது; இவரை விட சிறந்த அரசியல் நோக்குக் கொண்டவர் திறமையான வாதத்தில் வல்லவர் வேண்டுமா? நம் சிந்தனைக்கு இதுவே ஒன்று போதும் என நினைக்கின்றேன்.

ஆட்சித் துறையில் நமது இனத்தின் பங்கு உரியனவாக உள்ளதா? இத்தகு கருத்தினை வலியுறுத்தினால் கிடைக்கும் பதில், எத்தனை பேர் உன் இனத்தில் படித்துள்ளார் கள்? உறுதியுடையவர்களாக உள்ளார்கள்? என்ற கேள்வி எழுவது திண்ணம். கேள்வி கேட்போருக்கு என்பதில் தற்போது தகுதியும் திறமையும் தான் ஆட்சியில் உள்ளதா? தகுதியில்லாதவர்களுக்கு பயிற்சி இருந்தால் திறமை தானாக வந்து விடும் என்பது இயற்கையின் தத்துவமல்லவா? ஆக, இது போன்று அரசியலாலும் ஆட்சியினாலும் எத்தகு பங்கும் இல்லாமல் கேட்பாரற்று கிடக் கின்ற நமது சமுதாயத்தினை எண்ணி நான் கலங்காத நாளில்லை. இந்நிலை மாற வேண்டாமா? படித்த, பண்புள்ள எனது இனத்த வர்களே! நீங்கள் சிந்திக்கும் நாள் எந்நாள்? தற்போதைய நிலை, ''இனத்திற்கு நீ என்ன செய்தாய்'' என்று கேட்கின்ற மனப் பக்குவம் அனைத்து மீனவர்கட்கும் வந்தாக வேண்டியகாலக் கட்டத்தில், கட்டாயமாக நிறுத்தப்பட்டுள்ளோம். எது எப்படி யானாலும் நமக்கு நாமே எதிரியாக உள்ளோம் என்பதைன ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும், இதில் எனக்கு எந்த வித வெட்கமும் இல்லை.


நாம் முன்னேறுவதற்கு படிப்பறிவு மட்டும் உதவும் என்பதில் எனக்கு கருத்து வேறுபாடு உண்டு. காரணம், படித்த இளைஞர்களின் போக்கில் எந்த வித மாற்றமும் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. இப்படி கூறுவதால் நான் படித்தவர் களுக்கு எதிரி அல்ல; சில வற்றை சொன்னால் தான் திருத்தம் ஏற்படும் என்ற நிலை உள்ளதால் கடமை உணர்வுடன் இதனை கூற விரும்புகின்றேன். மற்றைய சமுதாயத்தோடு ஒட்டிப் போகின்ற பழக்க வழக்கங்கள் நமக்கு வந்தாக வேண்டும்.

கல்வியில் நவீனம் வேண்டும்-மீன் பிடி
கலத்திலும் நவீனம் வேண்டும்.

தற்போது நம் இனத்திற்கு வேண்டுவதெல்லாம், இராணுவ விதியிலான கட்டுபாடு, கட்டுபாட்டுடன் கூடிய பண்பாடு, ஒருவரை ஒருவர் மதிக்கின்ற பண்பு, அடுத்தவர் கருத்திற்கு செவிசாய்க்கின்ற பரந்த மனது; ஒட்டு மொத்தமாக உலகோடு ஒட்டிப் போகின்ற பாங்கு, நமக்கு வந்தாக வேண்டும்.

இத்தகுகருத்துக்கள், கூர்மையாகஇருந்தாலும்தேவையானது. ஆகையினால் கூறுகின்றேன்- நாம் அனைவரும் ஒன்றாக வேண்டும் என்ற கருத்து புதியன அல்ல; வழிவழி வந்த நம்மவர்களால் வலியுறுத்தப் பெற்றவைதான். மற்றவர்களால் அறிந்த நம் இனத்தலைவர்கள் முதலில் இனத்தளவில், செயலளவில் ஒன்றாக வேண்டும்! அந்நிலை தான் நம்மை உயர்த்தும்! நம் இனத்தினைக் காக்கும்!

முற்றும்



# இந்நூல் எழுத பயன்படுத்திய நூல்கள்

திருக்குறள்

அகநானூறு

குறுந்தொகை

மதுரைக்காஞ்சி

சிலப்பதிகாரம்

இராமாயணம்

பெரியபுராணம்


திருப்புகழ்

சீவகசிந்தாமணி

சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்)

ஆசிரியர்

(டாக்டர். முத்துகண்ணப்பன்




# நெய்தல்

கடலும் கடலைச் சார்ந்த இடமுமே நெய்தல்.
உப்பு நீர் வயலில்

கட்டுமர உழவர்கள் செய்யும்

மீன்களின் அறுவடையே

நெய்தல் வாழ்க்கையின் அடிப்படையாகும்.


ஆர். ஆர். கம்பெனி,
மீன், இறால் கமிஷன் ஏஜண்ட்,
22, சிங்கண்ண செட்டி தெரு,
சிந்தாதிப்பேட்டை, சென்னை—2



தோழர்களே!

இந்தப் புத்தகத்தைப் படித்து முடித்து விட்டீர்கள். உங்களுக்கு மீனவ சமுதாயத்தைப் பற்றி ஒரு சிறிதேனும் தெளிவு பிறந்திருக்கும். மீனவர்கள் ஒற்றுமையாக வாழ உங்களாலான உதவியைச் செய்யுங்கள்.

இப்புத்தகம் என்னுடைய கன்னி முயற்சி. பிழைகள் இருப்பின் பேரறிஞர் அண்ணா வழியில் ''மன்னித்து மறப்பீர்களாக!''

இப்புத்தகத்திற்கு பரிவுரை வழங்கி, சிறப்பித்த மேன்மை மிகு நீதிபதி கே. சண்முகம் அவர்களுக்கு என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை உருவாக்க பல நூல்களும், முழு ஒத்துழைப்பும் நல்கிய நண்பர்களுக்கும், இப்புத்தகத்தை சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த, ஜேப்பியார் ஆப்செட், அச்சகத்தார்களுக்கும், இப்புத்தக வெளியீட்டு விழாக் குழுவினர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வணக்கம்

6-3-82 தங்கள் தோழன்

திருவல்லிக்கேணி. ஜெ. பாலன்.

WRAPPER PRINTED BY Jeppiar Offset Printers MADRAS-60[illegible]